www.padippakam.com

*ஜூன் 2002*

# செம்பருத்தி

MAJALAH BULANAN SEMPARUTHI

மலர் 5

PP 9823\4\2003 * வைகாசி-ஆனி * திருவள்ளுவர் ஆண்டு 2033

இதழ் 5

**செம்பருத்தி, இளந்தளிர் உறுப்பினர்கள் ஆகிவிட்டீர்களா?**

மலேசியத் தமிழர்களின் எழுச்சிக்குரலாய் ஒலிக்கும் செம்பருத்தி இதழை மாணவர் இதழான இளந்தளிர் இணைப்புடன் ஓராண்டுக்குப் பெற்றுக் கொள்ள உறுப்பியக் கட்டணம் R.M.36-00 மட்டும்தான். இன்றே உங்கள் உறுப்பியத்தை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

இளந்தளிர் இணைப்புடன் செம்பருத்தி

RM 2.00

கடந்த 27 ஆண்டுகாலம்
ஆயுதப் போராட்டம் நடத்தி
குருதி கொட்டி, வியர்வை சிந்தி,
உயிர்த்தியாகம்செய்து
புதிய நூற்றாண்டின் புதிய
உதயமாய்ப் பூத்திருக்கும்
கிழக்குத் தீமோர் மக்களுக்கு
செம்பருத்தி வாசகர் சார்பில்
நல்வாழ்த்தினைத் தெரிவித்துக்
கொள்கிறோம்! • (ஆ·ர்)



1988-ம் ஆண்டுமுதல் வீட்டுக்
காவலில் வைக்கப்பட்டிருந்த
மியன்மாரின் ஜனநாயகக்குயில்
ஆங் சான் சூகீ
விடுவிக்கப்பட்டுள்ளார்.
ஜனநாயகத்துக்கான புதிய
மாறுதலை
மியன்மார் மக்கள் எதிர்பார்த்துக்
காத்திருக்கிறார்கள்..



# பெண்களின் வெற்றிப் போராட்டம்!

## 20 தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது!

### இரண்டு ஏக்கர் நிலம்! RM20,000.00 செலவுத் தொகை! நீதிமன்றத்தில் சமரச ஒப்பந்தம்!




ஈப்போ, சத்தியசீலா (STRATHISLA) தோட்டப் பாட்டாளிகளுக்கு நீதிமன்றம் சட்டபூர்வமான இழப்பீடு வழங்கியுள்ளது. பதினாறு பெண்கள் மற்றும் நான்கு ஆண்கள் உள்ளிட்ட தொழிலாளர்குழு ஐந்து வருட கடுமையான போராட்டத்திற்குப் பிறகு வரலாறு காணாத வகையில் வெற்றிவாகை சூடியது.

தனியாரிடம் இத்தோட்டம் 1997ல் விற்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்படவில்லை என்று இறுதிவரை போராடிய 20 தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலமும், குடிபெயர் தொகையாக RM20,000.00 வழங்கவும் ஈப்போ உயர்நீதிமன்ற நீதிபதி டத்தோ ஹமிட் எம். போங் முன்னிலையில் தோட்ட மேம்பாட்டு நிறுவனமான PCBD ஒப்புக் கொண்டதையிட்டு போராட்டம் தொழிலாளர்களுக்கு ஒரு தெம்பைக் கொடுத்திருக்கின்றது. ஆறு மாத காலத்துக்குள் நிலப்பட்டா வழங்கப்படவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது!




60க்கும் மேற்பட்ட போலீஸ் புகார்கள்! கைதுகள், மறியல், போராட்டம் என்று தொழிலாளர்களைத் தோட்டத்தை விட்டு வெளியேற்றச் செய்த நடவடிக்கைகளைத் தொழிலாளர்கள் மன உறுதியுடன் எதிர்த்து போராட்டக் களத்தில் இறங்கி இன்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். இவர்களது போராட்டத்துக்கு அரசு சார்பற்ற நிறுவனமான 'அலைகள்' குழு தனது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தது.

இந்தப் போராட்டத்தில் முன்னணி வகித்த பெண்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஜோதி பெருமாள், பாக்கியலட்சும், ரெஜினா மற்றும் தேவமணி சாமிவேலு.

'போராடினால்தான் வெற்றி' என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டுள்ளது.









படிப்பகம்

www.padippakam.com



நிர்வாக ஆசிரியர்:
அந்தோணி சார்ல்ஸ்
B.Sc. (Hons) UKM
*
பொறுப்பாசிரியர்:
மணியம் சின்னப்பன் MBA
*
விற்பனை முகவர்கள்:
* மெந்தகாப் ஏஜென்சிஸ், கோலாலம்பூர்.
தொலைபேசி:
03-22821219

*சுபாணி (M) சென். பெர்.
தொலைபேசி:
013-5207830
*
சந்தா:
தொலைபேசி:
03-3810193 / 4
தொலை நகல்:
03-3810192
*
கணினி வடிவமைப்பு:
மு. முகிலன்
ச. உஷா
*
முகவரி:
SEMPARUTHI
PUBLICATIONS SDN. BHD.
Unit 2-6-8, Menara KLH
Business Centre,
No.2, Jalan Kasipillay
Off 2 1/2 mile,
Jalan Ipoh,
51200 Kuala Lumpur.

படைப்புகள் அனுப்புவோர் பெயர் முகவரியுடன் அனுப்ப வேண்டும். நகல் பிரதிகளைத் தயவு செய்து அனுப்ப வேண்டாம். பெயர் முகவரியின்றி வரும் படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:

SEMPARUTHI
PETI SURAT 10915
PEJABAT POS BESAR,
50728 KUALA LUMPUR.

# பல்கலைக் கழகங்களில் இந்திய மாணவர் அனுமதி!

உள்நாட்டு அரசுப் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் அனுமதிக்கான தகுதி அடிப்படை பற்றிய விவாதங்கள் இந்திய சமூகத்தினரிடையே பலத்த சந்தேகத்தை விதைத்துள்ளது.

பல்கலைக்கழக நுழைவு அனுமதி அரசு முன்பு அறிவித்துள்ள கோட்டா முறைப்படி நிறைவு செய்யப்பட்டிருக்குமானால் மலாய்க்கார மாணவர்களில் 55 விழுக்காட்டினராகவும் சீன மாணவர்களில் 35 விழுக்காட்டினராகவும் இந்திய மாணவர்களில் 10 விழுக்காட்டினராயும் இருந்திருக்க முடியும். இக்கோட்டா முறை சென்ற ஆண்டுவரை நிலை நிறுத்தப்பட்டிருந்த போதும் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை என்பது ஒரு புறமிருக்க,

இவ்வாண்டு உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி பயில்வதற்கு விண்ணப்பம் செய்த சீன மற்றும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்ற காரணத்தைச் சுட்டிக் காட்டி 25 விழுக்காடு சீன மாணவர்களுக்கும் 4.7 விழுக்காடு இந்திய மாணவர்களுக்கும் மீதி மலாய் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் அனுமதிக்கப்பட்ட 32,782 பேரில் 1530 பேர் மட்டுமே இந்தியர்கள். பல்கலைக்கழக அனுமதிக்காக மனுச்செய்தவர்கள் 3961 பேர். இவர்கள் STPM தேர்வு எழுதியவர்கள். இவர்களுள் 2537 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுள்ளவர்கள். ஆனால் இவர்களில் 1530 பேரே அனுமதி பெற்றனர். மீதி 1007 பேருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

"அரசாங்க உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் மாணவர் சேர்ப்புக்குப் பயன்படுத்தப்படும் தகுதி அடிப்படையிலானமுறை, இந்த நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் நியாயமானதாக இருப்பதை உறுதி செய்ய அம்முறை குறித்து அரசாங்கம் ஆய்வு மேற்கொள்ளும்" என்று பிரதமர் டாக்டர் மகாதீர் அண்மைய மஇகா மாநாட்டில் தெரிவித்துள்ளார். (தமிழ் நேசன் 20-5-2002)

"பல்கலைக்கழகங்களில் தகுதி அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்கும் நடைமுறையால் இந்திய சமுதாயத்துக்குக் குறைவான வாய்ப்புக் கிடைத்திருப்பது குறித்து யாரும் அதிக உணர்ச்சிவசப்பட வேண்டாம்" என மஇகா தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலு கேட்டுக் கொண்டுள்ளார். (மலேசிய நண்பன் 20-5-2002)

அதேவேளையில் அனுமதிபெற்ற 32,782 மாணவர்களில் சுமார் 12,000 (37%) மாணவர்கள் மெட்ரிகுலேசன் தேர்வுமுறையில் நுழைக்கப்பட்டுள்ளனர். இது தகுதி பெற்றதாகக் கருதப்பட்ட 2,557 பூமிபுத்ராக்களில் 50% அதிகமாகும்.

இவர்கள் உண்மையிலேயே தகுதிபெற்ற நிலையில் இருந்தால் பிரச்சனை வேறுவிதமாக மாறிவிடும். அதாவது பிரதமர் தகுதி அடிப்படையில்தான் இனி பல்கலைக்கழக நுழைவு என்றுசொல்லி ஒரேயொரு வருட காலத்தில் இவர்களின் நிலைமை இந்த அளவு முன்னேற்றம் அடையுமானால், இதே திறமையை வெளிப்படையாக வெளிக்காட்ட இவர்கள் ஒரே மாதிரியான நுழைவு பரிட்சையை எழுத வேண்டும். அதையடுத்து, இந்த அளவு திறமை கூடியிருக்குமானால், மெட்ரிகுலேசன் தேர்வுகளை எழுத மற்ற இன மாணவர்களுக்கும் வாய்ப்புக்களை தர வேண்டும்.

STPM தேர்வுக்கு இரண்டு வருடம் படிக்க வேண்டும். அதே வேளையில் மெட்ரிகுலேசன் பயில தற்போது செமஸ்டர் விதிமுறையில் ஒரு வருடம் மட்டுமே. எப்படி இவை இரண்டும் ஒரே தர மாணவர்களை உருவாக்க இயலும்?

கல்வி அமைச்சு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் கதையாக அல்லவா இது உள்ளது!

இந்நிலையில், சோற்றுக்கே திண்டாடும் நமது சமூகம் (காரணம், நமது பொருளாதார பலம் வெறும் 1.5% மட்டுமே, இதுவும் உயர்நிலை இந்தியர்களின் கைகளில் உள்ளது. சுமார் 80% இந்தியர்களுக்கு, கல்வி என்பது சோற்றுப்பிழைப்பே!) இந்த தகுதி முறை நுழைவால், ஒரு பலத்த அடி வாங்கியுள்ளது.


மேலும், இது மஇகாவுக்கு, ஒரு பெரிய மானப் பிரச்சினையாகவும் உருவாகியுள்ளது. இந்தியர்களை ஒட்டு மொத்தமாக குத்தகைக்கு எடுத்துவிட்ட ம.இ.கா, இந்த பிரச்சினையை தீர்க்க பலத்த நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டத்தக்கது. குறிப்பாக டத்தோ ஸ்ரீ சாமிவேலு , அமைச்சரவையில் பேசியிருப்பதும், தொடர்ந்து போராடுவதும், "அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்" என்பதை மீண்டும் நம்மிடையே வலியுறுத்தி உள்ளது.

"இந்தியர்கள், இன்னும் தீவிரமாகப் படிக்க வேண்டும்" என்ற ஆலோசனை, நமது அழுகை அவர்களுக்கு எட்டவில்லை என்பதையும், நாம் நன்றாகவே ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதையும் காட்டுகிறது.

உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் நமது மாணவர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது மிகவும் கண்டனத்திற்குரியது. இது இந்தியர்கள் பாரிசான் அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கையை வெகுவாகவே சோதிக்கும் என்பதை மஇகா நன்றாகவே உணர்ந்துள்ளது. உடனடி தீர்வுகள் கிட்டும் என நம்புவோம்.

தகுதியுள்ள மாணவர்களுக்கு அனுமதி கிடைக்க வேண்டும் என்பதை வலுயுறுத்த விரும்புகின்றோம்.

## பலத்த அடியோ..




செய்தி: " ...யார் பலசாலி எனப் பார்ப்பது தேசிய முன்னணியின் நோக்கமல்ல...." - டத்தோஸ்ரீ ச.சாமிவேலு
வானொலி 6, காலை 8.00மணி. தொகுப்பு: ஆறுமுகம் வெள்ளைச்சாமி



பக்க அன்பளிப்பு : T.S எண்டர்பிரைசஸ், போக்குவரத்து சேவைகளுக்கு, தொலைபேசி: 012-2142066

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்பொழில், கெலாங் பத்தா, ஜோகூர்.

கே: செம்பருத்தி ஜூன் 2000 இதழில் கவிஞர் அறிவுமதி அவர்கள் வழங்கிய நேர்காணலில் "வருமானம் போனாலும் தமிழ்மானம் போகக் கூடாது" எனச் சொல்லிவிட்டு 'அள்ளித் தந்த வானம்' திரைப் படத்தில் "கனவுல நீங்க கடிச்சு வைச்ச காயம் வலிக்கிறதே" எனப் பாடல் எழுதியுள்ளார். என்னைப் பொறுத்தவரை இது வருமானத்திற்காக தமிழ்ப்பண்பின் மானம் விற்பனை எனக் கருதுகிறேன். தங்கள் கருத்து என்ன?

**ப: கனவுல கடிச்ச காயத்தில்தான் தமிழின் மானம் இருக்கின்றது என்றால் அது மானம்தானா என்கிற சந்தேகம் எனக்கு எழுகின்றது. கம்பனும், காளிதாசனும், கண்ணதாசனும் சொல்லாததைப் பின்னால் வந்த எந்தக் கவிஞராலும் சொல்ல முடியவில்லை. பாரதி, பாரதிதாசன் போன்ற சமுதாயக் கவிஞர்கள் கற்பனைகளிலும் அழகியலும், காதலும் பொங்கி இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. அறிவுமதி தமிழ் மானத்தை விற்பனை செய்யும் கவிஞரல்ல. தமிழ் மானத்திற்கு ஆடை கட்டி பார்க்கின்ற தன்மானக் கவிஞன் என்றுதான் இன்றும் நான் நினைக்கின்றேன். தன் கொள்கைக்கான தவறான கருத்துக்களைத் தரும் ஏராளமான பாடல் வாய்ப்புகளை அவர் இழந்துள்ளதை நானறிவேன்.**

ப. ஹேமாதேவி, கோலாலம்பூர்.

கே: கணவன் மனைவி இருவருக்கும் தாழ்வு மனப் பான்மை இருந்தால் வாழ்க்கை எப்படி இருக்கும்?




கவிதா கலைமணி, சிலிம் ரீவர்.

கே:நம்மிடையே வசூலிக்கப்படும் நன்கொடைகள் நம்மை வாழ வைப்பதற்கா?அல்லது சுரண்டவா?

**ப: கடந்த காலங்களில் வசூலிக்கப்பட்ட நன்கொடைகள் உங்களை வாழ வைத்திருந்தால் - இதுவும் வாழ வைக்கும் என நம்புங்கள். ஏற்கனவே சுரண்டப் பட்டிருந்தால் இதுவும் சுரண்டல்தான்.**



டத்தோ ஸ்ரீ சாமிவேலு | டத்தோ கேவியஸ் | டத்தோ பண்டிதன் | கவிஞர் அறிவுமதி

**ப: அதை விட்டொழித்தால் தான் வாழ்வின் உண்மை அர்த்தம் புரியும்.**

கே: ஆன்மா பெரிதா? அறிவு பெரிதா?

**ப: ஆன்மாவுக்குள் அறிவு அடக்கம். அறிவுக்குள் ஆன்மா அடக்கம். எது பெரிது என்பதை நீங்களே கண்டறியலாம்.**

திருமதி சு. சரசுவதி செல்வராசு, சுங்கை.

கே: வன்முறை பிரச்சாரத்தை ஒழிக்கவும், நமது தமிழ்க் குமுகாயத்தில் ஒற்றுமையுணர்வை ஒளிரச் செய்யவும் அரசு ஒதுக்கியுள்ள இரண்டு கோடி வெள்ளியில் YSS என்ற அமைப்பு முறையாகச் செயல்படுமா?

**ப: செயல்படும் என்று நம்புவோம். நாளிதழ்களில் YSS நடத்தவிருக்கின்ற நிகழ்வுகளின் பட்டியலைப் பார்த்தால் நல்லது நடக்கும் என்று தெரிகிறது. ஆனால் நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டியவர்களான இளம் தலைமுறையினரைக் கவர்வதில் YSS இன்றும் வெற்றி பெறவில்லை.. அதனால்தான் சந்தேகம் எழுகின்றது.**

கே: 'செம்பருத்தியும் இளந்தளிரும் மூன்று வெள்ளிக்கு விற்பனைக்கு வந்திருந்தாலும் தாழ்வில்லை. வாங்க அணியமாக உள்ளோம். ஏன் இப்படி ஒரு விலைக் குறைப்பு?

**ப: அதிக வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் எமது முக்கிய நோக்கம். அதில் வெற்றியும் அடைந்துள்ளோம். விற்பனை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இது இன்னும் அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு மலேசியத் தமிழர்களின் கரங்களிலும் செம்பருத்தி தவழ வேண்டும். அதற்கான பணியில் தங்கள் ஆதரவு நன்கு மகிழ்ச்சி தருகிறது. நன்றி சகோதரி.**

கே: தொண்டனுக்கும் உண்டு உண்ட களைப்பு என்பது ஒருபுறமிருக்க தலைவர்கள் கொழுத்துக் கொண்டே போகிறார்களே?

**ப: மக்களுக்காக உழைத்து உழைத்து உருக்குலைந்து போய் இருப்பதாக அல்லவா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.**

வளர்மதி, ஈப்போ.

கே: காதல்தான் கவிஞரை உருவாக்குகின்றது என்பதில் உண்மை இருக்கிறதா?

**ப:காதல் மட்டும்தான் கவிதை என்கிற வாதம்கூட நம்மிடையே உண்டு. காதலுக்கும் கவிதைக்கும் பல சமயங்களில் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்திருக்கிறது. "காதலிக்காதவன் கவிஞன் இல்லை" - கவிஞன் காதலிக்காமல் இருக்க முடியாது - போன்ற வார்த்தைகள் தங்களை இப்படிச் சிந்திக்கத் தூண்டி இருக்கலாம். வரலாற்றில் காதலித்தவர்கள் கவிஞர்களாக இருந்திருக்கிறார்கள். காதலித்தவர்கள் கவிஞர்களாக இல்லாமல் இருந்திருக்கிறார்கள். 'காதல் தீ' சில கவிஞர்களைச் சுட்டெரித்திருக்கிறது. காதல் சில கவிஞர்களைத் தென்றலாக்கி ஆறுதல்படுத்தியிருக்கிறது.**

விக்கிரமாதித்தன், ஆலம் மேகா.

கே: கடந்த **26-02-2002** அன்றைய 'ஸ்டார்' நாளிதழை இத்துடன் இணைத்துள்ளேன். அது பெட்டாலிங் ஜெயாவில் அமைந்துள்ள 'ஸ்டாம்போர்ட்' (Stamford) கல்லூரியின் விளம்பரம். அக்கல்லூரியின் முகப்பு 'வாண்டோ' (Vanto) கல்லூரி போலத் தென்படுகிறது. தங்கள் செம்பருத்தி இதழில் Vanto கல்லூரிக் கட்டடம் Stamford கல்லூரிக்கு வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக எழுதியிருந்தீர்கள். நமது இனக் கட்டடத்தில் வாடகைக்கு இருக்கும் தனியார் கல்லூரி சுங்கைப்பட்டாணியில் மஇகா பல்கலைக் கழகம் வழங்க இருக்கும் பட்டப்படிப்புகளை வழங்க இருக்கிறது. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப: சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் நீங்களே சொல்லிவிட்டு என்னை வம்பில் மாட்டிவிட எண்ணி விட்டீர் போலும். மலேசிய நண்பன் 26-02-2002 (நீங்கள் சொன்ன அதே நாள்) இதழில் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் மஇகா பல்கலைக்கழகம் பற்றி குறை கூறுகின்றவர்களைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் என்பதைப் படித்துப் பாருங்கள். அதன் பிறகு ஒரு முடிவுக்கு வருவோம். நான் கண்ணில்லாத குருடன் ஆக விரும்பவில்லை. விரைவில் வரவிருக்கும் 'பாபா' படத்தைப் பார்க்க வேண்டுமே!**

"இந்தத் திட்டத்தை மலேசிய இந்திய சமுதாயம் பார்த்தும் பார்க்காதது போல் இருக்கிறது. இது கெட்டிக்காரத்தனம் என்று அவர்கள் நினைக்கலாம்.

எடுத்த காரியத்தை முடிக்காமல் விடமாட்டோம். மஇகா கட்டி வரும் பல்கலைக்கழகத்திற்கு நாடு முழுவதும் நல்ல வரவேற்புக் கிடைத்து வருகிறது.

இதற்கு முன்பு டேப் கல்லூரி கட்டினோம். அதற்கும் யாரும் பணம் கொடுக்கவில்லை. இப்போது இந்த ஆசிய மருத்துவ அறிவியல் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்திற்கும் பணம் கொடுக்காமல் இருந்து விடுவோம் என்று பலர் நினைக்கின்றனர்.

யார் யார் பணம் கொடுத்தார்கள் என்ற பட்டியல் நம்மிடம் உள்ளது.

பணம் கொடுத்தவர்களுக்குத்தான் முதற்சலுகை வழங்கப்படும்.

தன்னுடைய சமுதாயத்திற்கு உதவ எவன் ஒருவன் முன்வர வில்லையோ அவனுக்கு இந்த சமுதாயம் உதவாது.

தன்னுடைய சமுதாயத்தின் சீர்கேட்டை காண எவன் ஒருவன் மறுக்கிறானோ அவன் கண்ணில்லாத குருடன் ஆவான்.

எவன் ஒருவன் இந்த ஏழை சமுதாயத்தை மதிக்காமல் இருக்கிறானோ அவனுக்கு என்றும் எதிர்காலமே கிடையாது."

(மலேசிய நண்பன் - 26-2-2002)

### முயற்சி



ஒவ்வொரு மனிதனும் செத்துப் போவது உண்மை தான் என்றாலும் அவனோடு அவனது முயற்சியும் செத்துப் போய் விடுவதில்லை. அதுவும் அவனது எண்ணத்தை அவனால் கூடுமான அளவுக்கு அவனைச் சூழ்ந்த மக்களிடையே பரப்பி விட்டால், அந்த வர்ணம் ஒரு போதும் அழியாது! அடக்கி விடவும் முடியாது. என்னுடைய முயற்சி யெல்லாம் மக்கள் எதையும் சிந்திக்க வேண்டும் என்பதுதான். அவர்கள் எதையும் கண்மூடி நம்பிவிடக் கூடாது என்பதுதான்.


- தந்தை பெரியார் -



க்க அன்பளிப்பு : திரு. தாஸ் - KKB, திரு. சாமி - குத்தகையாளர்

படிப்பகம்

-பொ. ஐங்கரநேசன்-




தண்ணீர் இயல்பாகவே தீயை அணைக்கக் கூடியதேயல்லாமல் தீயை மூட்டிவிடக் கூடியது அல்ல. ஆனால் பெயரிலேயே குளிர்ச்சியைக் கொண்டிருக்கும் இந்தத் தண்ணீர்தான் இனிமேல் நாடுகளுக்கிடையே போரை மூட்டி விடும் "எரி எண்ணெய்" ஆக இருக்கப் போகிறது என்ற அச்சம் இப்போது சர்வதேச அளவில் தொற்றிக் கொண்டுள்ளது.

ஆம், எண்ணெய் காரணமாகப் போர்கள் நிகழ்ந்தது போலத் தண்ணீருக்காகவும் போர்கள் மூளும் என்று பல்வேறு நாடுகளின் அரசுத் தலைவர்களும், ஐ.நா. வின் உயர் அதிகாரிகளும் எச்சரிக்க ஆரம்பித்துள்ளார்கள். 1979இல் எகிப்திய அதிபர் அன்வர் சதாத், "எகிப்து இனி சண்டையில் இறங்க நேரிட்டால் அதற்குக் காரணம் நைல் நதி நீராகத்தான் இருக்கும்" என்று பிரகடனம் செய்தார். பின்னாளில் ஐ.நா பொதுச் செயலாளராகப் பதவி வகித்த பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி, 1989இல் எகிப்தின் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது "எகிப்தின் தேசியப் பாதுகாப்பு நைல் ஆற்றின் பள்ளத்தாக்குகளில் உள்ள எட்டு ஆப்பிரிக்க நாடுகளின் கரங்களிலேயே தங்கியுள்ளது" என்று அமெரிக்க காங்கிரஸ் முன் பேசும்போது அறிவித்தார்.

1980இல் ஜோர்டான் மன்னர் "சேன்" இஸ்ரேலுடன் தண்ணீர் பொறுத்துச் சண்டை வரும் என்றார். சமீபத்தில் ஐ.நா பொதுச் செயலாளர் கோபி அனான், 'உலக தண்ணீர் தினம் (மார்ச் 22, 2002) தொடர்பான தனது அறிக்கையில், "நீர் விவகாரங் களில் பெரும் வன்முறைக் கான வித்துக்கள் புதைந்து போயிருக் கின்றன என்ற அச்சத்தை நீர்வள ஆதாரங்களின் மீது தேசிய அளவில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டிகள் கொண்டுள்ள எனக் கோடிட்டுக் காட்டி யுள்ளார்.

வளைகுடாப் போரின் போது ஈராக் குவைத்தில் இருந்த உப்புநீரைக் குடிநீராக மாற்றும் இயந்திரங்களைத் தகர்த்து குடி நீருக்குப் பஞ்சம் உண்டாக்கியது. பதிலுக்குப் பாக்தாத் நகரத்துக் குடிநீர் வசதிகளை நேச நாட்டுப் படை குறிவைத்துத் தாக்கியது. 1999இல் நேட்டோ படைகள் கொசுவினுள் நுழையுமுன்னர் செர்பியப் பொறியியலாளர்களால் பிரிஸ்ட்டினாவின் நீர் வழங்கு அமைப்புகள் செயல் இழக்க வைக்கப்பட்டன. இப்படிப் போரின் போது, போர் அறிவியலையும் மீறி நீர் நிலைகளை நிர்மூலமாக்குவது காலந்தோறும் நடைபெற்றே வருகிறது. ஆனால் போரில் ஓர் உத்தியாகத் தண்ணீர் நிலைகளைத் தாக்கி அழிப்பதைப் போல அல்லாமல் தண்ணீருக்காகவே நடக்கும் போர்கள் மிகவும் அரிதாகவே நிகழ்ந்துள்ளன.

4500 ஆண்டுகளுக்கு முன்னர் யூப்ரட்டில் (Euphatares) தைகிறிஸ் (Tigris) நதிகள் பொறுத்து இரண்டு மெசப்பத் தோமிய நாடுகள் (இன்றைய ஈராக்கின் தென் பகுதி) போரிட்டதாக வரலாறு கூறுகிறது. அதன் பின்னர் பல நாடுகள் நீர் தொடர்பான கொந்தளிப்புகளால் உராய்ந்து கொண்ட போதும் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு நீருக்கான போர் எங்கேயும் ஏற்படவில்லை. ஆயினும் 'ஓநாய் வருகிறது' என்பது போல, கடந்த இரண்டு வருட தசாப்தங்களாகக் கடுமையாகக் கேட்க ஆரம்பித் திருக்கும் நீர்ப் போர் ஓலமும் ஒருநாள் உண்மையிலேயே அரங்கேறி விடுமா? 'நீலத் தங்கம்' என அழைக்கப்படும் நீர் வள ஆதாரங்கள் வேகமாகச் சுருங்கி வருவதைப் பார்க்கும் போது இதனை இல்லை என்று ஒரேடியாக மறுப்பதற்கு இல்லை. தன் மீது போர்த்தியுள்ள நீரோடை காரணமாக 'நீலக்கோள்' என அழைக்கப்படும் புவியில் 'தண்ணீருக்குப் பற்றாக்குறை' என்பது நம்ப முடியாத ஒன்று போலவே தோன்றும். ஆனால் உண்மை நிலவரம் கலவரப்படுத்துவதாகவே உள்ளது.

பூமியில் உள்ள நீரில் 97.5 விழுக்காடு நீர், கடல் நீராக உப்பேறிக் கிடக்கிறது. எஞ்சிய தண்ணீரிலும் பெரும்பகுதி கைகளுக் கெட்டாத வெகு ஆழத்தில் நிலத்தடி நீராகவும், அன்டார்ட்டிக்காவிலும் கிறீன்லாந்திலும் பனிப்பாறைகளாகவும் சிறைப்பட்டு இருக்க வெறும் 0.26 விழுக்காடு நீர் மாத்திரமே இலகுவில் வசப்படும் நீராக இருக்கிறது. இதுபூமியில் உள்ள மொத்த நன்னீரில் 0.007 விழுக்காடு ஆகும். இருக்கின்ற இந்தச் சொற்ப அளவு நீருக்கும் ஆபத்து என்பதுதான் இன்றுள்ள பிரச்சினையே. நீர் வள ஆதாரங்களை உலகளாவிய ரீதியில் 1975 முதல் மதிப்பிட்டு வரும் ஐ.நா கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைவனம் (யுனெஸ்கோ) நீரின் அளவும், தரமும் அச்சம் ஊட்டும் அளவுக்குப் படியிறங்கி வருவதை புள்ளி விபரங்களுடன் அறிவித்துள்ளது.


சென்ற நூற்றாண்டில் உலக மக்கள் தொகைப் பெருக்க வீதம் இரட்டிப்பாக உயர நீர்த் தேவையோ ஆறு மடங்காக எகிறியுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவருக்குக் கிடைத்து வந்த நீரின் அளவில் பாதி தான் இன்று நமக்குக் கிடைக்கிறது. 1950இல் வேளாண்மை, தொழிற்துறை, வீடுகள் ஆகியவற்றின் தேவைகளுக்குப் போக ஒருவருக்குச் சராசரியாக 450 கனமீற்றர் என்னும் அளவில் இருந்த உலகின் நீர்வள இருப்பு இன்று 200 கனமீற்றர் அளவாகக் குறைந்து விட்டிருக்கிறது. இந்த அளவும் இன்னும் 25 ஆண்டுகளில் 130 கனமீற்றராக வற்றிப் போய்விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்னீர் கையிருப்புக்கும், உலக மக்கள் தொகைக்கும் இடையிலான விகிதத்தைப் பார்க்கும்போது நீர் இருப்பு போதுமானதாகவே தோன்றும். ஆனால் நாடுகளிடையே பகிரப்பட்டிருக்கும் நீரின் அளவில் பெரும் ஏற்றத் தாழ்வு நிலவுகிறது. இயற்கையின் இந்த ஓரவஞ்சனையால் அமெரிக்காவில் உள்ள ஒருவர் 425 லிட்டர் நீரை அனுபவிக்க, மடகஸ்காரின் கிராமப் பகுதியிலுள்ள ஒருவருக்கு 10 லிட்டர் அளவு நீர் மட்டுமே பயன்படுத்தக் கிடைக்கிறது. இது ஒருவர் உயிர் வாழத் தேவையான ஆகக் குறைந்த அளவு நீராகும். இப்படி மிகவும் வரண்ட பகுதிகளில் இன்று 46 கோடி மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையால் அவதிப்படுகிறார்கள். இங்கு பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் தினமும் நீரைத் தேடி 15 கிலோமீட்டர்கள் வரையில் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

நீர் வேட்கை இத்துடன் அடங்கி விடுவதாக இல்லை. எந்தவிதத்திலும் அதிகரிக்கச் செய்ய முடியாத நீர்வள ஆதாரங்களை - இவற்றை ஒட்டிய சூழலை உகந்த முறையில் முகாமைத்துவம் செய்யத் தவறின் இந்த நூற்றாண்டின் கால்வாசியின் போது உலகில் மூன்றில் இரண்டு பகுதியினர் கடுமையான நீர்ப்பற்றாக் குறையால் தவிக்க நேரிடும். மேலும், சனத் தொகை அதிகரிப்பும் இதே கதியிலேயே தொடருமாயின் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தண்ணீர்ப் பஞ்சத்தினால் உலகின் எல்லாப் பகுதிகளுமே அல்லாட வேண்டிவரும் எனவும் யுனெஸ்கோ எச்சரித்துள்ளது.

தண்ணீர்ப் பற்றாக்குறை மட்டுமல்ல தண்ணீரின் தரம் பற்றிய யுனெஸ்கோவின் கணிப்புகளும் பீதி ஊட்டுவனவாயே உள்ளன. இன்று உலகின் ஐந்தில் ஒரு பகுதி மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது. அரைவாசிப்பேர் அடிப்படைச் சுதாதார வசதிகள் இன்றித் திண்டாடுகிறார்கள். முறையாய் கழிப்பிட வசதிகள், வடிகால் அமைப்புகள் இல்லாத

## பக்தியா... மூட பக்தியா?



ஆத்தாவுக்கு வேப்பிலை ஆடை கட்டி அரை நிர்வாணப் பூசை நடத்தும் இவர்கள் யார்?

அவர்களது பெற்றோர், உற்றார் உறவினர் நலமாய் வாழப் பிரார்த்தனை செய்கிறார்களா?

சீர்கெட்ட தமிழ்நாடு சீர்பெற கூட்டுப் பிரார்த்தனை செய்கிறார்களா? அல்லது இவர்கள் குரு ரஜனீஸ் சீடர்களா?

இவர்களில் யாரும் இல்லை! இந்தத் தமிழ்த் தம்பிகள் தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் நடிகர் ரஜினி நடித்து வெளிவர இருக்கும் 'பாபா' திரைப்படம் வெற்றிகரமாக ஓட வேண்டும் என்று வேப்பிலை கட்டிப் பிரார்த்தனை செய்கிறார்கள்.

பெரிய பாளையம் ஸ்ரீ பவானி அம்மனே! - அந்தக் கோவிலில்தான் இந்தப் பிரார்த்தனை! இந்த முட்டாள் தமிழர்களின் அறிவு தெளிவடைய ஏதாவது செய் அம்மனே! என்று யாராவது வேப்பிலை கட்டிப் பிரார்த்தனை செய்தால்தான் இவர்களுக்கு அம்மன் அருள் கிட்டும் போலும்!

ரஜினி நடித்து வெளிவர இருக்கும் திரைப்படத்திற்கே இந்தக் கதி என்றால்

ரஜினி முதலமைச்சர் ஆக வேண்டும்!
ரஜினி பிரதமர் ஆக வேண்டும்!
ரஜினி நீதிபதி ஆக வேண்டும்!
என்றெல்லாம் ரசிகர்கள் கனவு கண்டு வருகிறார்களே அதற்காக இவர்கள் நிர்வாணமாகப் பிரார்த்தனை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

இதனால்தான் தந்தை பெரியார் அன்றே சொன்னார். ஒழிக்கப்பட வேண்டியவற்றில் சினிமா ஒன்று! மக்களிடம் தன்மானம், ஒழுக்கம் ஏற்பட வேண்டுமாயின் சினிமா ஒழிக்கப்பட வேண்டும்".

பெரியார் சொன்னதை அன்று புரிந்து கொள்ளாத தமிழர் இன்றாவது இதைப் பார்த்தாவது புரிந்து கொள்ளட்டும் - சினிமா ஒழிக்கப்பட வேண்டியவற்றில் ஒன்று!



பக்க அன்பளிப்பு : நேசமலர் - சித்தியவான்

www.padippakam.com



தால் கழிவுகள் குடிநீருடன் தடையின்றிக் கலந்து விடுகின்றன. இந்தத் தொற்றுள்ள நீர் ஒன்று காரணமாயே வளர்முக நாடுகளின் அரை வாசிப்பேர் வயிற்றோட்டம், மலேரியா என்று நீர்சார்பு நோய்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இந்த நோய்கள் ஆண்டுதோறும் ஐம்பது இலட்சம் பேரை, அதுவும் குறிப்பாக மூன்றாம் உலகின் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பரிதாபமாகப் பலி வாங்கிக் கொண்டிருக் கிறது. இந்தத் தொகை போர்களினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை விடப் பத்து மடங்கு அதிகமாகும்.

நீரின் தூய்மையைத் தம் பங்குக்குத் தொழிற்சாலைக் கழிவுடன் வந்து சேரும் இரசம் கட்மியம், குரோமியம், ஈயம் போன்ற பார உலோகங்களும், சயனைட்டு வேதிகளும் குடம் பாலுக்குத் துளி விஷம் போல நீரைப் பாவனைக்கு உகந்ததல்லாததாக்கி விடு கின்றன. இரசத்தில் ஒரு மில்லிகிராமில் ஆயிரத்தில் ஒரு பங்கே ஒரு லிட்டர் நீரை நஞ்சூட்டப் போதுமானது என்று உலக சுகாதார அமைவனம் கணக்கிட்டுள்ளது.

தொழிற்சாலைக் கழிவுகளினாலும் அதிகம் பாதிக்கப்படுவது ஏற்கனவே நீர்ப் பற்றாக்குறையில் உள்ள மூன்றாம் உலக நாடுகள்தான். கடுமையான சட்ட விதிகளினால கைத்தொழில் நாடுகளிலிருந்து விரட்டப்படும் தொழிற்சாலைகள் உலக மயமாக்கல் என்னும் கதவுகளினூடாக மூன்றாம் உலக நாடுகளினுள் நுழையத் தொடங்கியிருப்பது அவற்றின் நீர் ஆதாரங்களை மேலும் நச்சு வலையத்தினுள் தள்ளுவதாகவே உள்ளது.

உலக நீர்ப் பயன்பாட்டில் 80 விழுக்காடு நீரை விழுங்கிக் கொண்டிருக்கும் வேளாண்மையும் நன்னீர் ஆதாரங்களின் இருப்புக்கு வேட்டு வைப்பதாய் உள்ளது. இதில் 20 விழுக்காடு நீர் மட்டுமே பயிர்களைச் சென்றடை கிறது. மீதி 60 விழுக்காடு நீர்குழாய்களில் கசிவு, ஆவியாதல் என்று வீணாகிப் போவதுடன் தேங்கி நின்று ஆவியாகும் இடங்களில் உப்புக் களைத் தேக்கியும் வருகிறது. இப்படி உலகின் நீர்ப்பாசன நிலைகளில் 30 விழுக்காடு நிலம் இனிமேலும் பயிர்களைத் தாங்க முடியாத அளவுக்கு உவர்ப்பேறி உள்ளது. அளவுக்கு மிஞ்சி வேகமாக நீரை இறைத்துத் தள்ளுவதாலும் நன்னீர் வில்லையினுள் கடல் நீர் புகுந்து உப்புக்கரிக்க ஆரம்பித்துள்ளது.

வேளாண் வேதிகளின் பிரயோகம் வரம்பை மீறிய இடங்களிலெல்லாம் குடிநீரில் வேளாண் வேதிகளும் குடியேறி யுள்ளது. இன்று குடிநீரை அதிகம் அச்சுறுத்தும் வேளாண் வில்லன் பசளைகளில் இருந்து வந்து சேரும் 'நைத்திரேற்'தான். லிட்ட ருக்கு 50 மில்லி கிராம்களிலும் அதிகமாகக் குடிநீரில் 'நைத்தி ரேற்' கலக்குமாயின் அது நீலக் குழந்தை நோயை (இரத்தத்தில் ஒட்சிசன் காவப்படு வதில் தடங்கல் ஏற்பட்டு குழந்தை இறந்து பிறத்தல் - metha emoglobine mia) ஏற்படுத்தும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. திரவத் தங்கமான நீர் வள ஆதாரங்கள் இப்படி அளவிலும் தரத்திலும் வேகமாகக் கீழ் இறங்கி வருவதால் அதனைப் பங்கு போட்டுக் கொள்வதில் நிலவும் கடுமையான போட்டியே 'நீர்ப் போர்' பற்றிய அச்சத்தை உருவாக்கி யுள்ளது.

அதுவும் ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகள் ஒரு நதி நீரைப் பங்கு கொள்ளும் இடங்களில் நீர்ப்போர் அபாயம் அதிகம் உணரப்பட்டுள்ளது. எதியோப்பியாவில் உற்பத்தியாகி எகிப்தினால்பெரும் வேட்கை யுடன் குடிக்கப்படும் நீல நைலின் நீர் குறித்து நெடுங்காலமாக வாக்குவாதங்கள் நடந்து வருகின்றன.

நீல நைலின் 2 விழுக்காடு நீரை மட்டுமே பயன்படுத்தும் வரட்சியால் வதங்கும் எதியோப்பியா தனது எல்லையினுள் அணை களைக் கட்ட முயன்றபோதெல்லாம், 86 விழுக்காடு நீரைநுகர்ந்து கொண்டிருக்கும் எகிப்து படை மிரட்டல் விடுத்து அணை முயற்சிகளுக்கு அணைபோட்டு வந்துள்ளது. இந்தியாவும் வங்காளதேசமும் கங்கை ஆற்றுக்காகவும், மெக்சிக்கோவும் அமெரிக் காவும் கொலராடோ ஆற்றுக்காகவும் ஹங்கேரியும் - ஸ்லோவேக்கியாவும் டான்யூப் ஆற்றுக்காகவும், தாய்லாந்தும் - வியட்நாமும் மேகாங் ஆற்றுக்காகவும் பரஸ்பரம் வெறுப்பு நஞ்சைக் கக்கி வருகின்றன.

இன்று சுமார் 300 ஆறுகள் நாடுகளின் தேசிய எல்லைகளை கடந்து பாய்ந்து கொண்டிருக்கின்றன. உலக மக்கள் தொகையில் 40 விழுக்காட்டினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் கைநனைக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலேயே வாழ்கின்றனர். பல்வேறு மொழி, பண்பாட்டுப் பாரம்பரியங்களை ஒருங்கிணைத்துப் பாயும் இந்த நீர் ஆதாரங்களி னுள்ளே போர் அபாயத்தையும் தாண்டி அமைதிக்கும் ஒத்துழைப்புக்குமான மெல்லிய இழையோடிக் கொண்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை.

பகைமைக்கான மற்றைய காரணங்கள் அப்படியே இருப்பினும் பல நாடுகளிடையே நீரைப் பொறுத்து இணக்கம் உண்டாகியுள்ளது. இதுவரை பன்னாட்டு நீர்ப்படுக்கைகள் பொறுத்து 150 உடன்படிக்கைகள் செய்து கொள்ளப் பட்டுள்ளன. காஷ்மீரிலுள்ள இமயமலைப் பகுதியில் உற்பத்தியாகி பாகிஸ்தானை ஊடறுத்து ஓடும் சிந்து நதி தொடர்பாக இந்தியத் துணைக் கண்டம் இந்தியா - பாகிஸ்தான் என்று பிரிவிணையானது முதல் சச்சரவுகள் இருந்து வந்துள்ளன. பிரிவினையான மறு ஆண்டே இந்தியா சிந்து நதி நீரைத் தடுத்து நிறுத்தியபோது போர் ஏற்படும் சூழ்நிலை உருவாகியது. உலக வங்கியின் முயற்சியினால் 1960இல் சிந்து நதி நீரை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் உடன்படிக்கை கையெழுத்தானது. அதன் பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையே இரண்டு முறை போர்கள் நிகழ்ந்தபோதும் சிந்து நதி பொறுத்து கூட்டுறவு முறியவில்லை. இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே பீரங்கிச் சூடு கேட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும் ஓஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் இரண்டு தரப்பினரும் மேற்குக்கரைப் பகுதியில் தண்ணீர் தங்கு தடையின்றிக் கிடைக்க முறையாகக் கூடிப் பேசி வருகிறார்கள். இந்நீர்த் தூதாண்மையில் மாய மந்திரம் ஏதும் இல்லை. நீர் உற்பத்தியைச் சண்டைபோட்டு அதிகரிக்கச் செய்ய இயலாத நிலையில் நீருக்கான உரிமையை விடவும் தேவையின் அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒத்துழைப்பைத் தவிர இவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

முதல் உயிரி தோன்றிய நாளில் இருந்து புவியில் உயிர்ப் பசையை ஒட்டி வைத்திருக்கும் நீர்வள ஆதாரங்கள் இன்று பற்றாக்குறை காரணமாக முரண்பாடுகளின் மூலவளமாக மாறி இருக்கும் அதே சமயம் ஒத்துழைப்புக்கான ஊக்கியாகவும் இருக்கிறது.

இதனாலேயே ஐ.நா. கல்வி, அறிவியல் பண்பாட்டு அமைவனம், மிகெயில் கொர்பச் சேவ் தலைமையிலான சர்வேச பசுஞ் சிலுவை அமைப்புடன் (Green Cross International) இணைந்து தண்ணீரைப் போர் வாய்ப்பிலிருந்து சமாதான வாய்ப்புக்கு நகர்த்தும் திட்ட மொன்றை பாரிய அளவில் சமீபத்தில் முன்னெடுத்துள்ளது.

போரா - சமாதானமா? தீர்வு நம்மிடமே.

## நினைத்துப் பாருங்கள்! ஆனால் மறந்து விடுங்கள்

"இந்த அடிப்படைச் சம்பளம் அர்த்தமற்றது. கார் கழுவும் தொழிலாளர்கூட இதைவிட அதிகமான சம்பளம் பெறுகின்றனர். MAPA உள்நாட்டுத் தொழிலாளர்களை அகற்றி விட்டுக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யத் தயாராக இருக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்களை அமர்த்தத் திட்டமிட்டி ருக்கிறது. தோட்டத் தொழிலாளர் நாய்கள் அல்ல....!"



**மாபா பால்மர வெட்டுத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக RM 225 பரிந்துரைத்தபோது டத்தோஸ்ரீ ச. சாமிவேலு கூறியது (Malay Mail 5-7-2002)**



"தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அதன் முன்னாள் தலைவர் மறைந்த பிபி. நாராயணன் மற்றும் சங்கத் தலைமைத்துவம் தோட்டாப் பாட்டாளிகள் நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்துள்ளது"

- தோட்டத் தொழிலாளர்கள் சங்க விழாவின்போது டத்தோஸ்ரீ சாமிவேலு.



என்னய்யா கூற்று இது! நம்ப தலைவருக்கு என்ன இரட்டை நாக்கா? அங்கொன்று பேசுகிறார், இங்கு ஒன்று பேசுகிறார், 100 வருடமா இன்னும் மாதச் சம்பளத்துக்கு நடிக்க வேண்டியிருக்கு! நம்ம தலைவர்களும், தொழிற்சங்கங்களும் நமது தோட்டப் பாட்டாளிகளுக்குச் செய்ததுதான் என்ன? சாதித்ததுதான் என்ன? 1960ல் 60,000 தோட்டத் தொழிலாளர் பிரஜா உரிமை எடுப்பதில் அக்கறை காட்டாத தினால் இந்தியாவுக்குத் திரும்பிப் போனது இவர்களுக்குத் தெரியுமா?

- சின்னச்சாமி, ரந்தாவ் தோட்டம்.

க்க அன்பளிப்பு : திரு. வேலு, கேமரன் மலை - HILL VIEW INN - 05-4912915.



படிப்பகம்

www.padippakam.com



# நெகிழியும் சுற்றுச் சூழலும்




இந்தப் பூமி மனிதனுக்கு மட்டுமானதல்ல! எல்லா உயிர்களுக்கும் பொது வானது. ஆறறிவு கொண்ட மனிதன் தன் சுயநலனுக்காக பிரபஞ்சத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ள முயன்றது படைப்பையே கேவலமாக்கும் செயல் என்பதை உணராமல் இருக் கிறார்கள்.

நாட்டின் வளர்ச்சிக் காக மரங்களை அழித்து வருவதுடன் நீர்வளங் களையும் மனிதன் தொலைத்துக் கொண்டு வருகிறான். அடுத்த உலக யுத்தத்தின் கருப் பொருளாகத் தண்ணீரே இருக்கும் என்கிறார்கள்.

மனித குலத்தின் வளர்ச்சிக்காக என்று கண்டுபிடிக்கப்பட்டவை பின்பு மனிதனின் அழி வுக்கும் பயன்பட ஆரம் பித்ததை அணுவி லிருந்து நெகிழி (பிளாஸ்டிக்)வரை நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

## இரும்புக் காலம்

இரும்பும், இரும்பின் பயன்பாடும் கண்டு பிடிக்கப்பட்ட போது மனிதகுலம் அடைந்த ஆனந்தத் திற்கு எல்லை இல்லாமல் இருந்தது. இரும்பு கண்டு பிடிக்கப்பட்ட பின்புதான் உலகில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. தொழிற் புரட்சியின் பயனாக இயந்திரங் களின் உருவாக்கமும் அதன் விளைவாக இரும்பின் அவசியமும் பெருகிக் கொண்டே இருந்தது.

இரும்பைக் கனிவளமாகக் கொண்ட நாடுகளில் தொழிற் சாலைப் பெருக்கமும் கட்டட நிர்மாணிப்பும் வளர்ச்சி கண்டன. இரும்புடனான மற்ற உலோகங்களும் சேர்ந்து வீட்டு உபயோகப் பொருள்களில் இருந்து விண்வெளி உபகரணங்கள்வரை இரும்பின் அவசியம் மிகுதியாக இருந்தது.

இரும்பின் அடர்த்தியும், மிகுதியான எடையும் அதன் உராய் வதனால் ஏற்படும் அதிக வெப்பமும் அதன் வடிவமைப்புகளில் அதிக எடையுள்ளதாகவும் கனரகமாகவும் இருப்பதைத் தவிர்க்க முடியாததாக இருந்தது. அதன் துருப்பிடிக்கும் தன்மையும் மனிதனை மாற்று உலோகத்தை அல்லது மாற்றுக் கச்சாப் பொருளைத் தேடும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கியது.

## கணினி யுகத்தில் நெகிழி

விஞ்ஞான காலத்தில் இயற்கை ரப்பர் மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது போனபோது செயற்கை ரப்பர் கண்டுபிடிக்கப் பட்டது. இதன் பிறகுதான் மின்னணுவிய காலத்தில் பிளாஸ்டிக் எனப்படு நெகிழியின் பயன்பாடு பெருமளவி பெருகியது. பல்வேறு வகைப்பட்ட உபயோகப் பொருட்கள் இயந்திர களின் ஒட்டு மொத்த எடையை குறைந்ததோடு இலகுவானதா மாற்றமடைந்தது.

## மருத்துவர் சொல்கிறார்!

- டாக்டர் எம். சண்முகசிவா
MBBS. (MDU)
DIP DERM (AUST)
LFOM (IRELAND)



செயற்கை ரப்பர் செய்ய ஆராய்ச்சி செய்தவர்கள் அந்த ரசாயனப் பொருளைக் கண்டு பிடித்தனர். 1940 களில் இதன் பயன்பாடு ஆரம்பித்து இன்று வரை உச்சத்தில் இருக்கிறது.

இதனை மூலப் பொருளாகக் கொண்டு சாப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் தட்டு, பருகும் கோப்பைகள், உணவுப் பண்டங்களை பார்சல் செய்து கொடுக்கும் “Foam Polystyrene’, தொலைத் தொடர்பு சாதனங்கள், பைப்புக்கள், பேட்டரிக் கட்டைகளை சுற்றிய பிளாஸ்டிக் போன்ற உலோகங்கள் போன்றவற்றிற்குப் பயன்படுத்துகிறார்கள்.

மேற்சொன்ன பொருட்களை யெல்லாம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இந்த ரசாயனப் பொருள் ஆவியாகவோ, இப்பொருள்கள் செய்து முடிக்கப் பட்ட பின்னர் பயனீட்டாளர்கள் பயன்படுத்துகையில் உஷ்ணத்தால் கசிந்தோ மனிதர்களைப் பாதிக்கும்.

மிக முக்கியமாக குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களில் இப்பொருள் பயன் படுத்தப் படுகிறது. குழந்தைகள் வாயில் வைத்துக் கடிக்கும் போது குழந்தை வாயினுள் செல்ல வாய்ப்புக்கள் அதிகம். இவற்றின் பாதிப்புக்களைப் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம்.

தலைவலி, வாந்தி, மயக்கம், தும்மல், இருமல் முதல் மஞ்சள் காமாலை, கல்லீரல் அழற்சி, நரம்புத் தளர்ச்சி என்று புற்று நோய் வகையில் இதன் பாதிப்பின் பட்டியல் நீளும்.

இத்தகைய கொடிய ரசாயனம் பிளாஸ்டிக் பொருட்களுடன் வேலை செய்வதே தெரியாது. ஆனால் அதன் பாதிப்புக்குட்படும் அப்பாவிகளாக நமது தொழிற்சாலை ஊழியர்கள் இருந்து வருகிறார்கள்.

இவர்களை வைத்து வேலை வாங்கும் பன்னாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் குறைந்த பட்சம் இவர்களை இந்தக் கொடிய பிளாஸ்டிக், ரசாயனக் கலவைகளைப் பற்றிப் புரிந்து கொண்ட தொழிலியல் மருத்துவரிடம் அனுப்பி ஆண்டுக்கொருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆலைகளில் இவற்றின் அபாயத்திலிருந்து பாதுகாக்க ஏற்ற தற்காப்புச் சாதனங்களை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்ற OSHA ACT என்ற சட்டம் சொல்கிறது.

சட்டம் ஒரு சிலந்தி வலை, சிறு பூச்சிகள் மாட்டிக் கொள்ளும் பெரிய பூச்சிகள் வலையையே அரித்துவிடும். இதே போன்றுதான் ‘Polyvinyl Chloride Monomer என்றழைக்கப்படும் PVC.

இதர பிளாஸ்டிக் பைப்புகள், குழாய்கள், மின்சார சாதனங்கள், விளையாட்டுச் சாமான்கள், ஃபிலிம், பாட்டில்கள், துணி தோய்க்கும் வாஷிங் மிஷின், காரில் பயன்படுத்தப் படும் உறைகள் இன்னும் பலவற்றில் பயன்படுத்துகிறார்கள்.

இதனால் ஏற்படும் கொடிய விளைவுகள்: விரல் நுனிகளில் ரத்த ஓட்டம் தடைபடுதல், எலும்புகள் பாதிக்கப்படுகின்றது. ‘Pneumoconniosis’ என்ற நுரையீரல் வியாதி, கல்லீரல் ‘Angiosarcoma’ என்ற புற்றுநோய் முதலிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

## செம்பருத்தியின் கவிதை இரவு



மலேசிய தமிழ் இலக்கியத்தின் செழுமை கருதி மாதந்தோறும் மூன்றாம் சனிக்கிழமைகளில் ‘கவிதை இரவு’ நிகழ்வு ஒன்றினைச் செம்பருத்தி நடத்தி வருகிறது. அதன் முதலாவது கவிதை இரவு டாக்டர் சண்முகசிவா அவர்களின் வழி நடத்துதலில் 20-04-2002 அன்றும் இரண்டாவது கவிதை இரவு 18-05-2002 அன்றும் நடைபெற்றது. மூன்றாவது கவிதை இரவு 15-06-2002 அன்று இரவு 7.00 மணிக்கு செம்பருத்தி பணிமனையில் நடைபெறும்.

கவிதை வழி சமூகவிழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் புதுக் கவிதையின் திறன், அதன் ஆழ அகலம் பாகுபாடின்றி விமர்சனம் செய்யப் படவும் கவிதை பற்றிய புரிந்துணர்வும் கலைப் பண்பும் வெளிப்படுமாறு அலசி ஆராயவும், அதன் பயன் படைப்பாளியின் எழுத்துக்கு உறை கல்லாகவும் அமையும் என்பதால் கவிஞர்கள் தொடர்ந்து கலந்து பயன் பெறுமாறு வேண்டப்படுகிறார்கள். முதலாவது கவிதை இரவில் கலந்து கொண்டவர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!



க்க அன்பளிப்பு : திரு. குலசேகரன் - செராஸ்

படிப்பகம்

www.padippakam.com



## நெகிழியின் குணங்களும் சுற்றுச் சூழலும்

பல்வேறு வகையான அவசியப் பயன்பாடுகளுக்குத்தக்க செயற்கை ரப்பருடன் தேவைகளுக்குத் தகுந்த மாதிரியான நெகிழி வகைகள் கண்டு பிடிக்கப்பட்டன. மெருதுவான நெகிழி களில் இருந்து கனரக வாகனங்களுக்குப் பயன்படும் நெகிழிகள் வரை ஒவ்வொரு வாகனங்களிலும் தரத்திலும் நெகிழியின் பயன்பாடு பெருகிக் கொண்டே வந்தது. பைபர் வகைப் பொருட்களும் நெகிழி யின் வடிவங்களே! மனிதருக்குப் பொருத்தப் படும் செயற்கை இருதயம் கூட ஒரு வகையான நெகிழிதான் என்கிறது மருத்துவவியல்.

சரி. நெகிழி சுற்றுச்சூழலை எந்த வகையில் பாதிக்கக் கூடியது. எத்தகைய உபயோகங்களில் நெகிழியின் பயன் பாட்டைத் தவிர்க்கலாம் என்பதை யெல்லாம் நாம் கொஞ்சம் கவனித்துப் பார்ப்போம்.

நெகிழியின் மட்கிப் போகாத தன்மை நிலத்தின் தன்மையைப் பாதிப்பதுடன், மழைநீர் நிலத்தின் கீழ் தேங்கி நிற்காமல் ஆவியாகிப் போகக் கூடிய சூழலைத் தோற்றுவித்திருக்கிறது.

மலேசிய மக்களின் வாழ்வில் நெகிழி தன் நிலைத்தன்மையை மிக ஆழமாகவே விழைத்திருக்கிறது.

மக்களின் அனைத்துச் செயல் களிலும் நெகிழி நீக்கமற நிறைந்திருக் கிறது. அதன் இளகும் தன்மைக்காகப் பயன் படுத்தப்படும் பிளாஸ்டிக் சைசர் என்று இரசாயனம் புற்று நோயைத் தோற்றுவிக்கக் கூடியது என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

உணவுப் பொட்டலங்களுக் காகப் பயன்படுத்தப்படும் மிருதுவான நெகிழிகள் மேலும் ஆபத்தானவை. உணவுப் பொருள்களுடன் நேரடித் தொடர்புடைய அனைத்து நெகிழியின் பயன்பாட்டையும் தவிர்த்தல் உடல் நலத்துக்குப் பாதுகாப்பு. எடுத்துக் காட்டாக நெகிழித் தட்டுகள், குவளைகள் மற்றும் பாத்திரங்கள்.

உடலுடன் நேரடித் தொடர் புடைய நெகிழி ஆடை வகைகளைத் தவிர்க்க வேண்டும் எடுத்துக்காட்டாக நைலான் ஆடைகள், நெகிழிக் காலணிகள், ஜெரிக்கின்ஸ் எப்படும் குளிர் உடை போன்றவற்றைத் தவிர்த்துவிட்டு தோலிலான காலணி, கம்பளி துளிருடைகள் அணிதல் நலம். நெகிழிப் பூக்களைத் தவிர்த்து விடுங்கள். பூக்கள் அழகானவை. வாசனையுடையவை. ஆனால் அது நெகிழியில் செய்யப்பட்ட தாக இல்லாமல் உயிர்த்தாவரமாக இயற்கையானதாக இருக்க வேண்டும்.

நெகிழி கழிவுப் பொருள்களை எடுத்துக்காட்டாக பைகள், பாட்டில்கள் போன்ற தேவையற்ற பொருள்களைச் சேர்த்து வைக்காதீர்கள். அவற்றைத் தனியாக எடுத்துரைத்து குப்பைக் கூடைகளில் சேர்த்து விடும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள்.

நெகிழியின் இயல்பான குணம் - நெகிழ்வதுதான். அதாவது குறைந்த வெப்பத்திலும் இளகும் தன்மை கொண்டது. அது இளகுகின்ற போது அது ஏற்படுத்தும் இரசாயனப் புகை காற்றில் கலந்து உடனுக்குப் பல்வேறு தீங்குகளை விளைவிக்கின்றது - நோய்களை உருவாக்குகின்றது என்பதை மறவாதீர்கள்.

குடிப்பது உடலுக்குத் தீமை தருவது - அதனால் குடிக்காதீர்கள் என்று மதுபான போத்தல்களில் எழுதப்பட்டிருக்கும், புகைப்பது உடலுக்குத் தீமை என்று சிகரெட் பெட்டிகளில் அச்சிடப் பட்டிருக்கும் ஆனாலும் இந்த இரண்டும் விற்பனை யில் இருக்கும். அதற்கு அரசு வரியும் விதிக்கும். முதலாளிகளுடன் கை கோர்த்துக் கொண்டு அனைத்து முதலாளித்துவ அரசுகளும் இதைச் செய்து கொண்டுதான் இருக்கின்றன.

'நெகிழி - சுற்றுச்சூழல் பாதிக்கும்' என்ற சுலோகத்துடன் நெகிழியும் தொடர்ந்து பயன்படுத்தப் படலாம். பூமியின் மீதும் சுற்றுச் சூழல் மீதும் மனிதனின் அக்கறை குறைந்து கொண்டே வருவதையே நெகிழியின் பயன்பாடு உணர்த்துகிறது.



## கட்டடவியலாளர் சொல்கிறார்!

M.K. கலைமணி
Minst. PM (Dip) Lond,
NSCA (QUAL) Aust.



நெகிழியில் இரசாயன பொருட்களைக் கலந்து சூடாக்கும் பொழுது, அந்த சூடானது 'Dioxin' என்ற நச்சு தன்மையை வெளியாக்கு கின்றது. அந்த நச்சுக் காற்றை சுவாசித்தால் மூச்சடைப்பு ஏற்படும் முக்கியமாக ஆஸ்துமா நோயாளி களுக்கு மயக்கம், வாந்தி ஏற்படும். திறந்த வெளியில் பொருட்களை எரிப்பதை தடை செய்தும், இன்னும் சிலர் அந்தச் செயலை தொடர்வதை நாம் கண்கூடாக பார்க்கின்றோம். நெகிழியில் உருவான பொருட் களை எரிப்பதால் வெளியாகும் Di-oxin நச்சுக்காற்றை சுவாசித்தால் அருகிலிருக்கும் மரஞ் செடிகள் கூடப் பட்டுப் போய்விடும்.

ஒரு சிலர் எரிக்காமல் வீசி விடுவர். நெகிழி (PVC / Plastic) அழிவதற்கு ஏறக்குறைய 50 வருடங் களுக்கு மேலாககூட ஆகும். நெகிழி அழிந்தாலும் கூட அதனால் ஏற்படும் நச்சுத் தன்மை அழியாது. சுற்றி இருக் கும் இயற்கையைக் கூட அழித்து விடும். வெளியாகும் நச்சுப் புகையை விட, நெகிழியில் இருந்து வெளியாகும் நச்சுப் புகையானது Ozon-னை வெகு வேக மாக அழிக்கும்.

மேலை நாடுகளில் பொருட் களை எல்லாம் காகிதப் பைகளில்தான் எடுத்துச் செல்வர். இது மேலை நாடுகளில் நெகிழியை தடை செய்துள் ளனர் என்பதை விளக்கு கின்றது. மேலை நாட்டவர்கள் இவர் களுக்கும் இவர் களைச் சுற்றி இருக்கும் இயற்கைக்கும் நன்மை பயக்கும் பொருட் களை மட்டும் வைத்துக் கொள்வர். இயற்கைக் குத் தீங்கிழைக்கக் கூடிய கண்டு பிடிப்புகளை மட்டும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

நெகிழியால் ஏற்படும் விளவுகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. மலேசி யாவில் உள்ள நெகிழித் தொழிற் சாலை களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைப்பதில்லை. யாவரும் பொருளீட்டுவதில் மட்டுமே குறியாக உள்ளனர்.

## சிந்தியுங்கள்... ஆனால் மறந்து விடுங்கள்!

"அரசாங்கப் பல்கலைக் கழகங்கள் பட்டப்படிப்புக்கு RM5000 கட்டணமாகப் பெறுகின்றன. ஆனால் தனியார் பல்கலைக்கழகங்கள் மூன்று வருடப் பட்டப் படிப்புக்கு RM50,000 முதல் RM60,000 வரை செலுத்த வேண்டும். இக்காரணத்தினால் ஏழை இந்திய மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களுக்குப் போக முடியாத சூழ்நிலையில் உள்ளனர்."

(டத்தோஸ்ரீ சாமிவேலு-
Star 13-05-2002)

**இந்த நாட்டின் இந்திய சமுகத்தினருக்காக 430 மில்லியன் செலவில் (RM 430,000,000.00) கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மஇகா பல்கலைக்கழகத்தில் நம்மின மாணவர்கள் செலுத்த வேண்டிய கட்டணப் பட்டியல் இது!**

| FEES | |
| --- | --- |
| Medicine | : RM238000 |
| Engineering | : RM 65000 |
| Computer Science | : RM 46500 |
| Information Technology | : RM 46500 |
| Science | : RM 36000 |
| Business & Management | : RM 33000 |
| Accountancy | : RM 48000 |
| Matriculation | : RM 8550 |

AIMST பல்கலைக்கழகம் கட்டி முடிக்கப்பட்டால் நம்மினத்தவர் எல்லோரும் பணக்காரர்களாகித் தங்கள் பிள்ளைகளை அங்கு படிக்க அனுப்ப டத்தோஸ்ரீ ஏதாவது புதுத்திட்டம் எடுத்திருக்கிறாரா?

ஒரு வேளை இதைத் தான் **"மாற்றத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் வேண்டும்"** என்று மஇகா பேராளர் மாநாட்டில் கூறினாரோ!

சின்னசாமி - ரந்தாங் எஸ்டேட்.

உள்நாட்டுப் பல்கலைக்கழகங் களில் தகுதி அடிப்படையில் மாணவர்களை அனுமதிப்பதினால் இந்திய மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளதைக் குறித்து டத்தோஸ்ரீ சாமிவேலு ஸ்டார் நாளிதழில் வெளியிட்ட செய்தி!

**THE STAR**
**MONDAY May 13 2002**

He said the Indian students could not afford to go to private universities because the cost is higher.

"In a public university, it costs about RM5,000 but in the private university, it costs about RM50,000 to RM60,000 for a three-year degree course," Samy Vellu said.

He added that the MIC-owned Maju Institute Education Development which runs the Tafe colleges, imposed fees which were within the reach of the ordinary people.

The Youth Wing also passed a resolution urging the Education Ministry to review the meritocracy system to enable more Indian students to gain places into public universities.

Of the total enrolment of 32,652 candidates in public universities this year, 22,557 places went to bumiputra students while 8,665 (26.4%) were allocated for Chinese students and 1,530 (4.7%) to Indians.

Selangor DAP committee member S. Ramakrishnan, in a statement, urged the Education Minister to be transparent and explain the selection system for entry into public universities.



படிப்பகம்

www.padippakam.com



ஓர் இனம் ஆதாரப்படுகின்ற காரணிகளில் மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரப் பாரம்பரிய தனித்துவங்கள் முக்கியமானவையாகும். அவை நிகழ்வுகளின் குறியீடுகளாக நின்று நாகரீகத்தின் செழுமையைத் துலக்கமாய்க் காட்டுகின்றன. தமிழரின் நாகரீகம் செழுமை மிக்கது. வலிமையானது. ஆயினும் பண்பாட்டுக்காரணிகளைப் பக்குவப்படுத்தாமையும் அந்நியக் கலாச்சாரங்களையும் ஆர்வலப்படுத்த வேண்டுமென்ற பரந்த நோக்கு அல்லது அத்தகைய நோக்குடையவர்களாகத் தம்மை இனங் காட்டிக் கொண்ட தன்மை பிற நாகரீக ஈர்ப்பு என்பன காரணமாகவும் கால ஓட்டத்தில் தமிழரின் நாகரீகமும் பண்பாடும் பல மாறுதல்களைப் பெற்றுக் கொண்டன.

குடியேற்றவாதத்தின் தாக்கத்தால் ஆங்கில மொழி சர்வதேச மொழியாக ஏற்றம் பெற்றது போல ஆங்கில நாகரீகப் பாணிகளை பெரும்பான்மைக் கூறாகக் கொண்ட பல்தேச கூட்டு நாகரீகம் என்று கூறக்கூடிய பொது நாகரீகப்பாங்கு உலகளாவி வளர்ந்துக் காணப்படுவது தவிர்க்க முடியாதது. ஆயினும் அடையாளங்களாகக் காணப்படுகின்ற ஒரு சில பண்பாடுகளையாவது காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடப்பாடு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தமிழரின் பண்பாடு சிதைவுபட்டுப் போனதற்கு நாம் ஒரு வேற்றுக்காரணியையும் ஒப்புவிக்கலாம். இது காட்டமான காரணியாகவும் காணப்படுகின்றது. மரபு வழி வந்த சமூகச் சட்டங்கள் வரிந்து கட்டிக் கொண்டு சாதியம் பேசியதும் ஆணாதிக்க வட்டத்துக்குள் விடுபட முடியாது நின்றமையுமான பிற்போக்குக் குணாம்சமே அது. சமய மேலாதிக்கத்தின் மீதும் பண்பாடுகளின் மீதும் தமிழ் சமூகத்தின் ஒரு கூறு மக்கள் வெறுப்புற அது வழி வகுத்தது. மரபு, இசை, நடனம், ஓவியம் முதலான கலைகள் உயர் சாதியினர்க்கு உரித்தான கலைகள் என்ற உக்கிர நிலைப்பாடு காரணமாக ஐரோப்பிய கலைப்பண்பாட்டு வடிவங்களின் மீதான தாக்கமும் ஈடுபாடும் தமிழர்களிடையே ஆழமாகப் பரவியது. இவ்வாறு தாழ்சாதியினரென்று ஒதுக்கப்பட்ட சமூகத்தினர் கல்வியில் உயர்ந்து சமூக நிர்மாணத்தில் முக்கியம் பெறுகையில் ஐரோப்பிய கலை முறைமைகளின் வளர்ச்சி தமிழர்களிடம் மேலோங்கியதுடன் தமிழர் பண்பாடுகளை இம்மக்கள் சார்ந்து அல்லது சாதீயம் பேசுவதென விலக்கியதும் கடவுள் மறுப்பில் உறுதி கொண்டதுமான நிக்ழ்வுகள் இடம் பிடித்ததை நாம் கண்டே ஆக வேண்டும். உண்மையில் சமய அடிப்படைத் தனமும் பிற்போக்கு வாதமும் பண்பாட்டில் இருந்து வேறானவை.

பண்பாடுகள் நம் தனித்துவ இருப்புக்கும் நிலவுகைக்குமான அடையாளச் சின்னங்கள் என்பதை நாம் ஆழ்ந்துணர வேண்டியது அவசியமாகும். இந்த ஙி




மாவிலைத் தோரண அலங்கரிப்பும் தமிழரின் நீண்ட காலப்பண்பாடாகும். இப்போதெல்லாம் இது நிறமூட்டிய ஞெகிழிக்கு மாறி நம்மை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. அலங்காரம் பண்பாட்டுக்கு மட்டுமின்றி அழகுக்குத்தான் என்ற வாதமும் புதியன புகுதல் வழுவல்ல என்ற சமாதானமும் கூட இதற்குப் பூசப்படலாம். ஆனால் குருத்தோலையின் இளம் பச்சை நிறம் மனோரம்மிய அழகுடையது. குளிர்ச்சியான புறச்சூழலைத் தரும் என்பதே இங்கு கருத்து நிலை. ஆனால் இக்கட்டுரையின் பிடிவாதமோ குருத்தோலை பிளாஸ்டிக் (ஞெகிழி)என்ற இந்த மாறுபாட்டிற்கு முரண்படுவது அல்ல. மாறாக பண்பாடு என்று கருதிக் கொண்டு அல்லது சொல்லிக் கொண்டு குருத்தோலைத் தோரணம் பின்னுபவர்கள் அதன் குறியீட்டை உணராது வழுவுவதே ஆதங்கமாகும்.

குருத்தோலையில் செய்யப்படும் பின்னல்முறை அங்கு நிகழ்வது மரணவீடா அல்லது திருமண வீடா என்பதைக் குறியீடாகக் காட்டும். வெளியூரில் இருந்து வருபவர்களும் இரந்துண்போரும் ஒரு தெருவில் இரு நிகழ்வுகள் நடந்தாலும் சரியான வீட்டை இனங்கண்டு கொள்ள இப்பண்பாட்டு அலங்காரம் வழிவகுக்கிறது. ஆனால் இந்த வேறுபாட்டைக் கூடக் கருதாது மனம் போன போக்கில் குருத்துக்கள் பின்னப்படுவது பண்பாட்டை மறுக்கும் செயலாகும். இதை விட (ஞெகிலி) அலங்காரம் உத்தமமே. அடுத்து மங்கல விளக்கேற்றுதல் சகல நிகழ்வுகளுக்கும் முன்னதாக செய்யப் படும் ஒரு நிகழ்வாகும். இது மேல் நோக்கியதாகச் சுடர்களை ஏற்றுவதன் மூலம் நிகழ்வு முன்னோக்கியதாக அமைதல் வேண்டும் என்ற உணர்வெழுச்சியைக் குறியீடாகக் கொண்டு செய்யப்படுகின்றது. ஆனாலும் பல்வேறு நிகழ்வுகளில் ஒப்பனைக்கு அதிதிகளைக் கௌரவப் படுத்தும் ஒரு சம்பிரதாயமாக மட்டும் மங்கல விளக்கேற்றுதல் நடந்தேறி வருகின்றது.

பல தட்டுக்களை கொண்ட விளக்குகளாயின் முதலில் விளக்கேற்றுபவர் கீழ் நிலைத்தட்டுக்களையே ஏற்றுதல் வேண்டும். இதன் மூலம் மேல் நோக்கியதாக சுடர்கள் ஏற்றப்படுவது சாத்தியமாகும். ஆனால் இந்த வரன்முறைக்கு மறுதலையாகவே பல்வேறு நிகழ்வுகளில் மங்கல விளக்குகள் ஏற்றப்படுவதை அவதானித்திருக்கலாம். இது எந்த பௌதீக விளைவுகளையும் தராது என்பது யதார்த்த சிந்தனைக்கு சரி என்றாலும் சம்பிரதாயம் என்பதற்காக பின்பற்றும் மரபினைத் தவறுகளோடு செய்கிறோம் என்பது உறுத்தும் நிகழ்வே.பிறந்த தின வைபவங்களில் ஒளிரும் மெழுகுதிரியை ஊதி அணைத்து கேக் வெட்டுகிறோம். இப்படி தீபத்தை அணைத்து மங்கல நிகழ்வை ஆரம்பிக்கும் மரபு தமிழர்களிடம் உண்டா? என்பது இங்கு கனமான வினாவாகவே எழுகிறது. இதற்கு மாறாக தீபத்தை ஏற்றி அந்த மங்கல ஒளியில் கேக் வெட்டலாமே என்னும் கருத்தும் சிலரிடம் உண்டு.

பேணத்தகுந்த பண்டை மரபு முறைகள் குறித்தும் எதிர்காலத்தில் அவற்றை நிலை நிறுத்துவது பற்றியும் பல்துறைகளிலும் சேகரிப்பு ஊக்கம் முளைத்துள்ளது. இது பண்பாட்டுப் பேணலுக்குப் பொருந்துவதாகும். இந்தக் கருத்து நிலைகளிலிருந்து பண்பாட்டை நோக்கும்போது பண்பாடுகள் குறித்து மாறுபட்ட இரண்டு கருத்துருவாக்கங்கள் உருவாகலாம். அதாவது ஆதி தொட்டு பேணப்படும் மரபுரிமைகள்தான் பண்பாடா? அல்லது பண்படுத்துவதன் மூலம் காலங்காலமாக மாற்றப்பட்டு நிலைநிறுத்தப்படும் சமூக நிலைப்பாடுகள்தான் பண்பாடா? என்பனவே இவைகளாகும்.

பண்பாடுகள் குறித்து நிலவுகின்ற பலத்தரப்பட்ட வரைவிலக்கணங்களுக்கும் கருத்துக்களுக்கும் மத்தியில் சில வேளைகளில் பண்பாட்டையும் நாகரீகத்தையும் கலாச்சாரத்தையும் ஒரு விடயமாகப் பொதுமைப் படுத்தி கருதுவோரும் உளர். ஆழமாகப் பார்க்கும்போது பண்பாடு அகம் சார்ந்த வெளிப்பாடு (உதாரணம் அன்னதானம் செய்தல், கனம் பண்ணுதல்) ஆகவும் நாகரீகம் புறம் சார்ந்த வெளிப்பாடு (உதாரணம் ஆடை, அணிகலன்) ஆகவும் கலாச்சாரம் என்பது குறித்தச் சமூகத்தின் கலைகளும் ஆசாரங்களும் பற்றி கருதுவதாகவும் அமையலாம். ஆயினும் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டு திகழ்வதையும் காண முடியும். உதாரணமாகத் திருமணத்தின் பின்னர் தமிழ்ப் பெண்கள் கணவனை நினைவுறுத்துவதாகக் குங்குமம் வைத்தல் என்ற மரபு அகமும் புறமும் சார்ந்தது. ஆதலால் பண்பாடாகவும் நாகரீகமாகவும் கொள்ளக் கூடியது. இவ்வாறு நிறையவே எடுத்துக்காட்டலாம்.

தாலி, குங்குமம் முதலான விடயங்களை ஆணாதிக்க மேலாண்மையின் சின்னமாகப் புறக்கணிப்பவர்களை பெண் நிலைச் சிந்தனையின் எழுச்சியுடன் காண முடிகின்றது. உண்மையில் அனேகமாகப் பண்பாட்டு விழுமியக் கோட்பாடுகள் ஆதிக்கத்திலிருந்த சிறுபான்மையினரான உயர் ஜாதி மக்களாலும் ஆண் நிலை வக்கிர சிந்தனையாளர்களாலும் பெரும்பான்மையான மீதி மக்களின் மீது திணிக்கப்பட்டது எனும் குற்றச்சாட்டையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகவுள்ளது. இந்நிலையில் பேராசிரியர் மத்தியூ ஆர்னல்ட் கருதுவது போல மென்மேலும் திருந்தி வரும் திருத்த நிலையே பண்பாடு என்று கொண்டால் சாதியம் பெண்ணியம் மற்றும் சமயக் கருத்துக்களை, நிறுத்துப் பார்த்தல் முதலான கருத்து நலன்களில் திருத்தி நிலைப்பெற்ற மாற்றப் (சமூக நலன் குறித்த முன்னேற்றம்) போக்குக்கு தமிழர் பண்பாடும் இன்று வழி திறந்துள்ளதைக் காணலாம். இந்த திருந்திய அறிவு நிலையில் கூர்மையான தம் சாதிய எதிர்ப்பைக் காட்ட மங்கல பொருட்களுக்கு பதிலாக ஈர்க்குத் துடைப்பம், பாதணி, முதலான பொருட்களை வைத்து விழாவை ஆரம்பித்த நிகழ்வு ஒன்றும் அண்மையில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடந்தது. இந்த பண்பாட்டு முரண்படுகை பிராமணர் மனதிலும் பிராமணர் மேலாண்மையை ஆதரிப் போரிடையிலும் மங்கல பண்பாட்டு பொருட்கள் உயர்சாதி யினர்க்கே உரிய குறியீட்டுக்கூறுகள் என்ற முனைப்பை ஏற்படுத்துமே தவிர வேறு எதையும் ஏற்படுத்தாது என்றே தோன்றுகிறது.

பண்பாடு பற்றிய ஸ்பென்ஸரின் கொள்கையின்படி வேறுபட்ட பல நிலைப் பண்பாடுகளை ஒருவழிப்போக்கான வளர்ச்சியின் பல கட்டங்களே என்பதையும் ஒவ்வொரு காலகட்டத்தின் பண்பாட்டு நிலை பழைமை வரலாறு என்பவற்றின் விளைவு எனவும் அறிய முடியும்.

இங்குதான் பண்பாட்டு வளர்ச்சிகள் வேறு, வழுவல்கள் வேறு என்பதை நாம் உணர வேண்டியுள்ளது. இறுக்கமான சமூகக் கட்டுமானங்களும் சமூகப் பொருளாதார மாற்றங்களுமே பண்பாட்டு மீறல்களுக்கு இட்டுச் செல்கின்றன.

பெண்ணிலைவாதம் ஆணாதிக்கத்தை உடைத்தபோது லெஸ்பியம் அடையாளம் இடப்பட்டது. (மரபணு ரீதியில் 4-10 சதவீதக் குடித்தொகையினர் இயற்கையிலேயே பிறள்பாலுணர்வு உள்ளவர்களாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.) இவ்வாறான கால வழுவல்களையும் பண்பாட்டு வழுவல்களுக்குள் ஆராயலாம்.

சில கட்டுமானங்களுக்குள் நின்று அதன் புறநிலை குறித்தும் கருதிக் கொண்டு ஆராயாதவரை பண்பாடு பற்றிய ஆய்வுகள் மாயமான் போல் வழுவி வழுவிப் போவது தவிர்க்க முடியாததாகி விடும். பண்பாடு கொள்கின்ற தேவை கருதிய மாற்றங்களை ஏற்றுக் கொள்வதுடன் அதனை நிலைநிறுத்திப் பேண வேண்டியது தலையாயதாகும்.



* இயற்கை உணவு விரைவில் சமிபாடடைந்து விடுகிறது. சக்திகள் விரைய மாவதில்லை. இதனால் குறைந்தளவு உணவு போதுமானது. இயற்கை உணவு நம்மை அடிமைப் படுத்துவது இல்லை. இதில் அழிவுகள் மிகக் குறைவு. அதனால் நோய்கள் ஏற்படாது.

* இயற்கை உணவுகள் மூலம் இருதய நோய், புற்றுநோய், இரத்தச் சோகை, சிறுநீரகக் கோளாறுகள் போன்ற உயிருக்கு அபாயம் ஏற்படுத்தும் நோய்கள் தவிர்க்கப்படுகின்றன. எலும்புகள் மென்மையடைதல், மூட்டு வலிகள் போன்ற நோய்கள் ஏற்படாது. மேலும் பகை, பொறாமை, பழிவாங்கும் எண்ணம் ஏற்படாது. இதனால் மனம் உடல் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கும்.

* இயற்கை உணவுகளில் சோர்வு, பலவீனம் போன்றன நீங்கி அறிவு, ஞாபக சக்தி அதிகரிக்கும்.



பக்க அன்பளிப்பு : Ms.பரமேஸ்

படிப்பகம்

www.padippakam.com



அன்புடன்

## பெயரைக் காணோம்

எல்லோரும்தான் தோட்டப் பாட்டாளிகளை தங்களின் வசதிக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தே.நி.நிதிக் கூட்டுறவுக் கழகமும் இப்படியா? நெஞ்சு வலிக்கிறது.

பத்துப் பத்தாய் சேர்த்து கொடுத்தது இப்படி பாடாய் படவா...

குமாரி இராஜம்மாவின் 'மணிமன்ற' கட்டுரை புதிய தகவல்களைத் தந்தது. ஆனால் மணிமன்றம் ஆரம்பித்த காலத்தில் உழைத்த சை.பீர்.முகமதுவின் பெயரைக் காணோமே!

**- பெ.சா. சூரியமூர்த்தி, பந்திங்.**

## சமுதாயத்திற்காகப் போராடுவோம்

ஆண்களைச் சார்ந்து வாழ்கின்றவர்கள் பெண்களா? என்ற இந்த மாதிரியான தலைப்புகளை தவிர்த்து விடுங்கள். இன்றைக்கு எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் பெண்கள் எதையும் விட்டு வைக்கவில்லையென்றால் யாருக்கு யார் விட்டு வைக்கவில்லை? தாய் மகனுக்கு விட்டு வைக்கவில்லையா? தங்கை அண்ணனுக்கு விட்டு வைக்கவில்லையா? அல்லது மனைவி கணவனுக்கு விட்டு வைக்க வில்லையா? இது என்ன கருத்து? நாட்டுக்கே தலைவராகவும் பெண்கள் ஆட்சி புரிகிறார்கள். பிரிட்டன் நாட்டின் பிரதமர் மார்கிரட் தாட்சர், மறைந்த இந்திரா காந்தி, பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் அக்கியினோ, இன்றைய இந்தோனேசிய அதிபராக விளங்கும் மெகாவதி, தமிழகத்தை ஆட்டிப் படைக்கும் ஜெயலலிதா இவர்கள் அனைவரும் வெறும் பெண்கள். ஓட்டுக்களில் மட்டுமா பதவியை அடைந்தார்கள்? ஏன் வெளிநாட்டவர்களுக்கு செல்கிறீர்கள், உள்நாட்டிலே எவ்வளவோ பெண்கள் முக்கிய துறைகளில் இருக்கிறார்கள். தனித்து வாழும் தந்தைமார்கள் தனித்து வாழும் தாய்மார்களுக்கு ஆதரவு கொடுப்பதைப் பார்த்தது இல்லையா? அண்மையில் நமது அன்றாட செய்தியில் கணவனை இழந்த தாய்மார்களுக்கு உதவ PPP கட்சி தலைவர் டத்தோ M. கேவியஸ் அவர்கள் ஒரு புத்துணர்ச்சியுடன் ஒரு தகவலை வழங்கியிருக்கிறது. கணவனை இழந்த தாய்மார்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த கட்சி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது. இதை ஆதரிக்க பெண்களும் முக்கியத்துவம் கொடுக்க நாங்களும் விரும்புகிறோம். இதே நவம்பர் மாத செம்பருத்தி இதழில் நம் தமிழினம் சீரழிந்து போவதை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அந்த பக்கங்களை படித்துப் பாருங்கள். இப்பொழுது உள்ள சூழ்நிலையில் நாம் நம் சமுதாயத்திற்காக போராட போகிறோமா? அல்லது ஆண், பெண் வித்தியாசத்திற்கு போராட போகிறோமா? முடிந்தால் இதுவே கடைசியாக்கி இதோடு இந்த வித்தியாசத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம். நன்றி.

***- பி. சுப்பரமணியம்* (Pusat Pemulihan Akhlak), *ஜொகூர்.***

## இளந்தளிர் வளர்கிறது

கடந்த ஏப்ரல் மாதம் 2002 அன்புடன் பக்கம் 3-ல் என்னுடைய எண்ணங்களை வெளியிட்ட ஆசிரியர் குழுவினர்களுக்கு நன்றி. என் எழுத்துக்களை பார்த்த என் தம்பி மகன் தினேஷ் மாசாயிலிருந்து எனக்கு போன் செய்து பெரியப்பா உங்கள் பெயரை செம்பருத்தி இதழில் படித்தேன் என்று உற்சாகமாக கூறி மாதா மாதம் எழுதுவீர்களா என்று கேட்டார், அந்த மாசாய் தமிழ்ப்பள்ளி மாணவன். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் செம்பருத்தி இளந்தளிரையும் விரும்பி படிக்கிறார்கள் என்று. நான் செம்பருத்தியை படிக்கிறேன். இளந்தளிரை மாசாயில் இருக்கும் என் மருமகனுக்கு அனுப்பி வைக்கிறேன். எப்படியோ செம்பருத்தி இளந்தளிரையும் பலர் படித்து வருவது நமக்கு மகிழ்ச்சியே.

பிரேமா சித்திரை (மலாயாப் பல்கலைக் கழகம்) எழுதிய 'உங்கள் அன்பு வேண்டும்' கட்டுரையை படித்தேன். உங்களைப் போன்று சில மாணவர்கள் நான் வசிக்கும் பகுதியில் வசித்து வந்தார்கள். ஆனால் போனவர்கள் போனவர்கள்தான். எங்களை மறந்து விட்டார்களே!

***- எல்விஸ் மணியம், லாபிஸ் ஜொகூர்.***

## செம்பருத்திக்கு ஈழவனின் திறந்த மடல்

அன்புடன் செம்பருத்திக்கு, ஆக்கங்கள் அருமையாக உள்ளன. இன்னும் புதுமெருகு பெற்றால் காத்திரமாக இருக்கும், நான் ஈழத்தைச் சேர்ந்தவன், அவ்வப்போது உன்னையும் தரிசிப்பது வழக்கமாகி விட்டது. இலங்கையில் வெளிவந்த "தாய்மொழி" எனும் இந்திய "குமுதம், ஆனந்தவிகடன்" வடிவிலமைந்த சஞ்சிகையின் இணையாசிரியராக பணியாற்றிய சில அனுபவங்களை வைத்து உன்னுடன் கைகுலுக்கிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

செம்பருத்தியின் வாசகர்கள் நிச்சயம் தமிழர்களாகவே இருப்பார்கள், ஆகவே இந்தியர்கள் எனும் சொல்லாடலுக்குப் பதிலாக தமிழர்கள் எனும் பதத்தை பிரயோகிப்பது சஞ்சிகைக்குப் புத்துணர்ச்சி ஊட்டும். சஞ்சிகையின் வளர்ச்சி வாசகர்களிலே தங்கி இருப்பதால் வாசகர்களின் அதிக ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பது நல்லது. "கவிச்சோலை" படைப்பாளிகளுக்கு தெம்பூட்டுவது போன்று சிறுகதைப் பகுதியும் விரிவுபடுத்தப்பட்டால் சிறப்பாக இருக்கும், சிறுகதை என்பது குறுங்கதையாக இருப்பின் வாசகர்களின் எண்ணிக்கையை படிப்பினையால்கூட்டலாம், இதனையே இலங்கை இந்திய பத்திரிகைகளும் பின்பற்றுகின்றன.

அரசியல் கட்டுரைகள் மிகவும் அவசியம், அது சுவையாக இருந்தால்தான் படிக்கத் தூண்டும், நுனிப்புல் மேய்ந்தவுடனே கட்டுரையை முழுமையாகப் படிக்க வேண்டுமெனும் உணர்வு வாசகர்களுக்கு ஏற்பட வேண்டும், வேலையே வாழ்க்கையெனும் நேரமில்லாத யுகத்தில் இயந்திர கதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

ஆசிரியர் பகுதி காத்திரமாக காலத்துக்கேற்ற பத்தியாக இருப்பின் மிகவும் பொருத்தமாக இருக்கும், வாசகர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள், வாசகர்களின் கருத்து என்ன என்பதை ஊகித்து "ஆசிரியர் பத்தி" அமைய வேண்டும்.

சர்வதேச அரங்கில் தமிழர்கள் மீதான பார்வை அகலப்படுத்தியுள்ள இத்தருணத்தில் உலகத் தமிழர்களின் கலை கலாச்சார இலக்கிய நிகழ்வுகளை உள்வாங்கிக் கொள்வது நல்லது. தமிழர்களின் இன்னல்களையும் மக்கள் அறிய வேண்டுமென செம்பருத்தி வடிகால் அமைத்துள்ளது நல்லதுதான்.

***- ஈழவன் காசுதேவா, புக்கிட் மெர்தாஜம்.***

## சிவம் பிடித்த குடை!

இதுவரை எழுதாத என்னை எழுத வைத்தது பா.அ.சிவம் என்பவரின் படைப்பே!

'குடை' ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய படைப்பு! எடுத்ததற்கெல்லாம் வாரி வழங்குகிற சமுதாயத்தைச் சிந்திக்கத் தூண்டுவது திண்ணம் அவருடைய கருத்து!

தமிழ் பாயுதே, கலை பாயுதே தோட்டத்தில் திருவிழா, கண்டு கொண்டேன், தமிழ்ப்பள்ளிகள் என சிவத்தின் படைப்பு அனைத்திலும் சீரிய தமிழ்ப்பள்ளிகள் மற்றும் சமூகப் பார்வை! பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.

ஆசிரியர் அவர்களே! இவர் யார் என்ற சிறுகுறிப்பை, அவருடன் தொடர்பு கொண்டு வெளியிட்டால் மிக்க நலம்.

பா.அ.சிவம் சிறந்த எழுத்தாளராய் மிளிர என் வாழ்த்துக்கள். இவர் போன்றோர் சமுதாயத்தை வழி நடத்திச் சென்றால் திருந்தாத சமுதாயம் சிறக்கலாம்!

செம்பருத்திக்கும் - சிவத்திற்கும் நற்பணி தொடர வாழ்த்துகள்.

*(பா. சிவம் - மலாயா பல்கலைக்கழக சட்டபிரிவு மாணவர். தமிழ்ப்பள்ளியில் இருந்து வந்தவர். சுங்கை சிப்புட்டை சேர்ந்தவர்) - (ஆ-ர்)*

**- க. வேலுச்சாமி, ஆசிரியர், சிம்மோர், பேராக்.**

## சபாஷ்

செம்பருத்தியின் புதிய பரிணாமம் சற்றே ஏமாற்றத்தைத் தந்தது. கைக்கு அடக்கமாக, அழகாக, பளபளப்பாக இருந்த புத்தகம் பெரியதாக, ஒளி குன்றி போய்விட்டதே என்ற வருத்தம். புத்தகக் கடைக்குச் சென்றால் இதோ...இங்கிருக்கிறேன்' என்று கூறுவது போல தனித்தன்மையுடன் விளங்கிய செம்பருத்தியை இப்புது வடிவம் கொண்டு வரவில்லை. கடைக்காரரிடம் கேட்டு, எங்கிருக்குதென்று தேடி கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. இருப்பினும் மக்களிடம் சேர வேண்டியது கருத்தேயன்றி இதழின் கவர்ச்சி அல்ல என்பதும் எனக்குத் தெரியும். இந்த விஷயத்தில் செம்ருத்தியும் கடுகளவும்கூட சோடை போகவில்லை என்பது பூரிப்பிற்குரிய விஷயம். மாறாக, இதுவரை பேனா என்கிற ஆயுதத்தை எடுக்காதவர்களில் ஒரு சிலர் புதிது புதிதாகத் தோன்றத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதுதான் மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இவர்களை அடையாளங்கூட்டி, எழுதத் தூண்டிய செம்பருத்திக்கு ஒரு சபாஷ்.

மற்றொரு சபாஷ் எழுத்துப் பிழைகளைக் குறைந்தமைக்கு இப்போதைய செம்பருத்தியில் வெகுவாகக் குறைந்து காணாமல் போயுள்ளது. செம்பருத்தி குடும்பத்தினருக்கு மற்றுமொரு பாராட்டுகள்!

என் மனதை இவ்வளவு நாளும் அரித்துக் கொண்டிருந்த கருத்துகள் செம்பருத்தி வாசகர்களின் மூலமாக வெளிவரக் கண்டு ஆனந்தம் கொண்டேன்; மறுபடியும் எழுதும் ஆர்வம் கொண்டேன். மக்கள் மன்றம் பகுதியில் எழுதியிருந்த திரு. மணிமாறன், திரு. எம், கருப்பையா மற்றும் திரு. கே. ஜி. மணியம் போன்றவர்களின் கருத்துகளில் எனக்கும் ஒத்த உடன்பாடு உண்டு. குறிப்பாக, திரு. எம். கருப்பையாவின் கருத்துகள் ஒவ்வொரு அரசியல்வாதியையும் நிற்க வைத்து அறையக் கூடிய தகுதியைக் கொண்டனவாதம். ஒரு வேளை பிபி. அண்ணா, சங்கரன் மற்றும் நவமுகுந்தன் ஆகியோருக்கு நாள் சம்பளம் கொடுத்து, தோட்டத்தில் குடியிருக்க வைத்திருந் தால் இந்நிலை மாறியிருக்குமோ என்ற இவரது வாசகம் கைத்தட்டலைப் பெறத்தக்கது. உண்மையிலேயே, மக்களின் பெரும்பான்மையான குறைகள் களையப்படாமல் இருப்பதற்கு இதுதான் காரணம். செல்வத்தில் கொழிக்கின்ற இம்மாட மாளிகைகளுக்குக் குப்பை மேட்டின் வேதனை தெரியவும் இல்லை; தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டவும் இல்லை; அதனால் குறைகள் களையப்படவே இல்லை. தேர்தல் நேரத்தில் மட்டும்தான் மண்ணின் வாசனை இவர்களுக்குப் புரியும்; மற்ற நேரங்களில் கான்கிரீட் சாலைகளின் மின்னொளி மட்டுமே இவர்களின் கண்களில் வலம் வரும்.

திரு. எம். கருப்பையா அவர்களின் மணியான கருத்துகள் தொடர வேண்டும். அனைத்து செம்பருத்தி வாசகர்களுக்கும் பாராட்டுகள்! செம்பருத்தி குடும்பத்தினருக்கும் பாராட்டுகள். ஏட்டில் உள்ளது நிஜ வாழ்க்கையில் நடக்கும் காலம் கனிய வகை செய்யும் தெய்வத்துக்கும் ஒரு சபாஷ். நன்றி வணக்கம்!

***- சுதா இராம கிருஷ்ணனன், குளுவாங், ஜொகூர்.***

## செம்பருத்தியின் சேவை அவசியம்!

அன்புச்சால் ஆசிரியர் அவர்கட்கு,

முன்னைய செம்பருத்தி திங்கள்தோறும் கையடக்கப் புத்தக வடிவாய் வந்தபோது சேமித்து வைக்கும் புதினமாகத் திகழ்ந்து திகைப்புடன் தெளிவாய் மலர்ந்திருந்தது.

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் இதழ்கள் பிரித்திட வேண்டிய படிவங்களாக, படித்தவுடன் விரைந்து சேமித்து வைக்க முடியாது குப்பைத் தொட்டியை நாடுகின்ற நிலையை நேர்கின்ற நாயகமாக விளங்குவது குறித்து நெறுடுகிறது நெஞ்சம்.

செம்பருத்தியோடு நெடிய நெருங்கிய தொடர்பு இருந்தபோதிலும் பெயர் வர வேண்டும் என்பதற்காக பந்தா பண்ணும் அறிஞன், கல்விமான் அல்ல. யாருக்காவது பயன்பயக்கும் எழுத்துக் களை வழங்க வேண்டுமென்ற ரசிகன்.

பல தாதாக்களைப் பார்க்கிறேன். சமத்துவங்களைப் படிக்கிறேன். எழுதுவதுபோல் சமத்துவம் சமதர்மம் காணப்பட வில்லை. மக்கள் மனங்களில் பட்டிமன்றம் படியேறி விட்டதா? ஏறத்தான் விட்டார்களா கொக்கியாய் தொங்கி ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கும் காலம் மாறிட செம்பருத்தி சேவை அவசியம். மலரட்டும் செம்பருத்தி! மலரட்டும் மனங்கள்!

**- வீ. கோவி மணாளன், தலைநகர்.**



ங்க அன்பளிப்பு : *ராஜேந்திரன் - கண்ணன், மஸ்ஜிட் இந்தியா.*

படிப்பகம்

www.padippakam.com



## வேண்டுவன எல்லாம்...!

ஒரு மனம்
ஒரு சாதி
ஒரு கடவுள்

தூய்மையான தாய்மை
நம்பிக்கையான நட்பு
சுயநலமில்லா சுற்றம்.....!

என்றும் வாழும் தமிழ்
எழுத்துப் பிழையில்லாத் தமிழ்
எட்டுத் திசையும் தமிழ்
எவர் வாயிலும் மங்காத தமிழ்...!

தேயாத தேய்பிறை
தெவிட்டாத தேன்
தெருவெல்லாம் விளக்கு
வீதிக்கொரு நூலகம்...!

ஐந்தறிவு மனிதன்
ஆறறிவு மிருகம்....
உறங்கும் வரை

தாலாட்டு...
உறங்கிய பின்
ஒப்பாரி!

மலராத மொட்டு
மலர்ந்தாலும்
மடியாத மலர்..!

பிறந்தவுடனே எழும்
குழந்தை.....
இறப்பையும்
இயல்பென எண்ணும்
மனிதன்!

மதங்களை மறந்த
மனிதன்..
உழைப்பவனுக்கு
மூன்று வேளை

சோறு...!
பட்டணத்தில்
தூய்மைக்காற்று...
படுத்துறங்க தாய் மடி

பனித் துளியில்
படுக்கை
பசிக்கும் பொழுது
உணவு...
படுத்தால் தூக்கம்
தூக்கத்திலாவது
"நிம்மதி".......!
முதிர் கன்னிக்கு
முகூர்த்த நாள்...
விதவைக்கு
மறு வாழ்வு...

உலகெங்கும்
இளவேனிற் காலம்...

குற்றம் காணாத
மனிதன்....
குறைகூறாத
தமிழன்....!

தமிழனுக்கு
தாய் மொழிப் பற்று...
தமிழ்ப் பள்ளிகளுக்கு
விடிவு காலம்...
தமிழாசிரியர்களுக்கு
தமிழ் உணர்வு....
பெற்றோர்களுக்கு
"தமிழ்" என்ற நினைவு
சமுதாயத்தில் தமிழுக்கென்று
ஒரு சிம்மாசனம்!

நன்றி உணர்வோடு
மக்கள்.......
நாதிசையிலும்
நல்லவர்கள்.....

இன்னும்
பல கோடி ஆண்டுகளுக்குப்
பிறகும்....
தமிழைக் கற்க
நான்கு பேர்....
அதைக் காக்க
ஒரு
இரண்டு பேராவது....!
இதில் ஏதேனும்
ஒன்று நிறைவேறும் வரை
உடலில் உயிர்....
பிரிந்தாலும்
உறக்கத்திலேயே
பிரியும் உயிர்...
என்
இறுதி ஊர்வலத்தில்
நான்கு பேர்....!

***- சுவாசிப்பவன்,***
***சுல்தான் அப்துல் அலிம்***
***ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.***

## இறந்தகால இழப்புகள்!

ஒரு தாஜ்மஹால்...
ஒரு பிரமிட்...
இங்கே இறப்புக்கும்
இறந்தவனுக்கும் தான்
மரியாதை!

வாழ்வை பார்க்காமல்
வாழ்ந்தவர்களை பார்த்து....
நிகழ்காலம் இங்கு
நித்திரையில்!

அடைந்ததை எப்படியும்
ஆறடியில் இழக்க...
அற்ப ஆசைகள்
ஆணவ மனிதர்கள்!

உயிர் மனிதனை
மறந்து...
இறந்த சிற்பிகளை
பொறுக்கும்
சின்ன வயது செயல்களாய்
உரிமை கேள்விக்கு
"தமிழ்படம் போட்டாலே
போதும்!"

"அனைவரையும் சிலுவையில்
அறையுங்கள்...
இங்கு நானே ஏசு"
வருடச் செடி வளர வளர
வாழ்க்கை விதை
வேராகி,,, வேறாகி!

ஊர்குருவியை எரித்து
உயிர் வார்ப்புக்கு காத்துக்
கிடக்கிறது
சமுதாயம்....
"பினிக்ஸ்" பறவை
சிந்தனையில்!

இப்படி ஊனவார்த்தைகளே
உரசல்களாவதால்
எனக்குள் எழுகிறது
கவிதை!

***- ம. நவீன்***




## காகித கப்பல்

இதயம் முழுவதும்
புண்
மயிலிறகால்
மருந்து தடவுவதுபோல்
அடிப்பகுதியில்
குத்துகிறார்கள்

தோட்டப் பாட்டாளியின்
நூற்றாண்டு வேதனை
நுரைதள்ளி விட்டது

ஓடிவந்த
விடிவு
நொண்டிக் கொண்டிருக்கிறது

இவர்கள்
அரசியல்
அரச மரத்தை
சுற்றிச் சுற்றிக்
களைத்து விட்டார்கள்

போராட்ட கணவனோடு
இணைந்தும் விட்டார்கள்

இருந்தும்
எதிர்பார்ப்புகள்
கருதரிக்காத
சினை முட்டைகளாய்
நீர்த்துப் போகிறது

சிலர்
நுனிப் புல்
மேய்ந்து விட்டு
ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்

பெரியவர்களுக்கும்
நிலவை காட்டி
சோறு ஊட்டுகிறார்கள்

ஆனால்
நம்மில் பலருக்கு
விழிப்புணர்வு
இன்னும்
விடியாத இரவு

இ.ங்கே
உரிமைகள்
அடைபட்டுக் கிடக்கும்
பெட்டிகளை திறக்கவே
போராட வேண்டியது இருக்க

வன்முறையால் பெருகும்
சவப்பெட்டிகளை குறைக்க
காலம் சாகுது...

முட்களெல்லாம்
அழகுப்படுத்தப்பட்டு
பணமாகிக் கொண்டிருக்கிறது

நம்மினத்தில்
பூக்களெல்லாம்
முட்களாகி
ரணப்படுத்துகிறதே...!

திருத்த வேண்டும்
இவர்களை என்றால்
திருந்த வேண்டும்
பலர் இங்கே...

காகித கப்பல் செய்ய
பல கோடி....
கணக்குதான் வருகிறது....

கப்பல் ஏறி
ஒருவரும்
கரை சேரவில்லை...!

***- பெ.சா. சூரியமூர்த்தி,***
***பந்திங்.***

## சூரிய வம்சமா நிலவின் அம்சமா...

சூரியன்
உதிப்பதும்
உன் முகத்தில்
விழிக்கத்தான்......

நிலவு
விழிப்பதும்
உன் அழகை
ரசிக்கத்தான்...

தென்றல்
வீசுவதும்
உன் மேனியை
உரசத்தான்....

விண்மீன்கள்
ஜொழிப்பதும்
உன் மினுமினுப்பை
இரவல் வாங்கித்தான்....

உந்தன் மேனியில்
பட்டுத் தெறிக்கும்
மழைத்துளிகள்
சுவையில்லை
தேன்துளி...

திக்கு வாயும்
திருந்திவிடும்
தீந்தமிழ் உன் பெயரை
தினமும்
தியானித்தால்...

பௌர்ணமி நிலவு
ஓர் இரவே அழகு...
ஆயுள் முழுக்க
என் கண்மணி
நீ மட்டும் அழகு!

***- மு. துரைராஜு முனியன்,***
***கோத்தா திங்கி தோட்டம்***

## மூடம்

விழிக்கத் தெரியா

விழிகள்
இரவு பகல்கூட
ஜோதிடம் பார்த்தே
விழிக்கும்...

நடப்பதெல்லாம்
முன்கூட்டியே சொல்லிவிடுகிற
நடமாடும் தெய்வங்கள்...

விட்டால்
இவர்களுக்கும்
கட்டிவிடுவார்கள் கோயில்கள்...

தன்கை மறந்து
ஜோதிடமை
நாடுமிற 'அங்கவீனம்'

இவன் விடுதலைக்கு
விடை சொல்ல
கூண்டிலுள்ள கிளி...

எலுமிச்சக்காய்
பூசணிக்காய்
மந்திரத்தால் பழுத்திடும்
மாங்காய்...
காவச்சேவல்
மறுநாள் அடுப்பங்கரைச்
சமையல்

'மந்திரமாவது நீறு'
போலிச்சாமிகளின்
பொருளாதார பொருளீடு...

நடக்க மறுக்கும்
கால்கள்
'காளி கோயில்'
நம்பர் பார்த்தே நடக்கும்!

***- பா.அ.சிவம்.***

## பயத்தை விரட்டு!

கடற்கரை மணலாய்
சூரிய வெளிச்சத்தில்
சுடுகின்ற துன்பங்கள்.

தூலாக் கோலில்
உலகின் நடப்புக்கள்
காட்டுக் கழுதையாய்
குரல்கூட்டி கத்தியும்
காணாமலே போகின்றன
கரவொலிகள்.

கண்கள் தேடும்
உயிரின் சூத்திரம்
கருவோடு சினேகித்து
ஓட்டுக்குள் அடக்கம்.

ஜீவனுள்ள நம்பிக்கையில்
உயிர்கள்
புதுப்பிக்கப்படும்.

திறக்கப்படும்
விழிகளில் மட்டுமே
வெற்றிக் கொடி
விழாக் காணும்.

துன்பமில்லாத வாழ்வில்
இன்பத்திற்கு விலையில்லை

போராளிகள்
தீவிரவாதிகள்
அரசியல்வாதிகள்
சமயவாதிகள்

சரித்திரம் தேடி
எதிர் நீச்சல்
போடுவதை பார்

திராட்சைப் பழங்களை
வெறுக்காத நரிகள்

நீ மட்டும்
ஏன் கலங்குகிறாய்

துன்பங்களே துடுப்புக்கள்
தண்ணீரை நேசிக்காத
படகுகள் பாழாகும்.

கடலலைகள் காதலோடு
கண் விழிக்க
நீ ஏன் தூங்குகிறாய்
எழுந்திரு
கடல் பூக்களை அள்ளி
உன் மீதே
தூவிக் கொள்!

உலகம்
உன் கையில்!

***- வெ. தேவராஜலு,***
***பினாங்கு.***

## தமிழனே!

தாய் கருவில் உருவெடுத்தத்
தமிழனே!
உமக்கு எம்தாய்மொழி கற்கக்
கசக்கின்றதா!
அம்மா!
எனும் மூன்றெழுத்தில் அழைக்க
தெரிந்த
உமக்கு,
தமிழை கற்க மட்டும் ஏன் வெறுப்பு!
தமிழன் தமிழுக்காகப் பிறந்தான்,
ஆனால், நீ வேற்று மொழிகளுக்கு
இன்று
அடிமை நிலையில் இருக்கின்றாய்,
ஏன்?
நம் தமிழ் செல்வ மொழியை கற்க
இன்று தலைமறைவாக
இருக்கின்றாய்!
தமிழனே!
உன் நிலையை அறிவாயா!
இன்றும் ஏன் தாமதம்
புறப்படு உன் தமிழ் பூவுலகத்திற்கு
உமக்கு நிச்சயம் எல்லை மீறிய
எதிர்காலம் அமையும்

***- வளர்மதி சோனையன்,***
***கோல கெட்டில், கெடா.***



பக்க அன்பளிப்பு : *பிலிப் அமல்தாஸ், கோலாலம்பூர்.*

படிப்பகம்

# ம.இ.கா தலைவர்களும் தமிழ்ப்பள்ளிகளும்!

கேள்வி:
*மில்லியன் ரிங்கிட் பரிசுப் போட்டி!*

*நமது மஇகா தலைவர்களான டத்தோஸ்ரீ சாமிவேலு, டத்தோ சுப்ரா, டத்தோ பழனிவேலு, சோதிநாதன், டத்தோ மாரிமுத்து உள்ளிட்ட அனைவருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை என்ன? (ஒரு விடையைத் தேர்ந்தெடுக்கவும்)*

*A. இவர்கள் அனைவரும் சிகப்பிந்தியர்கள்.*

*B. இவர்கள் மலேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள்*

*C. இவர்கள் சென்னை சினிமா நடிகர்கள்.*

*D. இவர்கள் எவரும் தங்களது பிள்ளகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பவில்லை.*

*விடை D. ஆமாம். இவர்களில் யாரும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பவில்லை.*

காரணம்: வாசகர்களாகிய நீங்களே அவர்களை நேரில் கண்டு கேட்டறியுங்கள்.

ஆதாரம்: தமிழ்ப்பள்ளியில் படித்த மலேசிய இந்தியர் விபரக் கோவை! என்னும் தலைப்பில் செம்பருத்தி மஇகா தலைவர்களுக்கு ஒரு படிவத்தை 8-11-2001 ஒரு தடவையும் 5-12-2001ல் இரண்டாவது தடவையும் பூர்த்தி செய்து அனுப்பும்படி கேட்டிருந்தோம். டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம், T. ராஜகோபாலு, ஆர். ராகவன் ஆகிய மூவர் மட்டுமே படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினர்.

\ டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம் மூவாரில் உள்ள இந்திய சன்மார்க்க சங்கத் தமிழ்ப்பள்ளியில் பயின்றவர். தனது இரண்டு பிள்ளைகளில் ஒருவரைக்கூடத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பவில்லை. வீட்டில் ஆசிரியரை வைத்துக் தமிழ் சொல்லிக் கொடுக் கப்பட்டது என்று தெரிவித்திருக்கிறார்.

T.இராஜகோபாலு நெகிரியில் உள்ள சாகா தோட்டத் தமிழ்ப் பள்ளியில் பயின்றவர். தனது மூன்று பிள்ளைகளில் ஒருவரைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பியுள்ளார்.

ஆர். இராகவன் கெமுனிங் தோட்டத் தமிழ்ப்பள்ளியில் பயின்றவர். தனது ஐந்து பிள்ளை களில் நான்கு பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பியிருக்கிறார்.

இந்த மூவரைத் தவிர வேறு மஇகா தலைவர்கள் யாரும் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவில்லை.

முடிவாக என்ன தெரிகிறதென்றால் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப இரண்டு மாதங்கள் (60 நாள்கள்) இருந்தும் இவர்களால் இதைப் பூர்த்தி செய்து அனுப்ப முடியாத அளவுக்கு சமுதாயப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருக் கிறார்கள்.

அல்லது செம்பருத்தி தமிழ்ப் பள்ளிகள் மீது கொண்ட ஆர்வத்தினால் கேட்ட கேள்விகள் இவர்களுக்கு முக்கியமாகத் தோன்றவில்லை.

இந்த இரண்டுமே இதற்கான முக்கிய காரணமாக இருக்கிறது என்று செம்பருத்தி கருதுகிறது. இறுதி முடிவு செம்பருத்தி வாசகர்களிடமே விடப்படுகிறது.▼

**8-11-01**

**தலைமையகம்**
**மலேசிய இந்தியர் காங்கிரஸ்**
**டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் கட்டடம்,**
**கோலாலம்பூர்.**

அன்புடையீர் வணக்கம்.

'செம்பருத்தி' நவம்பர் மாத இதழை கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் இணைத்துள்ளோம். பெற்றுக் கொண்டு கையொப்பமிட்டு உறுதிபடுத்தவும்.

1. மாண்புமிகு S. ராஜகோபால்
2. டத்தோ எம். சுந்தரம்
3. டத்தோ V. கோவிந்தராஜ்
4. மாண்புமிகு சந்திரசேகர் சுப்பையா
5. மாண்புமிகு P.K. சுப்பையா
6. மாண்புமிகு டான் ஸ்ரீ நிஜார்
7. மாண்புமிகு S.A. விக்னேஸ்வரன்
8. மாண்புமிகு S.P. மணிவாசகம்
9. டத்தோ R. சின்னத்தம்பி
10. மாண்புமிகு எம். குப்புசாமி
11. மாண்புமிகு R. சுப்பையா
12. மாண்புமிகு V. ஜோதி
13. மாண்புமிகு S. வேங்கடசாமி
14. மாண்புமிகு செனட்டர் எம். ரத்தினம்
15. மாண்புமிகு செனட்டர் R. சின்னையா
16. மாண்புமிகு செனட்டர் K.R.A. நாயுடு
17. திருவாளர் A.S. அசோகன் (PRO)

MALAYSIAN INDIAN CONGRESS HEADQUARTERS
10 NOV 2001
RECEIV...

மேலே குறிப்பிட்டுள்ளவர்களுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொண்டேன்.

பெற்றுக் கொண்டவர் கையொப்பம்.

10/11/2001.

<u>**நினைவூட்டல் கடிதம்**</u>

**5-12-01**

**தலைமையகம்**
**மலேசிய இந்தியர் காங்கிரஸ்**
**டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் கட்டடம்,**
**கோலாலம்பூர்.**

அன்புடையீர் வணக்கம்.

'செம்பருத்தி' டிசம்பர் மாத இதழையும் தமிழ்ப்பள்ளியில் படித்த மலேசிய இந்தியர் காங்கிரஸ் பொறுப்பாளர் வினாப் படிவத்தையும் கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் இணைத்துள்ளோம். பெற்றுக் கொண்டு கையொப்பமிட்டு உறுதிபடுத்தவும்.

1. மாண்புமிகு டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு
2. மாண்புமிகு டத்தோ சி. சுப்ரமணியம்
3. மாண்புமிகு டத்தோ எஸ். வீரசிங்கம்
4. மாண்புமிகு டத்தோ ஜி. பழனிவேலு
5. மாண்புமிகு டான் ஸ்ரீ நிஜார்
6. மாண்புமிகு டத்தோ எஸ். சோதிநாதன்
7. மாண்புமிகு டான்ஸ்ரீ எம். மகாலிங்கம்
8. மாண்புமிகு கோமளா கிருஷ்ணமூர்த்தி
9. மாண்புமிகு டத்தோ நெல்சன் ரெங்கநாதன்
10. மாண்புமிகு ஜெயா பார்த்தியன்
11. மாண்புமிகு டான்ஸ்ரீ S.O.K. உபைதுல்லா
12. மாண்புமிகு டான்ஸ்ரீ டத்தோ G. பாசமாணிக்கம்
13. மாண்புமிகு டத்தோ ஜி. வடிவேலு
14. மாண்புமிகு டத்தோ K.S. பாலகிருஷ்ணன்
15. மாண்புமிகு டத்தோ G. ராஜு
16. மாண்புமிகு டத்தோ V. சரவணன்
17. மாண்புமிகு டத்தோ V.K.K. தியாகராஜன்
18. மாண்புமிகு டத்தோ M. செல்லதேவன்
19. மாண்புமிகு செனட்டர் டத்தோ டாக்டர் T. மாரிமுத்து
20. மாண்புமிகு டத்தோ ராஜகோபால்
21. மாண்புமிகு A. சிங்கதுரை
22. மாண்புமிகு டத்தோ K. முனுசாமி
23. மாண்புமிகு S. கிருஷ்ணசாமி
24. மாண்புமிகு டத்தோ R. ராகவன்
25. மாண்புமிகு டாக்டர் K. ராஜபதி
26. மாண்புமிகு டத்தோ M. சுந்தரம்
27. மாண்புமிகு டத்தோ K. சிவலிங்கம்
28. மாண்புமிகு டாக்டர் L. கிருஷ்ணன்
29. மாண்புமிகு டத்தோ V. கோவிந்தராஜ்
30. மாண்புமிகு V. தியாகராஜன்
31. மாண்புமிகு கமலா கணபதி
32. மாண்புமிகு R. கனேசன்
33. மாண்புமிகு M. தேவேந்திரன்
34. மாண்புமிகு T. ராஜகோபால்
35. மாண்புமிகு டத்தோ S. பாலகிருஷ்ணன்
36. மாண்புமிகு சந்திரசேகர் சுப்பையா
37. மாண்புமிகு P.K. சுப்பையா
38. மாண்புமிகு S.A. விக்னேஸ்வரன்
39. மாண்புமிகு S.P. மணிவாசகம்
40. மாண்புமிகு டத்தோ R. சின்னத்தம்பி
41. மாண்புமிகு எம். குப்புசாமி
42. மாண்புமிகு R. சுப்பையா
43. மாண்புமிகு V. ஜோதி
44. மாண்புமிகு S. வேங்கடசாமி
45. மாண்புமிகு E.M. யோகவேலு
46. மாண்புமிகு செனட்டர் எம். ரத்தினம்
47. மாண்புமிகு செனட்டர் M. சரவணன்
48. மாண்புமிகு செனட்டர் R. சின்னையா
49. மாண்புமிகு செனட்டர் K.R.A. நாயுடு
50. திருவாளர் A.S. அசோகன் (PRO)

மேலே குறிப்பிட்டுள்ளவர்களுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொண்டேன்.

பெற்றுக் கொண்டவர் கையொப்பம்.

நன்றி!

*- ஆசிரியர்*

**தமிழ்ப்பள்ளியில் படித்த**
**மலேசிய இந்தியர்கள் விபரக் கோவை!**

1. பெயர்........................................
2. ஆரம்பப்பள்ளி ........................ தமிழ் / ஆங்கிலம் மலாய் / சீனம்
3. ஆரம்பப்பள்ளியின் முகவரி........................................
........................................
4. பிள்ளைகளின் எண்ணிக்கை........................................
5. தமிழ்ப்பள்ளிக்குச் சென்ற பிள்ளைகள்........................................
6. மலாய் / ஆங்கில / சீனப் பள்ளிகளுக்குச் சென்றவர்கள்........................
........................................
7. அனைத்துலக ஆங்கிலப் பள்ளிக்குச் சென்றவர்கள்........................
8. பிள்ளைகள் எவரும் தமிழ்ப்பள்ளிக்குச் செல்லவில்லை என்றால் காரணத்தைச் சுருக்கமாகத் தெரிவிக்கவும்.
........................................
........................................
9. தமிழ்ப்பள்ளிகள் நிலைத்திருப்பதை ஆதரிக்கிறோம். ஆம் / இல்லை. ●

செம்பருத்தி நவம்பர் 2001

www.padippakam.com



# தன்னம்பிக்கையே வெற்றிக்கான முதலீடு

-வெ. தேவராஜுலு, பினாங்கு-

ஒரு திட்டவட்டமான லட்சியத்தைக் குறித்து உறுதியான, ஒழுங்கான கருத்து இருந்தால், அந்த லட்சியத்தை அடைவதற்கு உங்கள் ஆற்றலை ஒருமுகப் படுத்தி இயக்கும் உத்வேகம் ஏற்படும்.

*- லியானார்டோ டாவின்சி*

### தன்னம்பிக்கை உடையவர்களாயிருங்கள்

தன்னம்பிக்கை இல்லாத வாழ்க்கை, உயிரற்ற பிணத்திற்குச் சமம். எதற்கெடுத்தாலும் தோல்வியையே நினைத்து மனம் சோர்ந்து போகலாகாது. தோல்வி நமது எஜமான் அல்ல என்பதை, பொதுவாக மறந்தே போகிறோம். தோல்வியைப் பற்றிய எண்ணங்கள் நமது வாழ்க்கையைச் சிதைத்து விடும். வாழ்க்கையை வளப்படுத்துகிற எந்த நன்மையை பெற்றுக் கொள்ள வேண்டுமானாலும் தன்னம்பிக்கையே அதற்கு முதலீடு.

நமது தன்னம்பிக்கையை, கோபம், பாவம், பயம், கசப்பு, சோர்வு, துன்பம், மன அழுத்தம், மன இறுக்கம், பகைமை, கவலை, தனிமை, அதிருப்தி போன்ற எண்ணங்கள் விழுங்கி விடப் பார்க்கின்றன. இவைகள் தோல்வி மனப்பான்மையை இதயத்திற்கு கொண்டு வரும் இப்படிப்பட்ட எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளும்படி, நோர்மன் 'வின்சென்ட் பீல்ட்' பத்து ஆலோசனைகளைத் தருகிறார்.

* நீங்கள் தோல்வி அடையப் போவதாக நினைக்கவே வேண்டாம். உங்கள் மனதில் எதை நினைக்கிறீர்களோ அதை அது முடித்துக் கொடுத்து விடும். ஆதலால் எல்லா சூழ்நிலைகளிலும், ஒரு வேளை மோசமான சூழ்நிலையிலும் கூட வெற்றியையே சிந்தித்துக் கொண்டிருங்கள். மனம் அந்த வெற்றியை முடித்துக் கொடுத்து விடும்.

* உங்களுக்குள்ளேயே இருக்கும் மிகப் பெரிய, அபார சக்தியைக் குறித்து, தரக்குறைவான எண்ணங்கள் உங்கள் மனதில் உண்டாகுமானால், அப்படிப்பட்ட சிந்தனையை எதிர்த்துப் போராடி விரட்டி விடுங்கள்.

* நீங்கள் நன்மையான, வெற்றிகரமான எண்ணங்களை எண்ணும்போதோ, கற்பனை செய்யும்போதோ, வரும் எந்தத் தடைகளையும் உங்கள் உள்ளத்தில் அனுமதிக்காதீர்கள்.

மற்றவர்களைப் போல் இருக்க, அவர்களை பின்பற்ற முயற்சிக்காதீர்கள். உங்கள் சொந்தத் திறமையின் மேல் நம்பிக்கையாய் இருங்கள்.

என்னைப் பலப்படுத்துகிற சக்தியினால் எல்லாவற்றையும் செய்ய என்னால் முடியும் என்று ஒவ்வொரு நாளும் பத்து முறையாவது உங்களுக்கு நீங்களே கூறிக் கொள்ளுங்கள்.

* உங்களுக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்குமானால், அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

* கடவுள் நம்மீது அன்பாயிருப்பதினால் நமக்கு விரோதமாயிருப்பவர்களைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்.

* உங்கள் திறமைகளைக் குறித்து, நீங்களே உண்மையாய் ஆராய்ந்து கணக்கிட வேண்டும். நான், என்ற சுய கௌரவம் பாராட்டாமல் கடவுள் உங்களுக்கு கொடுத்திருக்கிற திறமைகளை வெளியே கொண்டு வாருங்கள்.

* தெய்வீக நீதிகள் உங்களுக்குள்ளேயே இருக்கிறது என்பதை நம்புங்கள்.

* கடவுள் உங்களோடு இருக்கும்போது உங்களுக்கு தோல்விகள் வர வாய்ப்பே இல்லை. உங்களுக்குத் தேவையான வல்லமையை இப்பொழுதே கடவுளிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். பெற்றுக் கொண்டோம் என்றும் நம்புங்கள்.

### தன்னம்பிக்கை உழைக்கச் செய்கிறது

தன்னம்பிக்கை உள்ள மனிதன், கடவுளை மட்டும் நம்பிக் கொண்டிருப்பதில்லை. தானும் உழைக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறான். தனது காரியங்களைத் தீர ஆலோசித்து, எப்படிச் செய்தால் வெற்றி பெறலாம் என்று வழிகளைக் கண்டறிகிறான்.

நம்மால் முடியாது, தோற்றுப் போவோம் தொலைந்து போவோம் என்ற கருத்தை, எதிர்மறை சிந்தனைகளை தூக்கி எறிந்து போடுங்கள். அதே சமயம் உங்கள் தகுதியை வளர்த்துக் கொள்வதில் கவனம் உள்ளவர்களாயிருங்கள். சரியான சந்தர்ப்பங்களை அறிந்து, உணர்ந்து அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில், போராட்டங்களே உங்களை திறமையான வழியில் அழைத்துச் செல்ல ஏற்ற துணைவனாக இருக்கிறது. போராட்டங்களைக் கண்டு அசந்து விடவோ, பயந்து விடவோ செய்யாதீர்கள். முன்னேற வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் போதாது. தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டும். தொடர்ந்து வெற்றிக்கு பாதை அமைக்க தொடர்ந்து உழைக்கத் துணிவும் அறிவும் வேண்டும்.

சோம்பேறிகளின் துணிவும், ஒழுக்கமற்ற அறிவும் கொண்டு வருகிற வெற்றி தற்காலிகமே என்பதை மறக்கக் கூடாது. உழைப்பாளிகளுக்கு வருகிற எந்த தோல்வியும் நிரந்தரமானதல்ல.

ஆபிரகாம் லிங்கன் வறுமையில் வாடியவர். பிறந்தது முதல் தனது நாற்பதாவது வயதுவரை கடன் தொல்லைகளால் கஷ்டப்பட்டார். கடன்களை அடைக்கத் தெரியாமல் அவதிப்பட்ட லிங்கன், விடா முயற்சியுடனும் - நேர்மையுடனும் உழைத்ததால் தனது ஐம்பத்தோராம் வயதில் அமெரிக்க ஜனாதி பதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தாமஸ் ஆல்வா எடிசனுக்கு ஆறு மாத பள்ளிப் படிப்புக்குப் பின், தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் போட்டுக் கண்டுபிடித்த, வாக்குச்சீட்டுகளை எண்ணும் எலெக்ட்ரானிக் கருவியை, மற்ற விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ளாததால் வறுமையின் பள்ளத்தாக்கில் விழுந்தார். ஆயினும் விடா முயற்சியோடு, தனக்கு காது கேட்காத சூழ்நிலையிலும் சுமார் ஆயிரத்து தொண்ணூற்று மூன்று கண்டுபிடிப்புக்களை உலகத்திற்கு அறிமுகப்படுத்தி வாழ்க்கையில் உயர்ந்தார்.

தன்னம்பிக்கையோடும், உண்மையோடும், நேர்மையோடும், உழைத்த பின்னும் ஏற்படுகிற தோல்விகளெல்லாமே வெற்றியையே வழி நடத்தும் .

நீங்கள் பெறப்போகும் வெற்றியை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

### கேளுங்கள்..... உதவி வரும்

ஒருவர் உதவியை மற்றொருவர் பெறாமல் வாழ முடியாது. ஏதாவது ஒரு வகையில் மற்றவர் உதவியை பெற்றே தீர வேண்டியுள்ளது. கேட்கிற எல்லா உதவிகளையும் செய்வார்கள் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. வெற்றி பெறுவதற்கு தேவையான, முடிந்த உதவியைச் செய்தாலே போதுமானது அல்லவா!

யாரிடம் உதவி கேட்கலாம் என்பதும் முக்கியமல்லவா? எவரிடமும் உதவி கேட்கலாம். உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை தொனித்தால் அதே சமயம் கேட்கும் முறை என்று ஒன்றிருக்கிறது. டாக்டர். எம். ஆர். காப்மேயர் அதைச் சொல்லித் தருகிறார்.

### பணிவான குரலில் மரியாதையுடன் கேளுங்கள்

தயவு செய்து என்ற வார்த்தையைப் போட்டு விட்டால் மட்டும் போதாது; மிகுந்த வணக்கத்துடன் கேட்க வேண்டும்.

### எதிர்பார்ப்புடன் கேளுங்கள்

உங்கள் குரலிலும் அணுகுமுறையிலும் மரியாதையுடனும் எதிர்பார்ப்புடனும் நாம் கேட்பதை இவர் கண்டிப்பாக அதுவும் மகிழ்ச்சியுடனும் செய்வார் என்ற நம்பிக்கை தொனிக்க வேண்டும்.

### நியாயமாகக் கேளுங்கள்

விடுக்கின்ற கோரிக்கையாகட்டும், கேட்கின்ற முறையாகட்டும்; இரண்டுமே பகுத்தறிவுக்குப் பொருத்தமானவையாக இருக்க வேண்டும்.




**சேவல் கூவியது.**

**'நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது...' என்று கதிரவன் பூரித்துப் போனான்.**

**மாலை வந்தது.**

**கதிரவன் மேற்குத் திசையின் மூலையில் கவிழ்ந்தான்.**

**சாயும் போது -**

**'நான் விழுகிறேனே..... என்னைத் தாங்க யாருமே வரமாட்டார்களா' என்று ஏங்கினான்.**

**சேவலை அவன் எதிர்பார்த்தான்.**

**வரவில்லை.**

**விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான்:-**

**'எழும்போது தாங்க வருகிறவனெல்லாம் விழும்போது தாங்க வருவதில்லை'.**

காசி. ஆனந்தன்



க்க அன்பளிப்பு : விஜயன், சுங்கை பூலோ

படிப்பகம்

நீங்கள் கேட்டீர்கள் என்பதற்காக நியாயமில்லாத காரியங்களை யாரும் செய்யப் போவதில்லை. பொருத்தமற்ற கோரிக்கைகளைத் தொடர்ந்து விடுத்துக் கொண்டிருந்தீர்களேயானால் விரும்பத் தகாத விளைவுகள் நேரும்.

**இதமாகக் கேளுங்கள்**

அடித்துக் கேட்காதீர்கள். நீங்கள் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள்.

**இனிமையாகக் கேளுங்கள்**

உங்கள் குரலிலோ, தோரணையிலோ வற்புறுத்தல். இருக்கலாகாது வற்புறுத்தல் எதிர்ப்பை விளைவிக்கும். எதிர்ப்பு, நீங்கள் விரும்புவதற்கு நேர் எதிரானது. உங்களுக்கு வேண்டியது உடன்பாடு, ஒத்துழைப்பு, நட்புக் கலந்த இணக்கம்.

**நம்பிக்கையுடன் கேளுங்கள்**

நீங்கள் கேட்பதைச் செய்ய மற்றவர்கள் விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் உடன்படுவார்கள் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருப்பதை, ஒவ்வொரு வகையிலும், குரலாலும் கேட்கின்ற முறையாலும் உணர்த்துங்கள்.

**உறுதியாகக் கேளுங்கள்**

இதுவே மிக முக்கியமான, அதே சமயம் மிகக் கடினமான உத்தியாகும். உங்கள் கோரிக்கை நியாயமானதும், அர்த்தமுள்ளதும், பொருத்தமானது மாகும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதோடு, கேட்டது கிடைக்கும் வரை நீங்கள் இன்முகத்துடன் விடாமல் கேட்டுக் கொண்டே இருப்பீர்கள் என்பதை உணர்த்துவதாகவும் அமைய வேண்டும்.

இதைச் சாமர்த்தியமாகச் செய்ய வேண்டும். நீங்கள் விடாக்கண்டன் என்ற உணர்வையும் ஏற்படுத்தி, அதே சமயம் கட்டாயப் படுத்தாமலும், வாதப் பிரதி வாதங்களில் ஈடுபடாமலும், பண்பாக, காரணகாரியங்களைக் கூறி நியாயமாகவும் இனிமை யாகவும் கேட்கப் பழகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்குப் பழக்கமாகி விட்டால் உங்கள் வேண்டுகோளை நிராகரிப்பதைக் காட்டிலும் அதை ஏற்றுக் கொள்வது மற்றவர்களுக்கு சுலபமானதாகி விடும்.

உங்களுக்கு வெற்றி நிச்சயம். பொதுவாகவே உங்கள் கோரிக்கைகளுக்கு இணங்கி விடுவது அவர்களுக்கு சுலபமாகி விடும். என்றாலும் சில கொடாக் கண்டர்களும் இருக்கவே செய்வார்கள். அவர்களை விட்டு விலகி வேறு ஆளைப் பார்ப்பது நல்லது. அதற்காக மனம் தளர்ந்து போவது மதியீனமாயிருக்கும்.

உங்கள் கோரிக்கைகளுக்கு இணங்கா விட்டாலும், அவர்களிடம் உங்கள் வெறுப்பை மட்டும் காட்டாதிருங்கள். எதிர்ப் புணர்ச்சியைக் காட்டாதிருங்கள். பதட்டப் படாதிருங்கள். கோபப்படாதிருங்கள்.

ஒரு வேளை உங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் கூட உபத்திரவம் கொடுக்கமாட்டார்கள். குறைந்த பட்சம் மற்றவர்களிடம் உங்களைப் பற்றி உங்கள் முயற்சியைப் பற்றி, தேவைப்பட்டால், சூழ்நிலை உண்டாகி விட்டால், நல்ல வார்த்தையைக் கட்டாயம் சொல்லுவார்கள். அது கூட உங்கள் முயற்சிக்கு ஒரு விதைதான் என்று அறியுங்கள். அதற்கு மீறியும் சில சமயங்களில் பொறாமைக் காரர்கள் வலையில் உங்களையும் அறியாமல் விழுந்து போய் விடுவீர்கள். அதற்கும் மிஞ்சினால் எதிர்த்து நில்லுங்கள். எதிரி உங்களை விட்டு ஓடிப் போவான். போராளிக்கு எப்போதுமே தோல்வி என்பதே இல்லை.

மீண்டும், மீண்டும் நம்பிக்கையின் பாலத்தின் மீது நடனம் ஆடுங்கள். வெற்றி உங்களுடையதே!


## செம்பருத்தி மாத இதழ் நடத்தும் குறுநாவல் போட்டி!

மலேசிய குறுநாவல் இலக்கியத்துக்கு முதல் தடவையாக RM 5000.00 பரிசாக வழங்கப்பட இருக்கிறது!

* முதல் பரிசு RM 2000.00
* இரண்டாவது பரிசு RM 1000.00
* மூன்றாவது பரிசு 500.00 (இரண்டு குறுநாவல்களுக்கு)
* ஆறுதல் பரிசு RM 200.00 (ஐந்து குறுநாவல்களுக்கு)

போட்டி இறுதி நாள் : 31-07-2002

போட்டி விதிமுறைகள்:

* ஒவ்வொரு குறுநாவலும் 40 பக்கங்களுள் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். ஒளியச்சு அல்லது தட்டச்சு செய்யப் பட்டதாயின் 20 பக்கத்துக்குள் இருப்பது விரும்பத்தக்கது.

* குறுநாவலின் கதைக் கரு மலையக மக்களின் யதார்த்த வாழ்வைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

* குறுநாவலை எழுதியவரின் பெயர், முழு முகவரி, தனித்தாளில் எழுதப்பட்டு அடையாள அட்டை நகலுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

* குறுநாவல் சொந்தக் கற்பனையில் உருவானது என்பதற்கான உறுதிக் கடிதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

* மலேசியக் குடியுரிமை, அல்லது நிரந்தர வசிப்புரிமை (PR) பெற்றுள்ளவர்கள் மட்டுமே போட்டியில் பங்குபெற இயலும்.

* பரிசு பெறும் படைப்புகளின் பிரசுர உரிமை செம்பருத்தி பதிப்பகத்தைச் சேர்ந்தது.

* நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகக் கொள்ளப்படும். போட்டியின் இறுதிநாளான 31-07-2002க்குள் எமக்குக் கிடைக்கப்பெறும் படைப்புகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். போட்டி முடிவு நாள் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்பட மாட்டாது.

* போட்டியின் பரிசுத்தொகை இதற்கென அறிவிக்கப்படும் சிறப்பு விழாவின்போது வழங்கப்படும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:

செம்பருத்தி குறுநாவல் போட்டி

Unit 2-6-8 Menara KLH Business Centre,
No. 2, Jalan Kasipillay, Off Jalan Ipoh
51200 Kuala Lumpur.


## ஆரோக்கியமான வாழ்விற்கு சிரியுங்கள்

## சிரித்து மகிழுங்கள்

நமது முன்னோர்களும் கவிஞர்களும் சிரிப்பைப் பற்றி பலவாறாக விவரித்துள்ளனர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பாடலான 'சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' சந்திரபாபுவின் "சிரிப்பு வருது சிரிப்பு வருது!" என்.எஸ். கிருஷ்ணனின் "வாய் விட்டு சிரிச்சா நோய்விட்டு போகும்" போன்ற பாடல்கள் அனைத்தும் எவ்வளவு ஆழமான கருத்துகளைக் கொண்டது என்பதை நம்மவர்கள் புரிந்துக் கொண்டார்களோ இல்லையோ மேற்கத்திய மருத்துவ ஆராய்ச்சி யாளர்கள் நன்றாகவே புரிந்துக் கொண்டனர்.

மருத்துவ ரீதியில் மனம் விட்டுச் சிரிப்பது மருத்துவரின் மருந்தைவிட வலிமையானது என் கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஸ்டேன்போர்ட் (Stamford) பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் பேராசிரியர் வில்லியம் பிரே (William Fry) சிரிக்கும்போது ஒருவரின் இரத்த ஓட்டம் சீரடை கிறது மற்றும் இருப்புத் தசைகள் இறுகி விரிகின்றன என்கின்றார். நூறு முறை வயிறு குலுங்க சிரிப்பது, 10 நிமிட ஏரோபிக் பயிற்சிக்கு சமம் என்கின்றார் இவர்.

1997-ஆம் ஆண்டு 48 இருதய நோயாளிகளிடையே ஓர் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இவர்களில் 24 பேருக்கு ஒவ்வொரு நாளும் 30 நிமிடத்திற்கு நகைச்சுவை நிறைந்த திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டது. ஏனைய 24 பேருக்கு எவ்வித திரைப்படமும் காண்பிக்கப்படவில்லை. ஒருவருடத் திற்கு பிறகு நகைச்சுவை படம் பார்க்காத குழுவில் இருந்த 10 பேருக்கு மாரடைப்பு நோய் தாக்கியது. நகைச்சுவை படம் பார்த்த குழுவில் 2 பேருக்கு மாரடைப்பு நோய் தாக்கியது.



மன உளைச்சலுக்குச் சிரிப்புதான் நல்ல மருந்து எனக் கண்டுப் பிடிக்கப்பட்டுள்ளது. சிரிப்பு வரவழைக்கும் நகைச்சுவைப் படங்கள் பார்ப்பது, நகைச்சுவைத் துணுக்குகள் படிப்பது, இருதய நோய் வருவதைக் கட்டுப்படுத்துகிறது என்கிறார் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லீ பேர்க் (Lee Berg) என்ற ஆராய்ச்சியாளர். இருதய நோய் சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்குத் தரப்படும் Beta-blockers மருந்தைப் போல சிரிப்பது பலன் அளிக்கின்றது.

குழந்தைகளுக்கு சிரிப்பை வரவழைக்கக் கூடிய படங்கள் அவர்களின் நோயின் தன்மையை குறைத்து, ஆரோக்கிய நிலைக்கு மீண்டும் செல்வதைத் துரிதப்படுத்துகிறது.

மன அழுத்தமா? மன உலைச்சலா? நகைச்சுவை நடிகர்களின் நகைச்சுவையும் அட்டகாசங்களும் அடங்கிய குறுவட்டுகளை (VCD) வாங்கிப் பாருங்கள். சிரியுங்கள், சிரித்து மகிழுங்கள். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.



பக்க அன்பளிப்பு : மோகன், கோலாலம்பூர்

www.padippakam.com



## 'A Beautiful mind'



ஓர் உண்மைச் சம்பவத்தைப் பின்னனியாகக் கொண்டு இயக்கப்பட்டது 'A Beautiful mind' என்கிற திரைப்படம் இந்தப் படத்தில் நடித்த கதாநாயகன் ரஸ்சல் குரோவிற்கு (Russell Crowe) 2002 கேலப்டன் குளோப் விருது கிடைத்தது. இந்தப் படத்திற்கு மட்டும் 4 விருதுகள் கிடைத்தது. 'Gladiotar' என்கிற படமும் குரோவிற்கு ஒரு வெற்றிப் படமாகும்.

ரோன் ஹோவார்ட் (Ron Howard) இந்தப் படத்தை இயக்கியுள்ளார். 'Apollo 13' 'Ransom' போன்ற விறுவிறுப்பான படங்களை இயக்கியவர் இவர். இந்தப் படத்தின் கதாநாயகி ஜெனிபர் கோன்னலி (Jennifer Connelly) கதைக்கு இன்னும் மெருகூட்டியுள்ளார். இந்தப் படத்தில் நடித்த அனைவரும் தத்தம் திறமைகளைப் போட்டிப் போட்டுக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

உலகப் புகப்பெற்ற கணிதமேதை ஜோன் போர்பஸ் நாஸ் (John Forbest Nash) வாழ்க்கையை சித்தரிக்கிறது இப்படம். இக்கனித மேதைக்கு 1994-ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர் கணிதத் துறையில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்று பிரின்ஸ்டன் (Priston) பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் போது தீவிரமான மனநோயால் (paranoid schizophrenia) பாதிக்கப்பட்டார். தன்னால் மட்டுமே உணரக்கூடிய நபர்கள் தன்னிடம் பேசுவது போல ஒரு பிரமையால் உந்தப்பட்டு விசித்திரமான காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தார்.

இம்மனநோய் இவரது இல் வாழ்க்கையை அதிகம் பாதித்தாலும் இவரது மனைவி அலிசியா (Alicia Larde), பக்கத்திலேயே இருந்து உளவியல் ரீதியிலும் மற்றும் எல்லா வகையிலும் உதவி புரிந்தார். இவர் மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தாலும், தனது மனநிலையைக் கட்டுப்படுத்தி சாதாரண வாழ்க்கையை வாழ்வதற்குப் போராடி, அதில் வெற்றியும் பெற்றார். இவரின் இப்போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றிதான் 1994-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நோபல் பரிசு.

இவர் வாழ்க்கையில் இன்னொரு துரதிஷ்டவசம் என்னவென்றால் இவரின் 42 வயது மகன் (John Charles Martin Nash) ஜோன் சார்ல்ஸ் மார்ட்டின் நாஷ், இவரின் தந்தைப் போல மனநோய்க்கு ஆளாகினார். இவரும் இவரின் தந்தையைப் போல ஒரு கணித மேதைதான். தனது தந்தைதான் தனது வாழ்வின் வெளிச்சம் என விவரிக்கின்றார்.

வாழ்க்கையில் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டு மனம் துவண்டு போகும் நமக்கு ஜோன் நாஷ்சின் வாழ்க்கை ஒரு தன்முனைப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இப்படம் நம்மை அழவும், சிரிக்கவும் கைத்தட்டவும் வைக்கிறது. இது குடும்பத்தோடு காண வேண்டிய ஒரு திரைப்படம்.▾

## வானொலி பரிசு பெறும் செம்பருத்தி வாசகர்

செம்பருத்தி வாசகர் போட்டி இலக்கம் 1-இல் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் நன்றி. மிகச் சரியான விடை எழுதிய 44 பேர்களில் லோகேஸ்வரன் - ரவாங், கிருஸ்னன் கோவிந்தராஜன் - சிலாங்கூர், ஜெயா குப்புசாமி - செராஸ், விஜயா சுப்பிரமனியம், நெகிரி செம்பிலான், தமிழ்ச்செல்வி பெருமாள் - சுங்கை ஆகிய ஐவரை செம்பருத்தி நிர்வாக ஆசிரியர் தேர்ந்தெடுக்க அவரில் அதிர்ஷ்டசாலியான விஜயா சுப்பிரமணியத்தின் எண்ணை பொறுப்பாசிரியர் மணியம் சின்னப்பன் தேர்ந்தெடுத்தார். வெற்றியாளர் விஜயாவுக்கு வாழ்த்துகள்.

சரியான பதில்கள்:

1. 319 பேர்
2. உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன்
3. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்றுத்தரப்படுபவை கல்வி அல்ல! அதற்கான ஒரு வழிதான் *- அறிஞர் எமர்சென்.*

வெற்றியாளர்: விஜயா சுப்பிரமணியம், செமின்ஜே, நெகிரி செம்பிலான்.

வெற்றியாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. செம்பருத்தி பணிமனைக்கு நேரில் வந்து பரிசினைப் பெற்றுச் செல்ல அழைக்கப்பட்டுள்ளார்.

## மனிதனுக்கு
### மரம் எழுதும் கடிதம்



அன்பில்லாத மனிதனுக்கு!
நலமில்லை நலமறிய அவாவுமில்லை!

விதையாய் இருந்தும்
மண்ணைப் பிளந்து
விண்ணை நோக்கி
எழுந்தவர்கள் நாங்கள்.

வானத்தை கிளைகளால் வளைத்து
பூமியை வேர்களால் துளைத்து
வீரத்தை உலகுக்குச் சொன்னவர்கள்.

கிளைகளால் கூடுகளை அணைத்து
இலைகளால் விசிறிக் காத்து
பறவைகளைத் தாலாட்டி
பாசத்தைச் சொன்னோம்.

பூக்களை உதிர்த்து
பூமிக்கு நன்றி சொல்வோம்.

காற்றின் மகரந்தத் துகள்களை
காதலோடு புணர்ந்து
கனிகளை ஈந்து தந்தோம்.

உலகத்தின் நுரையீரல்கள் நாங்கள்
கரியமில வாயு எங்களுக்கு
பிராண வாயு உங்களுக்கு எனப்
பகிர்ந்தளித்தோம்.

மேகங்களோடு கூடிப் பேசி
மழையினைப் பெய்யச் செய்தோம்.

பட்டு வீழ்ந்தாலும் உங்களுக்குப்
பயன்பட்டேதான் வந்திருக்கின்றோம்
காசுதான் உங்கள் தேவை என்றால்
கைகளை (கிளைகளை)
வெட்டிக் கொள்ளுங்கள்.

அடிவயிற்றில் கோடாரியை வீசி
அடியோடு சாய்க்காதீர்கள்.

மற்றவை நேரில்
இப்படிக்கு தங்களன்பில்லா,
மரங்கள்.

- மா. சண்முகசிவா -



பக்க அன்பளிப்பு : *திரு. கணேசன், பூச்சோங்.*

படிப்பகம்

www.padippakam.com



இறுக்கப் பிடித்துக் கொண்டார்கள். அவள் ஜார்ஜ் மாமாவின் கையைக் கடித்தாள்.

"பொட்ட நாயே" ஜார்ஜ் சத்தம் போட்டார். அந்த இளம் இந்தியனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நிக் சுடுதண்ணீர் பாத்திரத்தை அப்பாவுக்காகப் பிடித்துக் கொண்டு நின்றிருந் தான். அது ரொம்ப நேரம் பிடித்தது.

நிக்கினுடைய அப்பா குழந்தையை வெளியில் பிரித்தெடுத்து அது மூச்சு விடுவதற்காக கொஞ்சம் லேசாகத் தட்டிக் கொடுத்தபடி அந்த வயதான பெண்மணியிடம் கையளித்தார்.

"ஒய் நிக், இங்க பாரு குழந்தை ஆண்பிள்ளைடா", அவர் மகிழ்வுடன் சொன்னார். மேலும் நிக்கின் அப்பா கேட்டார்., "நீ ஒரு இளம் மருத்துவ உதவியாளனாக எப்படி உணருகிறாய்?"

நிக் சொன்னான், "எல்லாம் சரிதான். நல்லாவே" அவன் அவனுடைய அப்பா செய்து கொண்டிருந்ததையே பார்க்கவில்லை. அவன் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அங்க.... ஆமாம். அதான். வந்துருச்சி" என்று சொல்லிக் கொண்டே அவனுடைய அப்பா எதையோ எடுத்து கொதிநீர் பாத்திரத்திற்குள் போட்டார். நிக் அதைப் பார்க்கவே விரும்பவில்லை.

"இப்ப சில தையல்கள் போட்டா கனும். உன்னால இத பார்க்க முடியுமோ முடியாதோ, அது உன்னோட விருப்பத்தைப் பொறுத்தது. நான் இப்ப தையல் போட்டாகனும்." நிக் பார்க்கவேயில்லை. அவனுடைய அறியும் ஆர்வம் ரொம்ப நேரத்திற்கு முன்னரே பறந்து விட்டது.


அவனுடைய அப்பா முடித்துவிட்டு எழுந்து நின்றார். ஜார்ஜ் மாமாவும் மற்ற இரண்டு இந்தியர்களும் எழுந்து நின்றார்கள். நிக் கொதிநீர்பாத்திரத்தை அடுக்களைக்குள் கொண்டு சென்று வைத்தான்.

ஜார்ஜ் மாமா அவரது கையை பார்த்துக் கொண்டார். அந்த இளம் இந்தியன் மீண்டும் நினைத்துப் பார்த்தபடி சிரித்தான்.

"நான் அதுமேல கொஞ்சம் பெராக்சைடு போட்டு விடறேன் மிஸ்டர் ஜார்ஜ்" என்று டாக்டர் சொன்னார்.

அவர் அந்த இந்தியப் பெண்ணைக் குனிந்து உற்றுப் பார்த்தார். அவள் இப்பொழுது அமைதியாக இருந்தாள். அவளது கண்களை இமைகள் மூடியிருந்தன. அவள் பார்ப்பதற்கு வெளிறிக் கிடந்தாள். அவளுக்குத் தெரியாது, குழந்தைக்கு என்னவானது, குழந்தை எப்படியிருக்கிறது என்ற எதுவுமே தெரியாது.

"நான் நாளைக்கு காலைல திரும்பி வருவேன்" என்று மருத்துவர் சொன்னார், "நாளைக்கு மதியம் நர்ஸ் வருவாள். அவள் நமக்குத் தேவையானது அனைத்தும் கொண்டு வருவாள்."



அவர் பெருமை வாய்ந்தவராக தன்னை உணர்ந்தார். மேலும் கால் பந்தாட்ட வீரர்கள் விளையாட்டு முடிந்து உடை மாற்றும் அறையில் ஒருவருக்கொருவர் அரட்டையடித்துக் கொள்வதைப் போல சந்தோஷமாக பேசினார்.

"நான் இப்ப இந்தக் குழந்தை யோட பெருமைவாய்ந்த அப்பாவைப் பார்க்க வேண்டுமே அவங்கதான் - அப்பாக்கள்தான் - இந்த மாதிரி நேரங்கள்ல ரொம்பவும் துடிச்சுப் போயிடுராங்க. நான் இப்ப குழந்தையோட அப்பாவைப் பார்த்து "நீ எல்லாத்தையும் அமைதியா தாங்கிக்கிட்ட" அப்படின்னு சொல்லனும்" அவர் அந்த இந்தியனின், மேல்தட்டில் படுத்திருந்த (குழந்தையின் அப்பாவின்) போர்வையைப் பிடித்து இழுத்தார். அவருடைய கைகள் ஈரச்சொதசொதப்புடன் வந்தது. அவர் கீழ்த்தட்டுப்பலகைமுனையில் காலை வைத்து எம்பியபடி, ஒரு கையில் விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி மேல்தட்டுப்பலகையின் மீது பார்வை யைச் செலுத்தினார். அந்த இந்தியனின் முகம் சுவரை நோக்கித் திரும்பியிருந்தது. அவனது தொண்டை காதிலிருந்து காதுவரை அறுபட்டு கழுத்திலிருந்து இரத்தம் வழிந்து அவனது உடலின் கீழ் குளமாகிக் கிடந்தது. அவனது தலை அவனது இடது கரத்தில் சாய்ந்து கிடந்தது. அவிழ்க்கப்பட்ட கத்தி, படுக்கைவிரிப்பில் ரத்தம் நனைந்து கிடந்தது.

"ஜார்ஜ், நிக்கை குடிசையிலிருந்து வெளியே அழைச்சிட்டுப் போயிடுங்க" என்று மருத்துவர் சொன்னார்.

அதற்கு அவசியமே இல்லை. நிக் குசினியின் கதவுக்கருகில் நின்றிருந்தான். அங்கிருந்த மேல்தட்டுப்படுக்கையை பார்ப்பதற்கு வசதியாயிருந்தது. அவனுடைய அப்பா ஒரு கையில் விளக்கைப் பிடித்துக் கொண்டு அந்த இந்தியனின் தலையை எதிர்புறமாக திருப்பிப் பார்ப்பதை அவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். அவர்கள் அந்த சாலையிலிருந்து கடந்து ஏரிக்கரையை நோக்கி திரும்புகிறபோது விடியத் தொடங்கியது.

"நிக், உன்ன என்னோட கூட்டிவந்ததுக்கு ரொம்ப வருத்தப்படுகிறேன். இது ஒரு பயங்கரமான சிக்கலாக முடிந்து விட்டது."

அறுவைக்குப் பிறகு அவரிடம் காணப்பட்ட வெற்றிக் குதூகலம் காணாமல் போயிருந்தது.

"பெண்கள் எப்போதும் குழந்தை பெறுவதில் இதுமாதிரி கஷ்டம் அனுபவிக்கிறாங்களா?

"இல்ல. அது எப்போதாவது சில நேரங்கள்ல இதுமாதிரி".

"அவன் ஏன் அவனை கொன்னுக் கிட்டாம்பா?"

"எனக்குத் தெரியாது. நான் நெனைக்கிறேன் அவனால இந்த மாதிரி விஷயங்களைத் தாங்கிக்கிற மனோசக்தி இல்லைன்னு"

"எல்லா மனிதர்களும் அவங்களே தற்கொலைப் பண்ணிக்கிறாங்களா, அப்பா?

"இல்ல. எல்லா மனிதர்களும் இல்ல, நிக்"

"எல்லாப் பெண்களும்?"

"எப்பவும் இல்ல"

"அப்ப அவங்க தற்கொலைப் பண்ணிக்கிறதில்லே?"

"ஆமாம், சில நேரங்கள்ல மட்டும்"

"அப்பா"

"ம்... சொல்லு"

"ஜார்ஜ் மாமா எங்க போனாரு?"

"அவர் வந்துடுவாரு"

"அப்பா, சாவறது கஷ்டமா?"

"இல்ல. அது ரொம்ப சுலபம். ஆனா எந்த மாதிரிங்கறதப் பொறுத்தது" அவர்கள் படகில் அமர்ந்தார்கள். நிக் உட்காரும் பலகையில் அமர்ந்தான். அவனுடைய அப்பா துடுப்பிட்டார். மலைகளுக்கு மேலே கதிரவன் எழுந்தான். ஒரு மீன் எம்பிக் குதித்து நீரில் வளையம் உண்டாக்கியது. நிக் தண்ணீரை அவனது விரல்களால் நீவினான். கடுமையான சில்லிட்டக் காலைப் பொழுதிலும் அது வெதுவெதுப்பாய் இருந்தது. நிக் நினைத்துக் கொண்டான் "நான் நிச்சயமா சாவ மாட்டேன்.▼

## கண் துடைப்போ!



சரிகை நூலில்
மறைக்கப்பட்ட
வாடிய மலர்...

வெளிச்சம்
வராத அளவில்
குளிர் காயும்
கோமான்கள்...!

பெரும்பான்மை
ஓலத்தில்
ஒடுங்கியது
அரிச்சந்திரன்
குரல்!

நவமணிகளில்
ஒரு மணி
நடுநாயகமாய்...!

பணிக்கப்பட்ட
வகையில்
கட்டப்பட்ட
மாலை...!

**கே.எஸ். மணியம்**
டாமன்சாரா டாமாய்,
பெட்டாலிங் ஜெயா.

* எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள். அதில் தவறில்லை. ஆனால் எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பயப்படுவதால் உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும்.

❖❖❖

* மகிழ்ச்சி என்பது பூட்டு மாதிரி, அறிவு என்பது சாவியைப் போல. அறிவுச் சாவியை எதிர்ப்புறம் திருப்பினால் அது மகிழ்ச்சியைப் பூட்டி விடும். அதே சாவியைச் சரியான பக்கம் திருப்பினால் மகிழ்ச்சிக்கான கதவுகளை அது திறந்து விடும்.

❖❖❖

* தோல்வி என்பது தள்ளிப் போடப்பட்டிருக்கும் வெற்றி! அவ்வளவுதான். அதனால் உற்சாகம் இழக்க ஒன்றுமில்லை.

❖❖❖

* நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டுமென்றால் அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அதுமுடியா விட்டால்கூடப் பரவா யில்லை. ஆனால் எவரையும் புண்படுத்தி விடாதீர்கள்.

❖❖❖

* வளர்ப்புப் பிராணிகளைப் போல நல்ல நண்பர்கள் எவரும் இல்லை. ஏனெனில் அவை வினாக்கள் தொடுப்பதில்லை. விமர்சனமும் செய்வதில்லை.

❖❖❖

* வாழ்க்கை என்பது ஒரு கண்ணாடி. நீ சிரித்தால் அது மகிழ்ச்சியைப் பிரதி பலிக்கும். அழுதால் சோகத்தையே பிரதிபலிக்கும்.



பக்க அன்பளிப்பு : திரு. கனா, கோலாலம்பூர்.

படிப்பகம்

www.padippakam.com



# இரத்தத் தீவு 5

நீண்ட வீதியில் ஆறு பேர் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தோம். இடது பக்கத்தில் தென்னை மரங்கள் நின்றன. வலது புறம் கடனீரேரி காணப்பட்டது.திடீரென வாகனமொன்று வந்து நின்றது. அது இந்திய இராணுவத்தின் ஜீப். புலிகள் உடனடியாகச் செயற்பட்டனர். ஒருவர் மாறி மற்றவருக்கு சைகை செய்துவிட்டு சைக்கிள்களை கீழே வீசியெறிந்து விட்டு வயல்களுக்குள் ஓடி விட்டனர். நானும் சியாமும் ஒரு கணம் ஒருவரையொருவர் பார்த்து விட்டு அவ்வாறே நாமும் செய்தோம். சைக்கிள்களைப் போட்டு விட்டு புலிகளின் பின்னால் எம்மால் முடிந்த அளவிற்கு வேகமாக ஓடினோம். எமது பையை காவிச் சென்றவர் அதனை எறிந்து விட்டு ஓடியதால் அவரால் வேகமாக ஓட முடிந்தது. இடுப்பளவு ஆழமான ஏரியில் குதித்த புலி உறுப்பினர்கள் வாத்துக்கள் போன்று சென்றனர். ஏன் அவர்கள் நீந்தவில்லையென்பது எனக்குத் தெரியாது. ஏனென்ற கேள்வியின்றி நாமும் அவர்களைப் பின்பற்றினோம். நான் எனது செருப்புகளைத் தொலைத்து விட்டேன். எமது கடவுச்சீட்டுக்கள், பணத்துடன் இருந்த சிறிய பையை கவனமாகப் பிடித்துக் கொண்டு நடந்து சென்றேன். சியாம் ஓடியதால் அவரின் காமரா பை தண்ணீருக்குள் நனைந்து விட்டது. அவருடைய காமராக்களும், உபகரணங்களும் சேதமாகிவிட்டன.

அன்று நான் ஓடியது போன்று எனது வாழ்நாளில் ஒரு போதும் ஓடியதில்லை. நாம் அக்கரையை அடைந்தபோது திரும்பிப் பார்த்தேன். ஜீப் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தது. மூன்று அல்லது நான்கு படை வீரர்கள் எமக்குப் பின்னால் ஓடி வந்தனர். நிற்குமாறு எமக்குச் சத்தமிட்டு கட்டளையிட்டனர். வானத்தை நோக்கி சில எச்சரிகை வேட்டுக்களைத் தீர்த்தனர். நாம் ஏதோ தப்புச் செய்து விட்டோம் என்பது தெளிவானது. ஏனெனில் நாம் ஓடிய விதம் அவ்வாறாக இருந்தது. ஏன் அவர்கள் எம்மைச் சுடவில்லையென்ற காரணத்தை காலம் கடந்தே கண்டுபிடித்தேன்.

புலிகளின் தலைமைத்துவமும், இந்தியப் படையினரும் இருநாள் போர் நிறுத்தத்துக்கு அச்சமயம் இணங்கியிருந்தனர். அன்றைய தினம் இரண்டாவது நாளாகும். நவம்பர் 26 பிரபாகரனின் பிறந்த தினமாகையால் சில சமயம் ஏதாவது விடயமிருந் திருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும் நானும், சியாமும் இன்று உயிருடன் இருப்பது போர் நிறுத்தத்திற்கு இந்தியப் படையினர் அன்று கௌரவம் கொடுத்த தாலாகும். தாங்கள் பின் தொடர்ந்தது புலிகளின் குழுவை என்று தெரிந்திருந்தும் கூட அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர். ஏரியை விட்டு வெளியேறிய நாங்கள் வயல்களினூடாக சிறிய வரம்புகளில் நடந்து சென்றோம். உயிர்வாழ்வதற்குரிய உந்து சக்தியின் தன்மையை அன்று நான் விளங்கிக்



கொண்டேன். ஏனெனில், வெறுங்காலுடன் என்னால் நடக்க முடியாது. மெரு கூட்டப்பட்ட தரையிலேயே என்னால் வெறுங்காலுடன் நடக்க முடியாது. தரையில் நடக்கும் போது மிகவும் அசௌகரியமாக இருக்கும். அம்புகள் போன்று சிறிய கற்கள் எனது பாதத்தைத் துளைத்து விடும்.ஆனால், இங்கு முட்களும், கற்களும் நிறைந்த பாதையில் நான் ஓடினேன். எனதுசேலையை முழங்கால் வரை உயர்த்திப் பிடித்தவாறு ஓடினேன்.

சரசாலை என்ற கிராமத்தை அடைந்தோம். நாம் வேகமாக ஓடி வந்ததைக் கண்டு ஆட்கள் வியப்புடன் எம்மைப் பார்த்தனர். இந்தியப் படையினர் எம்மைத் துரத்தி வருவதாகவும் அவர்களுக்குத் தவறான மார்க்கத்தைக் காட்டுமாறும் புலிகள் அவர்களுக்குக் கூறினார்கள். நாம் கிராம வீதிகள் வழியாக ஓடிச்சென்று புறம்போக்கான பகுதியை அடைந்தோம். 6 அடி உயரமான முட்கம்பி வேலி எம்முன்னால் இருந்தது. அவற்றை அறுக்காமலே குரங்குகள் போன்று தாவி அவற்றில் நுழைந்து பாய்ந்தார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. அந்த வேலியில் ஏறிப் பாய்வதற்கான வழியும் இல்லை. சியாம் ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு உள்ளே நுழைந்து விட்டார். சகலரும் என்னைப் பாய்ந்து வருமாறு வலியுறுத்தினர். என்னால் முடியவில்லை. எப்படியென்பதும் எனக்குப் புரியவில்லை.

நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. இந்திய சமாதானப் படையினர் வருவதை எம்மால் உணர முடிந்தது. என்னை ஏறிப் பாயுமாறு கேட்பது பயனற்றதென்பதை உணர்ந்த இரு புலி உறுப்பினர்கள் திரும்பவும் முட்கம்பி வேலியில் ஏறினர். தமது கைகளைப் பற்றிப் பிடிக்குமாறு என்னிடம் கூறினர். எனது சேலையை ஒதுக்கிக் கட்டினேன்,. பின்னர் இரு புலிகளின் தோள்களிலும் பிடித்துக் கொண்டு அவர்களின் கைகளில் ஏறினேன். பின் பாய்ந்தேன். காற்றில் பறந்து மற்றப் பக்கத்தில் வீழ்ந்தது போன்று இருந்தது. நான் கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்காக என்னை ஏந்திப் பிடிக்க தயாராக வின்சன்ட் நின்றார். அவர் கீழே விழுந்து கிடக்க நான் அவர் மீது விழுந்தேன். எனது சேலையின் ஒரு பகுதி முட்கம்பியில் சிக்கி விட்டது. விலகிய நான் எனது சேலையையும் முட்கம்பியிலிருந்து விடுவித்துக் கொண்டேன். வின்சன்ட்டைப் பார்த்தபோது அவர் அப்போதும் நிலத்தில் கிடந்தார். சிலுவை அடையாளம் போட்டவாறு காணப்பட்டதை அவதானித்தேன். நான் சிரித்தேன். அவர் தம்மை மன்னிக்குமாறு கடவுளையும், பிரபாகரனையும் மௌனமாகப் பிரார்த்தித்தார்.

நாய் குரைக்கும் சத்தம் மிகச் சமீபகாலமாக நெருங்கி வந்தது. கால்களைத் தட்டிவிட்ட வின்சன்ட் ஓடத் தொடங்கினார். நாமும் வயல் வெளியூடாக மீண்டும் ஓடினோம். வீடொன்றை அடைந்தோம். அது வின்செண்டின் தந்தை கனகரட்ணத்தின் வீடு. அவர் ஒரு ஆசிரியர். அவரின் இளைய மகள் அம்பி அவருடன் இருந்தாள். ஆனால், அங்கிருப்பது பாதுகாப்பற்றதாகத் தோன்றியது. இந்தியப்



- கவிஞர் பெ.மு. இளம்வழுதி, பத்தாங் பெர்சுந்தை.

உலகிற்கே பொதுமறையாம், நீதி சொல்லும்
ஒப்பற்ற திருக்குறளைப் பெற்ற வன்நீ!
நலம்தேற்றும் காப்பியங்கள் ஐந்தைக் கொண்ட
நற்குடியின் மரபுவழிப் பிறந்த வன்நீ!
இலக்கணத்தை வழுவின்றிக் கற்றே வாழ,
ஏற்பாம்தொல் காப்பியத்தை வரித்த வன்நீ!
வலம்போகும் எல்லோனின் ஒளியைப் போலும்,
வாழ்கின்ற இலக்கியங்கள் பெற்ற வன்நீ!

கல்லாடம், கலித்தொகையும் பத்துப் பாட்டும்,
கவினிறைந்த நல்வழியும், நற்றி ணையும்,
சொல்லாடும் கலிங்கத்துப் பரணி மற்றும்
துள்ளுகின்ற நற்றமிழில் பெற்ற வன்நீ!
வெல்லும்நல் வீரத்தின் புறநா னூறு,
விளையுமறம், காதலுக்கும் அகநா னூறு,
ஒவ்வாமை யில்லாத வாழ்வ மைக்க
உரியநல்ல பழம்நூல்கள் அடைந்த வன்நீ!

தொன்றுதொட்டு சிறந்தோங்கும் அன்பில், பண்பில்,
துவளாத நற்குடியில் பிறந்த வன்நீ!
குன்றெனவே உயர்ந்தநல்ல குணத்தைப் பெற்றுக்
கோலோச்சி வாழ்ந்தகுடி உதித்த வன்நீ!
நின்றிங்கே இழுக்கத்தை இரு கை யேந்தி
நெடுங்கேடு தமிழனெனத் திகழ லாமா?
வன்தொட்டு வாழுகின்றாய்! இழிகின் றாயே!
வளமார்ந்த உன்னினந்தான் தாழு தையோ!

எவ்வளவோ பெருமைமிகு வழியின் தோன்றல்,
இழிவுசெய்யும் சீர்கேட்டைத் தழுவ லாமா?
செவ்வழியில் வாழ்ந்த இனம் சீர்கு லைந்தே
செழிப்பிழந்து பழிச்சேற்றில், புதைய லாமா?
ஒவ்வாத வன்முறையை ஒழித்தே, நாளும்
உள்மனத்தே சிந்தித்தால் தெளிய லாமே!
செம்மைமிகு நீதிநெறி, பண்பில் வாழ்ந்தால்,
தேய்தலிலா நல்வாழ்வில் ஓங்க லாமே!



பக்க அன்பளிப்பு : திரு. இராஜன் AIA , கோலாலம்பூர்.

படிப்பகம்

www.padippakam.com



படையினர் சுற்றுப்புறங்களில் விசாரிக்கும் போது யாராவது வின்சென்டின் வீட்டைக் காட்டி விடும் நிலைமையும் இருந்தது. ஆதலால் சுமார் ஒரு மைல் தூரத்திற்கப்பால் இருந்த தனது சிநேகிதியின் வீட்டிற்கு அம்பி எம்மைக் கூட்டிச் சென்றாள். அங்கு இரவு தங்கினோம்.அம்பியின் நண்பி சுமதிக்கு 25 வயதிருக்கும். திருமணமாகவில்லை. தனது தந்தையுடன் வசித்து வந்தாள். தந்தையார் முதியவர். அத்துடன் கண்பார்வையும் இல்லை. சுமதியின் இரு சகோதரர்களும் இயக்கத்தி லிருந்தவர்கள். இருவருமே இறந்து விட்டனர். அவளின் தாயார் நீண்ட காலத்துக்கு முன்பே இறந்து விட்டார்.

சுமதி எளிமையான உணவை எமக்குப் பரிமாறினாள். சோறும், கொஞ்சம் வித்தியாசமான சுவையுடைய மரக்கறியும் கொடுக்கப்பட்டது. நாம் அதிகம் பேசவில்லை. மங்கலான வெளிச்சத்துடன் இருந்த அந்த அறையில் பிரகாசமற்ற நிலைமையே காணப்பட்டது. திரைச் சேலைகளோ, மேசை விரிப்போ காணப்படவில்லை. விளக்கு வெளிச்சத்தில் சுவர்களில் கருநிழல்கள் விழுந்திருந்தன. அந்த வெளிச்சத்தில் சுமதி சியாமை மிக ஏக்கத்துடன் பார்வையை செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.



அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் மாப்பிள்ளைகளுக்குப் பெரும் தட்டுப்பாடாக இருந்தது. அவளின் பார்வையை சியாம் நிச்சயமாக அவதானித்திருக்க வேண்டும். சாப்பாட்டுத் தட்டிலிருந்து பார்வையை அவர் மேலுயுர்த்தவில்லை. மரக்கறி வகைகளை அவர் சாப்பிடாமல் தவிர்த்துக் கொண்டதிலிருந்து என்னிலும் பார்க்க அவருக்கு சுவை அதிகளவு பிடிக்கவில்லையென்று தோன்றியது.

எமது உணவை முடித்துக் கொண்ட சிறிது நேரத்தில் வின்சன்ட் இருவருடன் திரும்பி வந்தார். நாங்கள் அந்த வீட்டின் வெளிப்புறத்திலிருந்த சிறிய வீட்டிலேயே தூங்க வேண்டுமென வின்சன்ட் கூறினார். இராணுவம் சோதனைக்கு வரக்கூடுமெனவும் அச்சந்தர்ப்பத்தில் சுமதிக்கும், தகப்பனுக்கும் அதனால் இடையூறு ஏற்படக்கூடுமெனவும் அவர் தெரிவித்தார். நாங்கள் அகப்பட்டுக் கொண்டால் நாம் பத்திரிகையாளர்களெனவும், யாழ்ப்பாணத்திற்கு போகும் வழியில் இந்த வெளிப்பகுதியில் இருக்கும் சிறிய வீட்டில் தங்கியதாகக் கூறிக் கொள்ளலாம் என்று கூறிய வின்சன்ட் நாளை காலை 9 மணிக்கு வருவதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

கிடுகால் வேயப்பட்ட வெளிப்புற வீட்டிற்கு நானும், சியாமும் சென்றோம். அங்கு சுவர்கள் இல்லை. சில மரப்பலகைகளும், மரத்தால் செய்த வாங்கொன்றும் இருந்தது. எம்மால் முடிந்தவரை தூங்கினோம்.

**ஆறாவது நாள்**

அதிகாலை தேநீர் தயாராக இருப்பதாக சுமதி எம்மிடம் வந்து கூறினாள். நாம் வீட்டுக்குள் சென்று தேநீர் குடித்த பின் கைகால் கழுவி விட்டு மீண்டும் வெளிப்புற வீட்டிற்கு வந்து வின்சன்டின் வரவுக்காகக் காத்திருந்தோம். நேரம் மிக மெதுவாக ஊர்ந்தது. அவர் வந்து கவலையான செய்தியை எம்மிடம் சொன்னார். புலிகள் எம்மைக் கைவிடுகின்றனர். நாம் மேலும் பயணத்தைத் தொடர்வது சாத்தியமானதல்ல. அந்தக் கிராமத்தை இந்திய இராணுவம் சுற்றி வளைத்திருந்தது. அவர்கள் தவறான முடிவுக்கு வந்திருந்ததாலேயே இது ஏற்பட்டது.

அக்கிராமத்தவர்களை இந்தியப்படை விசாரித்த போது புலிகள் குழுவொன்று வேகமாக ஓடி வந்ததை அக்கிராம மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன் புலிகளுடன் வேறு இரு புதியவர்களும் இருந்ததாகவும் அவர்களை அப்பகுதியில் முன்னால் பார்த்ததில்லை யெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு இளம் பெண்ணும், தடித்த மீசையுடன் ஒருவரும் காணப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர். இந்தியப் படையினரோ இரண்டும், இரண்டும் ஐந்து என்று கணக்குப் போட்டனர். ஓடிச் சென்ற ஜோடி பிரபாகரனும், அவரின் மனைவியுமே என்ற தீர்மானத்திற்கு இந்தியப் படையினர் வந்து விட்டனர். (அந்தச் சமயத்தில் பிரபாகரனின் மீசை முக்கிய அம்சமாகவிருந்தது) அந்த ஜோடி சமீபத்தில் எங்கேயோ பதுங்கியிருக்க வேண்டுமென அவர்கள் நினைத்திருந்ததால் அப்பகுதியை முற்றுகையிட்டு வீடு வீடாகத் தேடுதலை ஆரம்பித்தனர்.

சரசாலைப் பகுதிக்கு ஆயிரக்கணக்கான துருப்புகள் வந்திருப்பதாக வின்சன்ட் கூறினார். நாங்கள் சரணடைவதே சிறந்ததென வின்சன்ட் கூறினார். தமது முயற்சி தோல்வியடைந்தமைக்கு அவர் மன்னிப்புக் கோரினார். நாம் யாழ்ப்பாணத்தை அடைய முடியவில்லை. தனியாகச் சென்று பிரபாகரனைச் சந்திக்கவும் முடியாது.

எம்மிடம் விடைபெற்றுக் கொண்டு வின்சன்ட் சென்று விட்டார். அது அவரின் "மரணத்துடனான சந்திப்பாகும்". கனகாலத்திற்குப் பின்பே அவரின் தந்தையார் மூலம் அவர் இறந்ததைக் கடிதம் மூலம் அறிந்தேன். நாங்கள் இறுதியாகச் சந்தித்த காலையில் வெளியேறிய வின்சன்ட் இராணுவத்தினர் ரோந்து சென்ற வழியாகச் சென்றுள்ளார். அவருடன் கூடச் சென்றவர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டார். ஆனால், வின்சன்ட் பிடிபட்டுவிட்டார். உடனடியாக அவர் சயனைட்டை விழுங்கி விட்டார். பின்பு இந்தியப் படையினர் அவரின் தந்தையைப் பிடித்துச் சென்று வின்சன்டின் சடலத்தை அடையாளம் காட்டுமாறு கூறியுள்ளார்.

தமது மகனைப் பற்றி கனகரத்தினத்திற்கு மிகவும் பெருமையாக இருந்தது. சில வருடங்களுக்கு முன்பு தனது மகன் படிக்கும் மேசையின் இழுப்பறைக்குள் இரு கைக்குண்டுகளைக் கண்டபோது அவர் மிகவும் கவலையடைந்ததாகவும் அவர் பின்னர் நான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்த சமயம் அவரைச் சந்தித்த போது கனகரத்தினம் எனக்குக் கூறியிருந்தார். அவ்வாறு கைக்குண்டுகளைக் கண்டபோதே மகன் இயக்கத்தில் இணைந்திருந்தமை தகப்பனுக்கு தெரியவந்தது.

வெளிப்புற வீட்டில் இருந்த மரவாங்கில் நானும், சியாமும் அமர்ந்திருந்தோம். என்ன நடக்கப் போகிறது என்ற ஆவலுடன் இருந்தோம். நாம் சுற்றிவளைக்கப்பட்டிருந்தோம். நாம் இருந்த ஓலைக்கூரை வீட்டிற்கு வெளியே படையினரின் சப்பாத்துச் சத்தம் கேட்ட வண்ணமிருந்தது. சகல வழிகளிலும் அவர்கள் வந்து போவதை எம்மால் உணர முடிந்தது. அங்கு இருப்பதிலும் பார்க்க வெளியே போய் சரணடைவது சிறந்ததென நான் கருதினேன். அப்படிச் சென்றால் சுமதிக்கும், அவளின் தந்தைக்கும் அதிகளவில் அபாயம் இராது என்று எண்ணினேன். அழுக்குகளுடன் நித்திரையால் எழும்பி செல்வோரைப் போன்று வெளியே சென்றோம். சியாமின் தாடி அடிக்கட்டை முடி வளர்ந்து வெள்ளைத் தாடியாக இருந்தது. நான் மிகக் குழப்பம் அடைந்திருந் தேன். எனது சேலை பட இடங்களில் கிழிந்திருந்தது. சேலையின் கீழ்ப்பாகத்தில் ஒரே சேறாக இருந்தது. கைகளிலெல்லாம் கறுப்பாக இருந்தன. கால்களில் செருப்பு இல்லை. படையினர் எம்மை அணுகுவதைக் கண்டோம். ஆறு நாட்கள் மேற்கொண்ட முயற்சி ஒரு பலனுமற்று போய்விடப் போகிறது என்று நினைத்தேன். எனது பத்திரிகைத் தொழிலில் ஒருமுறை கூட தோல்வியைச் சந்தித்த அனுபவம் எனக்கு அச்சமயம் ஏற்பட்டிருக்கவில்லை. ஒரு பெரிய வகை நாய் போன்று (Bull Dog) நான் பாய்ந்து முன்னேறியிருந்தேனே தவிர அந்த நிலையிலிருந்தும் ஒருபோதும் பின் சென்றதில்லை.

இப்போ எனது விளையாட் டெல்லாம் முடிந்து விட்டது. எவ்வளவு துக்கமான விடயம். வீணான பயணமாகி விட்டது. படையினர் எம்மைக் கேள்விக் குறியுடன் பார்த்து விட்டு நடந்து வந்தனர். நாமும் முன்னோக்கிச் சென்றோம். ஆனால், அவர்கள் எம்மிடம் பேசவுமில்லை. எம்மைக் கைது செய்யவுமில்லை. படையினரில் பல குழுக்கள் எம்மைக் கடந்து சென்றன. ஒருவர் கூட எங்களைப் பற்றி ஆர்வம் காட்டவில்லை. கனகாலத் திற்குப் பின்பே அதற்கான காரணத்தை அறிந்து கொண்டோம். அவர்கள் (இந்தியப் படையினர்) பிரபாகரனையும் அவரின் மனைவியையும் தேடிக் கொண்டிருந்தனர்.

(தொடரும்)




குருவிக் கூடு.

**சிறகு முளைக்காத குருவிக் குஞ்சுகள் சிரித்து ஆரவாரித்தன. மரத்தில் இருந்த அணில், குருவிக் கூட்டுக்குத் தாவி, 'உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்க வில்லை - சுதந்திரம் இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு?' என்று கேட்டது.**

**குஞ்சுகள் கவனிக்கவில்லை.**

**பாம்புக்கு இது வாய்ப்பானது.**

**குஞ்சுகளின் சிரிப்பொலி கேட்டு, பாம்பு கூட்டுக்குள் நுழைந்தது.**

**நொடிப் பொழுதில் -**

**பாம்பின் வாயில் குஞ்சுகள் பலியாகிப் போயின.**

**அணிலுக்கோ துயரம் தாங்கவில்லை.**

**அது மீண்டும் இரைந்து கத்தியது:-**

**'சிறகு விரி**
**பிறகு சிரி'**

- காசி ஆனந்தன்



க்க அன்பளிப்பு : டாக்டர் பாக்கியம், கோலாலம்பூர்

படிப்பகம்

www.padippakam.com

இலங்கைத் தமிழறிஞரும் மார்ச்சிய விமர்சகருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி வழங்கிய நேர்காணல் சென்ற செம்பருத்தி இதழில் வெளியாகி இருந்தது. அதன் தொடர்ச்சி இந்த இதழில் தொடர்கிறது. புலம் பெயர் தமிழர்களின் கல்விப்பணி ஒன்றுக்காக சிங்கப்பூர் வந்திருந்த அவரைச் சந்தித்தவர் கணபதி கணேசன்.

(ஆ-ர்)

**கே: பல்வேறு ஊடகங்களின் வருகையினால் வாசிக்கும் பழக்கம் குறைந்து கொண்டே போகிறது! எதிர்காலத்தில் நூல்களின் நிலை என்னவாக இருக்கும்?**

ப: இது எல்லா நாடுகளிலும் எல்லாப் பண்பாடுகளிலும் ஏற்பட்டுக் கொண்டுவரும் மாற்றங்களில் ஒன்றாகும். ஊடகங்களின் வளர்ச்சி காரணமாக ஜனரஞ்சக வாசிப்பு குறைந்து போகுமே தவிர தீவிர வாசிப்பும் தீவிர இலக்கியமும் குறைந்து போகும் என்று கருதுவதற்கில்லை. மற்றைய நாடுகளின் கலாச்சாரத்திலும் பண்பாடுகளிலும் களதியான இலக்கியப் படைப்புகளுக்கு எந்தப் பாதிப்பும் இதுவரை ஏற்படவில்லை. தமிழிலும் இதுதான் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம். புதிய சிந்தனைகள் வளர்ந்து கொண்டுதான் உள்ளன. தமிழ்ல் இவை இன்னும் வணிக ரீதியில் தனது இருப்பை நிரூபிக்கவில்லை.

**நாம் நினைப்பதைவிடவும் நம் குடும்பங்களில் பெண்கள் முக்கியமானவர்கள்!**

எந்தப் பகுதி மக்களிடம் தொலைக்காட்சி செல்லும் எந்தப் பகுதி மக்களிடம் வானொலி செல்லும், எந்தப் பகுதி மக்களிடம் சஞ்சிகை செல்லும், எந்தப் பகுதி மக்களிடம் தீவிர இலக்கியம் செல்லும் என்பதெல்லாம் தமிழில் இது வரை வகைப்படுத்தப்படவில்லை. தொலைக்காட்சியின் விரிவாக்கம் குறிப்பாக SUN TV-யின் தாக்கம் மத்திய வர்க்கத்தின் வாசிப்புத் தன்மை அடித்துக் கொண்டு போய் விட்டது. அதற்குப் பதிலாக ஒரு புதிய கலை வடிவம் தமிழில் வளர்ந்து கொண்டிருக்கிறது. 'சீரியல்கள்' எனப்படும் வன்மையான தொலைக்காட்சித் தொடர் வடிவங்கள் தமிழில் வளர்ந்து கொண்டுதான் உள்ளது. தமிழகப் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை இத்தகைய தொடர்கள்தான் வெளிக்கொணர்ந்தன. ஊடகங்களின் கலாச்சாரத்தை முறைப்படுத்தவும், விமர்சனம் செய்யவும் முறையான அமைப்புகள் தமிழில் இல்லை. 'சித்தி' தொடர் வெற்றி பெற்றதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இவை 60 களிலேயே தொடங்கி விட்டன. அங்கு அவர்கள் கலாச்சாரக் கல்வி என்ற தனிக்கல்வி முறையையே ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாம் அதைச் செய்யவில்லை. நாம் நினைப்பதை விடவும் நம் குடும்பங்களில் பெண்கள் முக்கியமானவர்கள். இதைத்தான் தொலைக்காட்சித் தொடர்கள் சித்தரிக் கின்றன.



பேராசிரியர் கா. சிவத்தம்பி

ஊடகங்களின் தன்மை மாறிக் கொண்டே வருகிறது. வானொலிகளின் பயன்பாடும் பெருமளவு இந்தியாவுக்கு வெளியே மாறி இருக்கிறது. மலேசியா, சிங்கப்பூர் இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் மாறியுள்ளது. ஒரு காலத்தில் தமிழின் சரியான உச்சரிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் BBC தமிழ் வானொலி கேள்! இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்பு கேள்! டில்லி தமிழ்ச் செய்திகள் கேள்! என்றெல்லாம் சொல்வோம். இப்போது அப்படி இல்லை. இயல்பான பேச்சுத் தமிழில் எல்லா வானொலிகளிலும், எல்லா மொழிகளிலும் FM எனப்படும் பண்பலையில் எல்லோரும் பேசிக் கொண்டுள் ளார்கள். இது வானொலியில் ஏற்பட்ட மாற்றம்.

இத்தகைய மாற்றங்களை நாம் புரிந்து கொள்ளாமல் பழையன மாறுகின்றன என்பதற்காக உலகமே கெட்டு விட்டது போலக் கவலைப்படுவது அவ்வளவு அழகல்ல என்று நான் நினைக்கின்றேன். அவற்றைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறைகளை, புரிதல் முறைகளை எங்கள் உயர்கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் பயிற்ற வேண்டும். தமிழின் நவீன இலக்கியத் தன்மைகளை, பின் நவீனத்துவத் தன்மைகளை விளங்கிக் கொள்வதற்கான தன்மைகளை நாம் பார்க்க வேண்டும்.

**கே: இன்றைய போர்ச் சூழலில் இலங்கையின் இலக்கிய வளர்ச்சி எப்படி இருக்கிறது?**

ப: மிகச் சிறப்பாக இருக்கிறது. ஒரு கால கட்டத்து இலக்கியம் ஒரு கால கட்டத்து இலங்கையின் போர்ச் சூழல் எத்துணை வைராக்கியம் நிறைந்ததாக, எத்துணை ஆழம் நிறைந்ததாக இருந்தது என்பதைக் காட்டுகிற இலக்கியங்கள் நிறைய தோன்றி விட்டன. ஏறத்தாழ 'மரணத்துள் வாழ்வோம்' முதல் இன்று வரை மிகப் பெரிய மாற்றம். இதில் முக்கியமானது என்னவென்றால் தமிழில் மட்டுமல்ல சிங்களத்திலும் இந்த மாற்றம் வந்து விட்டது. போரின் சுவடுகள் சிங்களத்திலும் பதிந்து இருக்கிறது. இலங்கையின் கலை இலக்கியங்கள் இந்தப் போர்ச் சூழலுக்கு ஏற்ப மாறிக் கொண்டே இருக்கிறது. அது ஒரு தனி இலக்கியமாக அல்ல.

நாடகக் கலை மிக அற்புதமாக வளர்ந்திருக்கிறது. நீங்கள் தனியாக நாடகக் கலை என்று மட்டும் நினைக்காதீர்கள். இந்தக் கால கட்டத்தில் தான் இலங்கையின் மிக முக்கியமான சனாதனன், கைலாயநாதன் போன்ற ஓவியர்கள் தோன்றினார்கள். சனாதனனின் ஓவியக் கண்காட்சி கொழும்பில் நடந்தபொழுது யார் யாரெல்லாம் இந்தப் போரைப் பற்றிக் கிண்டலும் கேலியும் பேசினார்களோ, எழுதினார்களோ அவர்கள் ஆயிரமாயிரம் ரூபாய்களைக் கொடுத்து அந்த ஓவியங்களை வாங்கினார்கள். போரைச் சித்தரிக்கின்ற, தமிழின் தொன்மங்களில் இருந்து போரைப் பார்க்கின்ற, போர் வாழ்க்கையைப் பார்க்கின்ற, போரின் சுவடுகளைப் பார்க்கின்ற படங்களை 70,000 - 80,000 ரூபாய்கள் கொடுத்து வாங்கினார்கள். இது இலங்கையின் கலை இலக்கிய வரலாற்றில் நாங்கள் மறக்க முடியாத சிலிர்க்க வைக்கின்ற அனுபவம்.

**கே: அன்றிலிருந்து இன்றுவரை இலங்கையின் பண் பாட்டைச் சொல்லுகின்ற பொழுது சைவமும் தமிழும் பிரிக்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால் தமிழகச் சூழலைப் பொருத்தவரைக்கும் நாம் பெருமையாகப் பேசிக் கொள்கிற தொல்காப்பியமும், திருக்குறளும் தமிழர் அல்லாதவர்களால் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்த மாறுபட்ட சூழல்களினால் தமிழகத் தமிழ் இலக்கிய உறவு வகையில் பல வகைகளில் மாறுபட்டு நிற்கின்ற சூழல் நிலவுகின்றது. இந்தச் சூழலை எப்படி எதிர் கொள்வது?**

ப: அப்படிக் கருதுகின்ற ஒருவரோ நீங்கள்? இது ஒரு தவறான வாசிப்பு என்று நான் கருதுகிறேன். சமணனும் பௌத்தனும் தமிழில் எழுதினான் என்பதற்காக அவன் தமிழன் இல்லை எனக் கருதுவது தவறு என்பது என் கருத்து. தமிழ் பௌத்தனும் தமிழ் சமணனும் இருக்கலாம். திருக்குறள் என்பது யாரோ மும்பாயில் இருந்து விமானத்தில் வந்து செந்தமிழ் நாட்டுக்குச் சொல்லிப் போன விடயமல்ல. தொல்காப்பியம் என்பது யாரோ டில்லியில் இருந்தும் கொல்கொத்தாவில் இருந்தும் மதுரை வந்து சொல்லி விட்டுப் போன விடயமல்ல. தமிழ் நாட்டில் இருந்து, தமிழைப் படித்து, தமிழன் வாழ்க்கையைப் பார்த்து எழுதியது. பிற மதத்தினர் எழுதியது என்பதற்காக அதை மறுப்பது தவறு.

இலங்கை ஈழத்து வரலாற்றில் குறிப்பாக யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு கட்டத்தில் சைவம் முக்கிய பங்கை ஆற்றியது. அதன் வளர்ச்சி காரணமாக சமூக அதிகாரங் கொண்டவர் களாக உருவானார்கள். அதனால் சாதகமான விளைவுகளும் எதிர்விளைவுகளும் உருவாகிற்று. காலனித்துவ எதிர்ப்பைச் காட்டுவதற்கும், தமிழின் தனித்துவங்களைப் போற்றுவதற்கும் அவை உதவிற்று. அதே வேளையில் தமிழ்ச் சமூகங்கள் இடையே பல அக முரண்பாடுகளை அவை நீக்கிற்று.

சாதி எதிர்ப்பு தமிழர்களிடையே ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகள், அவர்களைப் பற்றிய இலக்கியங்கள்


## மலாயா பல்கலைக்கழகத் தமிழ் பேரவையின் இலக்கிய பரிசுத் திட்டம்

பதினேழாவது ஆண்டாக மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை சிறுகதைப் போட்டியை புதுக்கவிதைப் போட்டியுடன் இணைந்து நடத்துவதாய் அறிவித்துக் கொண்டுள்ளது. பொதுப்பிரிவு, மாணவர் பிரிவு என் இரண்டு பிரிவுகளாக நடந்திடும் இப் போட்டிக்கு மலேசிய எழுத்தாளர்களிடம் இருந்து படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. பொதுமக்களிடம் இருந்து நன்கொடை களும் எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டிக்கான படைப்புகள் அனுப்பப் பட வேண்டிய இறுதி நாள் 30-06-2002.

படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:

திரு. சிவானந்தம் த/பெ பெரியண்ணன்,
இயக்குனர், பேரவைக் கதைகள் - 17
Persatuan Bahasa Tamil Universiti Malaya
D/A, Jabatan Pengajian India,
Fakulti Sastera Dan Sains Sosial,
Universiti Malaya, 50603 Kuala Lumpur.

தொடர்புக்கு:

| | |
|---|---|
| திரு. சிவா பெரியண்ணன் | - 019-5403595 |
| திரு. பூபாலன் சந்திரன் | - 012-3644943 |
| திரு. இன்னி சூரியமூர்த்தி | - 012-6580290 |




பக்க அன்பளிப்பு : *Mr. Ram Rais*

படிப்பகம்

www.padippakam.com



இவையெல்லாம் எம்மை மாற்றி விட்டன. தமிழர்கள் ஒடுக்கப்பட்டபோது எழுந்த இலக்கியங்களை விட, அப்போது எழுந்த இலக்கியங்களை விடவும் கிறிஸ்தவ மதத்தின் எழுச்சிக்கும் முக்கிய பங்கு உண்டு. கிறிஸ்தவ இளம் பாதிரிமார்களின், இலக்கியவாதிகளின் பணிகளைச் சொல்வது முக்கியம்.

கிறிஸ்தவத்தில் இருந்தது போன்ற விடுதலை மறை(வேதம்), இயக்கம் இருந்தது போல் சைவத்தில் இருக்கவில்லை. அவர்கள் தங்களைத் தமிழில் இணைத்துக் கொண்டார்கள். அதனுடைய மாற்றங்கள்தான் இன்றுவரை நடந்து கொண்டிருக்கின்றன. சைவமும் தமிழும்தான் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கலாச்சார அடையாளத்தைக் காப்பாற்றியது என்று சொல்லலாம். அப்படி ஒரு தேவை ஒரு காலத்தில் இருந்தது. அதனால் தமிழுக்கும் சைவத்திற்கும் சில நன்மைகள் ஏறபட்டது உண்மைதான். ஆனால் அந்த நிலைமை தொடரவில்லை.

தமிழகத்தில் பிராமணர் - பிராமணர் அல்லாதார் எதிர்ப்புக் காரணமாகத் தோன்றிய திராவிட இயக்கங்கள் மதத்தை - மதவாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. மதத்தை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. சமூக சக்தியாகக்கூட மதத்தை அவர்கள் பேணவில்லை. அதுதான் பகுத்தறிவாளன் வேலை என்று அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் நினைத்துப் பார்க்க வேண்டும். 'கம்பரசம்' எழுதிய அண்ணாத்துரையால் கூட பெரிய புராணத்திற்கு விளக்கம் எழுத முடியாது. திராவிடக் கருத்துடைமையின் வளர்ச்சி மதச்சார்பின்மையைத்தான் அதிகம் பார்க்கின்றது. பெரியாருடைய துரதிஷ்டமோ, அல்லது அதிர்ஷ்டமோ அண்ணாத் துரையின் தலைமையின்கீழ் பெரியாரிசம் மதச்சார்பின்மையை எதிர்த்த விதம் - முறைமைகள் - படிப்படியாக அவர்களை எங்கேயோ கொண்டுபோய் விட்டு விட்டது.

அண்ணாதுரை "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!" என்று சொல்ல, அது பிறகு இதாகிப் போய், அதற்கும் மேலாகப் பிராமணர்களிடம் வைதீக எழுச்சி ஏற்பட, பிராமணர் அல்லாத குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள் மத எழுச்சியைப் பாதுகாக்க, இவை இரண்டுக்கும் இடையே சாதாரண மக்களின் முருக வணக்கமும் மாரியம்மன் வணக்கமும் மேலுக்கு வர, இப்படி நிறைய முரண்பாடுகள் அங்கு இருந்தன.

நீங்கள் தமிழகத்தை ஒரு வேறுபாடுகள் இல்லாத ஒன்றாகப் பார்க்காதீர்கள். அவற்றுக்குள் எத்தனையோ ஓட்டங்கள் இருக்கு. தமிழகத்தில் மதம் இல்லை, அது இல்லை என்று கத்தினார்கள். அதனாலேயே முருகன் வணக்கமும், மாரியம்மன் வணக்கமும் வந்தது. எந்தத் திரைப்படங்களை வைத்துக் கொண்டு மதத்துக்கு எதிராகப் பிரச்சாரங்களைச் செய்தார்களோ அந்தப் படங்களே இப்போது மதத்தை உருவாக்கி விட்டன. அதுவும் கணினி மூலம் கடவுள் அருளை மிகவும் பக்தியுடன் ஊட்டுகிறார்கள். அதனாலேயே திராவிடக் கருத்துகளின் வழிவந்த மதச்சார்பின்மை காலூன்றி நிற்க முடியவில்லை. அதனால் தமிழகத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

நீங்கள் சொன்ன மாதிரியான சைவமும் தமிழும் இப்பவும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். சமூக அதிகாரத்தைப் பேண விரும்புகின்றார்கள் என்பது வேறு விடயம்.

**கே: பெரியாருடைய கொள்கைகள் தமிழீழத்தில் ரன் அதிகம் பாதுப்புகளை ஏற்படுத்தவில்லை?**

ப: இதில் முக்கியமானவொன்றை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். பெரியாரிசம் தோன்றியதற்கான காரணம் தமிழகத்தில் பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர் களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து நிலைப் பிளவு. பிராமணர் அல்லாதவர்கள் தங்கள் சுயமரியாதையை எடுத்துக் காட்ட வேண்டிய தேவை ஒன்று இருந்தது. யாழ்ப்பாணச் சமூகத்தில் அந்தத் தேவை எப்போதும் ஏற்பட்டதில்லை. யாழ்ப்பாண நகரத்துப் பிராமணர்கள் ஓர் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். நான் ஆசிரியராக நினைக்கின்ற இலட்சுமண ஐயர் சொல்லுவார் "யாழ்ப்பாணத்துப் பிராமணர் ஓர் ஒடுக்கப்பட்ட சாதிகளில் ஒன்று" என்று ஏனெனில் யாழ்ப்பாணத்துப் பிராமணர்களிடம் அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் வேளாளர் சமூகத்தினரிடம் மட்டுமே இருந்தது.

பிராமணர் எதிர்ப்புக்காக பிராமணர் களையோ மத நிறுவனங்களை நிராகரிக்க வேண்டிய நிலை இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக வேறு இரண்டு விடயங்கள் எமக்குக் கிடைத்தன ஒன்று மாணவர் காங்கிரஸ், மற்றொன்று மார்க்ஸிஸம், ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் 1920 - 30களில் பெரியாருடைய தாக்கங்கள் இருந்தன. ஆனால் மிகக் குறைவாக இருந்தன. 'குடியரசு' பத்திரிகை பற்றிப் பேசுகிறவர்கள் இருந்திருக்கிறார்கள். 'விடுதலை' பற்றிப் பேசுகிறவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தாக்கமென்று எதுவுமில்லை. அது வரவும் முடியாது, ஏனெனில் எமக்கு அந்தப் பிரச்சினைகள் இல்லவே இல்லை!

**கே: அதே கால கட்டத்தில் சாதி எதிர்ப்புப் போராட்டங்களை எப்படி நடத்தினார்கள்?**

ப: சர். பொன்னம்பலம் இராமநாதன் காலத்தில் அவர்களுக்கு எதிராக அவருடைய பள்ளிக்கு தெல்லிப்பனையில் இருந்து ஓர் ஊர்வலத்தை நடத்த முடிந்தது. பேரின்ப நாயகம், சபாரெத்தினம் காலத்தில் தேசிய காங்கிரஸ் சாதி ஒழிப்பை ஒரு முக்கியத் திட்டமாகக் கொண்டது. மார்ஸ்சியக் கட்சிகள் எல்லாம் சாதி ஒழிப்பை ஒரு முக்கியத்தளமாகக் கொண்டன. அதனால் சிலருக்கு ஓட்டே கிடைக்கவில்லை, யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினரான மக்கள் அக்காலத்தில் தம்மை சிறுபான்மைத் தமிழர்கள் என அழைத்துக் கொண்டார்கள். மிக முக்கியமான போராட்டங்கள் எல்லாம் நிகழ்ந்தன. இலங்கையின் சாதி எதிர்ப்புப் போராட்டம் மிகவும் வேறுபாடானது. தமிழகத்து 'தலித்' போராட்டம் மாதிரியானதல்ல அது. தேசவழமைச் சட்டமே சாதியினங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கப்பட்டது. சேவையின் அடிப்படையில் அவை பகுக்கப்பட்டு இருந்தன. 'தலித்' என்னும் தேவை இந்தியாவில் இருக்கலாம். இலங்கையில் அது தேவையான ஒன்றாக இருக்கவில்லை. பவுல், சூரன் எல்லாம் இலங்கைக்கு எப்பவோ வந்தாச்சு. இராமநாதருக்கு எதிராக நாம் போராடியுள்ளோம். அவர்களுடைய போராட்டங்களை எல்லாம் நாம் கொச்சைப்படுத்தக் கூடாது.




நம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்கும் முக்கியமாக இருக்க வேண்டிய ஓர் அம்சமாகும். அது அவனுடைய வாழ்விற்கு ஓர் ஊன்றுகோல். மனிதன் தனக்கு தானே விசுவாசமாக உள்ளவனாக இருக்க வேண்டும். ஆனால் இவன் தன் மீது நம்பிக்கையின்மையால் தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்கிறான். தன் மீது நம்பிக்கை இல்லாத போக்கு, எதற்கெடுத்தாலும் கோபப்படுதல், அலுத்துக் கொள்ளுதல், ஆதங்கப் பட்டுக் கொள்ளுதல் போன்ற விடயங்களில், ஒருவன் தன்னைத்தானே புண்படுத்திக் கொள்கிறான். நம்பிக்கையீனத்திற்கு அடிமையானவர்களை இருவகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக தன்னை நம்பாமல் (தன் மீது நம்பிக்கையில்லாமல்) அடுத்தவரை நம்பியிருப்பது. இவர்கள் மற்றவர்கள் எப்படிப்பட்டவராக இருப்பார் என்று ஆராயமலேயே அவர்களை முழு மனதாக நம்பி விடுவர்.தன்னை விட அடுத்தவர் அதி புத்திசாலிகள் என நினைத்து விடுவார்கள். அதனால் எந்தவித அச்சமோ, கூச்சமோ இன்றி அவர்களின் தயவை நாடி விடுவார்கள். இதன் சரி, பிழை பற்றிச் சிந்திக்க கால அவகாசத்திற்காகக் காத்திருப்பதில்லை. மற்றவர்களின் சொல்லைச் சிரமேற்கொண்டு அடுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு விடுவார்கள்.

தன்னையும் நம்பாமல், பிறரையும் நம்பாமல் வாழ்பவர்கள் இரண்டாவது வகையில் சேருவர். இது அவர்களே அவர்களின் ஆத்மாவிற்கு இழைக்கும் துரோகமாகும். மற்றும் தன் அறிவினையும் உள் உணர் வினையும் மதிக்காத செயல். இச்செயல் அறிவினிற்கே கடிவாளம் போடுகின்ற அர்த்தமற்ற இயல்பாகும்.

தனது வாழ்விற்கு தானே கதாநாயகன். இதை ஒவ்வொரு மனிதனும் நம்ப வேண்டும். ஒருவரின் மீது ஒருவர் நம்பிக்கையும், உறவுகளும் வைக்க வேண்டும்.

இந்த உலகம் நம்முடன் முடிந்து விடப் போவதில்லை. தொடர்ந்து உயிரோட்டத்துடன் இருக்க வேண்டியது. இந்த இயற்கை நமக்கு நல்லவை, கற்றவை களை பெருக்குதல் என்று எவ்வளவு சந்தர்ப்பங்களை அளித்துக் கொண்டிருக்கிறது. அவை அளிக்கும் பல தரப் பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றையாவது பற்றிக் கொண் டாலே போதும், அது நம்மை வளர்த்து உயர்த்தி விடும்.

நம்பிக்கையுடன் நாம் தேடும் ஆதாரம் நியாயமாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகவும் அமைதல் வேண்டும். தெளிந்த சிந்தனையுடன் கூடிய செயல்களே ஆற்றல் வளர்க்கக் கூடிய, திண்ணிய நெஞ்சுத்திறனை உருவாக்கும், ஒருவன் தனக்காக தன்னிடம் காட்டும் விசுவாசம் போன்றே உலகிற்கும் உண்மையான விசுவாசியாகக் காட்ட அச்சப்படக் கூடாது. நீங்கள் நேர்மையாக வாழ்ந்தாலே உலகம் தானாக உங்களைப் புரிந்துக் கொண்டுவிடும். இந்த உண்மை நிலைதான் உலகும் உங்கள் மீது வைக்கின்ற நம்பிக்கை என்பதாகும். நீங்கள் சரியாக நடந்து கொண்டால் மக்கள் நம்மை நோக்கி வருவர்கள். இதற்காக வீண் சிரமமோ, பிரசாரமோ தேவையில்லை.

நம்பிக்கையின்மையால் நமது சக்தியை முடக்கிக் கொள்வது என்பது இந்த உலகு நமக்கு இட்ட கட்டளையினை மீறுகின்ற செயலாகும். ஏனோ, தானோ என எழுந்த மாதிரி பேசுவது, செயல்படுவது என்பது வாழ்க்கையை ஓட்டுவது அல்ல. அது வாழ்க்கையையே உடைப்பதற்குச் சமமாகும்.

அடி மனதை அசைக்க முடியாத வலுவுடைய தாக்கிக் கொள்ளுங்கள். விசையில் உந்தப்பட்ட அம்பு தன் செயலை முடித்து விட்டே ஓயும். மனிதன் மட்டும் புறப்பட்ட பாதையை விடுத்து, முடங்கித் திரும்புதல் சரியானதா? வாழ்க்கை பயணம் இனிமையானது, நம்பிக்கையானது, இடர்களின் மேல் நடப்பது கூட இனிமையானதே. ஏனெனில் அதை உறுதியுடன் வெல்லும் போதுள்ள மகிழ்வினை அனுபவிக்கும்போது, நமக்கு நன்கு புலப்படுத்தி விடுகின்றது.



க்க அன்பளிப்பு : *திரு. விஜயசிங்கம், செராஸ்.*

படிப்பகம்

www.padippakam.com





# இந்திய அமைதிப் படையும், ராஜீவ் படுகொலையும்!

-கே.ஜி. மணியம், ஜோகூர் ஜெயா-

ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் தளபதி பிரபாகரனை விசாரணைக்காக இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற குரல் ஒலிக்கிறது.

ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாவும் தமிழ் நாட்டு முதல்வராக பதவி வகிக்கும் முன்னாள் சினிமா நடிகையான ஜெயலலிதாவும் இப்படிக் குரல் கொடுத்துள்ளனர்.

ஜெயலலிதாவின் கோரிக்கையில் இரட்டை அர்த்தம் இருக்கிறது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாவின் ஆதரவைப் பெற்று - மத்திய அரசின் ஆட்சியில் அமர வேண்டும். அதன் மூலம் தன் அரசியல் எதிரிகளைத் துடைத் தொழிக்க வியூகம் வகுக்கிறார்.

ராஜீவ்காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளும் - அதன் தொடர்பாக பிரபாகரனுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தமிழக நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ராஜீவ் காந்தி ஒரு விமானியாக இருந்தவர். இந்திய அரசியலில் பங்கு வகிக்காதவர். அரசியலே தெரியாதவர். இந்தியாவின் விடுதலைப் போராட்டம் நடந்த சமயம் கருவில்கூட அவர் இருக்கவில்லை. இந்திரா காந்தி அப்பொழுது திருமணம் கூடச் செய்திருக்கவில்லை.

திருமதி இந்திரா காந்தியின் புதல்வன் பாரத தவப் புதல்வன், நேருவின் பேரன். இதுதான் அவருக்கு இருந்த சொத்து. இந்திய தேசிய விடுதலைக்காக ஒரு சொட்டு ரத்தமும் - சுட்டு விரலும் அசைக்காதவர்.

இந்திரா காந்தியின் வீரமிக்க செயலும் - இந்திய நாட்டின் நலனுக்காக அவர் எடுத்த துணிவான காரியங்களுக்காக மக்களால் கவரப்பட்டார் மதிக்கப்பட்டிருந்தார். ஆகவே அவரது இறப்பிற்கு பிறகு தாயாரின் கௌரமிக்க நிழலில் அமர்வதற்கு ராஜீவ் காந்திக்கு பாதை வகுக்கப்பட்டது.

ராஜீவ் பிரதமரானபின் இந்தியாவின் பலதரப்பட்ட மக்களின் மாநிலங்களின் பிரச்சினை களை எதிர்கொண்டார். அவற்றை சமாளிப்பதில் நண்பர்கள் - அரசியல் ஆலோசகர்களின் உதவியுடன் தான் நாட்டை ஆட்சிபுரிந்தார். ஆனால் முழுமை யான பிரச்சினைகளை அவரால் கண்டறியவும் - அதனைத் தீர்ப்பதிலும் அவர் வெற்றி பெற முடியவில்லை.

இந்நிலையில் இலங்கையில் நடக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண - முன்னால் ஜனாதிபதி ஜெயவர்த்தனேயின் வேண்டுகோளுக் கிணங்கினார். இந்திய ராணுவத்தினை "அமைதிப்படை"யாக அனுப்பினார்.

பாகிஸ்தானுடன் - தன் சுய விடுதலைக்காக போராடியது கிழக்கு பாகிஸ்தான். அதற்கு தலைமையேற்றவர் முஜிபூன். கிழக்கு பாகிஸ்தானுக்காக - முஜிபூரினை வேண்டுகோளுக் கிணங்க இந்தியாவின் ராணுவத்தினை அனுப்பினார் இந்திரா காந்தி. இந்திய ராணுவத்தின் உதவியுடன் பாகிஸ்தான் படையை வெற்றிக் கொண்டு "பங்களா தேஷ்" என்ற புதிய நாடு உருவானது. இதற்காக - இந்திரா காந்தியை யாரும் கைது செய்ய வேண்டும் என்று பாக்கிஸ்தானில் கூக்குரலிடவில்லை.

இந்த அடிப்படையில்தான் இலங்கை வாழ் தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்கும். தமிழீழம் தோன்றும், அதன் மூலம் ஈழத்தமிழர்கள் நிம்மதியுடன் சுதந்திரமாக வாழ முடியும் என லட்சக்கணக்கான தமிழர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர்.



தமிழகத்தில் இருப்பவர்கள் தமிழ் பேசுபவர்கள். மொழி - கலை - கலாச்சாரம் - பண்பாடு - உணவு - உடை - தெய்வீக தொடர்பு யாவும் இந்தியா, மலேசியா, சிங்கைத் தமிழர்களுக்கும் வேறுபாடில்லை.

தங்களது சொந்த நாட்டில் தமிழர்கள் - தமிழ் இனம் - அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டு - ஒடுக்கப்பட்டதை எதிர்த்தே சுய உரிமை போராட்டத்தில் இறங்கினார்கள். தங்கள் இனத்திற்கும் மொழிக்கும் அரசியலில் பங்கு வேண்டும் என்பதற்காகவே களம் இறங்கினார்கள். தமிழர்களும் - சிங்களவர்களைப் போல் - இலங்கையின் பூர்வகுடி மக்களே.

இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப் படை இவைகளைக் கண்டுக் கொள்ளவில்லை.

அமைதிப் படையில் இருந்தவர்கள் பெரும்பாலும் சீக்கிய - வட இந்திய வீரர்களே. தமிழர்களின் உணர்வை அவர்களால் உணர முடியவில்லை.

இந்திய அமைதிப்படை தன் வேலைகளை செய்யாமல் அதன் சில வீரர்கள் காமவெறியில் இறங்கினர். துகில் உரித்து - தமிழ்ப் பெண்களின் கற்பைச் சூறையாடினர்.

அப்பாவித் தமிழர்களை வேண்டுமென்றே துன்புறுத்தினர். ஈழத்தின் விடுதலைக்காகப் போராடிய தேசிய வீரர்களை - கொரில்லாக்கள் எனக் கருதி - சித்ரவதை செய்தனர். திறந்த வெளி - மலக் கூடங்களில் குழியில் - மூழ்கடித்து - முக்கி எடுத்து அவமானப்படுத்தினர். துர்நாற்றம் கொண்ட உடலுடன் ஓட - ஓட விரட்டினர். (அப்படி ஓடிவந்தவர்கள் கூறியது இது)

இவைகள் யாவும் "அமைதிப்படை" செய்யும் வேலையா? இதனை எந்தத் தமிழனும் கேட்காதது ஏன்?

இலங்கைத் தமிழர்களை கொலைக்காரர்கள் - தீவிரவாதிகள் கொள்ளைக்காரர்கள் எனக் கருதி - அடக்குமுறையும் - ஆணவப் போக்கையும் கட்டவிழ்த்திட்டு பழிவாங்கினர் இந்திய ராணுவத்தினர்.

இந்திய ராணுவத்தினரின் நேரடித் தவறுகளுக்கும் - ராஜீவிற்கும் சம்பந்தம் இருக்கும் எனக் கூற முடியாது. அவர் இதனையறியாமல் இருந்திருக்கலாம். அல்லது அறிவிக்கப்பட்டதை மறைத்தும் இருக்கலாம். சில சமயங்களில் அதிகாரிகள் இம்மாதிரியான விஷயங்களில் அதிக சிரத்தை எடுக்காமல் இருப்பார்கள்.

ராஜீவ் காந்தி கொழும்பு சென்ற போது நடைபெற்ற ராணுவ மரியாதையில் - சிங்களக் கடற்படைச் சிப்பாயால் அடிக்கப் பட்டார். இது உலகம் முழுவதும் அறிந்த அதிர்ச்சியாகும்.

ஒரு வெளிநாட்டுப் பிரமுகரை - ஒரு கடற்படை வீரர் ஏன் அடிக்க வேண்டும். இவரை விடுதலைப் புலிகளின் ஏவல் என ஏன் இந்தியா குற்றஞ்சாட்டவில்லை.

அல்லது விருந்தினராக வந்தொருவரை சுட்டுக் கொல்லும்படி - சிங்கள அரசே மறைமுகமாக உத்தர விட்டிருக்கலாம் என; ஏன் சந்தேகிக்கக் கூடாது! வாய்ப்பு இருக்கிறது அல்லவா?

இலங்கையில் நடப்பது உலகப்போர் அல்ல! பல ஆயிரக்கணக்கான தமிழர்களை - குண்டு போட்டு கொல்வதற்கு - இஸ்ரேல் - சீனா பாகிஸ்தான் போன்ற நாட்டிலிருந்து விமானங்களையும் விமானிகளையும் வாங்கி அழித்து வரும் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒரு கொலைகாரிதானே.

அவரை ஏன் உலகம் ஒன்றும் கேட்க மறுக்கிறது. சொந்த நாட்டு தமிழ் பேசும் சகோதர, சகோதரிகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்த சந்திரிகாவை தமிழ்நாட்டு முதன் மந்திரியான ஜெயலலிதா எதுவும் கேட்காதது ஏன்?

தனது சொந்த நாட்டில் - தனது இன மக்களுக்காக - அவர்களது மொழி - இதர உரிமைகளுக்காக போராடுகிறவர்கள் ஈழ தேச வீரர்கள். அவர்களுக்காக தீயாகத் தீயில் - தலைமையேற்றுள்ள தளபதி பிரபாகரன் ஒரு மாவீரன்.▼



ராஜீவ் காந்தியின் இராணுவ சாகசத்தால், இலங்கை இந்தியாவின் வியட்நாமாக மாறும் என்று நான் 1987 ஆகஸ்ட் ஆரம்பத்தில் சொன்னேன். அப்போது இந்திய வியட்நாமிலும் ஒரு மைலாய் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இராணுவத்தினர் எவரும் ஒரு மாதிரியானவர்கள்தான் என்று நான் அறிந்திருந்தேன். மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்தி இருக்கிறேன். அவர்களது பயிற்சியும், கடுமையான வாழ் முறையும், போர் அவர்களிடம் தூண்டிவிட்ட மிருகத்தனத்துடன் இணைந்து, சிக்கலான சமயங்களில் அவர்களை மனிதாபிமானமற்று நடக்கச் செய்கின்றன.

உண்மை என்னவென்றால் வல்வெட்டித்துறை சம்பவம் இந்திய அரசால் திட்டமிட்டு மறைக்கப்பட்டது. இந்தியப் பத்திரிகையாளர்களின் பெரும்பகுதியினர் இதில் கூட்டுச் சேர்ந்து கொண்டு புளகாங்கிதம் அடைந்தனர். இந்தியாவில் இராணுவம் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் அடாவடித்தனங்களில் ஈடுபடும்போதும், இப்புனிதத் தன்மையும் மேலும் கூடுகிறது. வடகிழக்கு மாகாணத்தில் இராணுவ உடையில் நம்மவர்கள் நடத்தும் கற்பழிப்புகளையும் கொள்ளைகளையும் பற்றி யாரேனும் வாய் திறப்பதுண்டா? இந்தக் கேவலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள்கூட இந்தியாவில் இல்லை. இராணுவ உடையணிந்த கயவர்களும் வக்கிரம் பிடித்தவர்களும் நடத்திய மிருகத்தனமான செயல் அது.

இலங்கையில் அமைதிக்கு என வந்த அமைதிப்படையினரால் 1989ம் ஆண்டு ஆகஸ்ட் 2, 3, 4 திகதி களில் படுகொலை செய்யப்பட்டவர்களை ஒட்டி வெளியிடப்பட்ட 'வர்ணப் படுகொலைகள்' நாசுக்காக வழங்கிய முன்னுரையில்.

- ஜார்ஜ் பெர்னாண்டஸ்-



பக்க அன்பளிப்பு : திரு. குப்புரெட்டி - கோலாலம்பூர்

படிப்பகம்

www.padippakam.com





# நட்பூ

- பா.அ. சிவம் -

ஆரம்பப் பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம், கல்லூரி வரை நட்பு செய்த காலங்கள் இன்றும் மறக்க முடியாதவை. இன்னும் வாழ்ந்துக் கொண்டிருக்கிற தோட்டத்து வீதிப் புழுதியில், வளைந்து கொடுக்கிற தென்னியில், மாட்டுக் கொட்டகையில், ரப்பர்க் காடுகளில் மட்டுமின்றி கல்லூரிச் சாலையில், தங்கும் விடுதியில் தொலைந்து போன நட்பைத் தேடிக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நட்பின் ஆழம் என்பது ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய ஒன்று; சிந்திக்கத் தவறிய ஒன்று.

நட்பின் மெய்ப்பொருள் அறியாமல் பழகுபவர்கள் இன்று பலர். பொருளின் அறிமுகமின்றி பழகுதல் குற்றமன்று. ஆனால், இப்பொழுதெல்லாம் அடிக்கடி நட்பின் துரோகங்களைக் காண முடிகிறது. பழகிய பின் சாதிக்க வேண்டிய காரியங்கள் முடிந்தபின் கழன்று விடுகிற நண்பர்களை அடிக்கடி சந்திக்க முடிகிறது; புவனம் ஒரு வகையில் வட்டமென்பதாலா? எந்தவொரு வரையறையுமின்றி; மறைவுமின்றி எண்ணங்களை கலந்துரையாடவும் இன்புறவும் வாய்த்த ஒரு உறவு நட்பு எனில் அது மிகையில்லை. எதிர்நோக்குகிற இன்பத்திலும், துன்பத்திலும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு உதவி வாழ்வதே நட்பு. அதுவே அர்த்தப்படப்பார்க்கிற வாழ்வுப் பயணமும்கூட!

அதுவொருபுறமிருக்க, உதவிக்கு மட்டும்தான் நண்பன் என்பதில் உடன்பாடில்லை. தேவையென்ற பொழுதில் மட்டும் தோழர் நலம் நாடும் நண்பர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மற்றபடி, மறந்து விட்டு அவர் ஊழியத்தில் திழைத்திருப்பர். இவர்களையெல்லாம் எப்படி 'நண்பர்' என்பது? இவ்வகையானவரையெல்லாம் நட்பு எனும் குடும்பத்தில் உறுப்பினராய் வைத்திருத்தல் கூடாது.

புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல், மறத்தல் - மன்னித்தல் என்பதெல்லாம் குடும்பம், இல்லறம், காதல் என்ற வட்டத்துக்குள் மட்டும் அடைபடுவதில்லை. நட்புக்கும் பொருந்தக்கூடிய மனப்பான்மைகள் அவை. நண்பன் ஒருவன் சொல்லாதிருக்கும் பிரச்சினையை முகமொழி வழி அறிந்து துணைபுரிபவன்தான் உயிர் நண்பன், நான்; என் நலம்; இது மட்டும்தான் என் பாதை என விலகி ஓடும் மாந்தரெல்லாம் நண்பரல்ல. அதுபோன்றே, கிடைக்கப் பெறுகிற உதவியின் பலனை அடைந்த பின், தேவையை நிவர்த்தி செய்து விட்டு நகரப் பார்ப்போரும் நண்பரல்ல நட்பின் நலம் நாட.

செய்த உதவியை மறந்து விட்டு மறைகிறவர் இன்று பலர். தன்னலத்திற்கு நண்பனின் ஆற்றலைப் பயன்படுத்திவிட்டு, பொது நலம் நாடாதவரும் இன்று பலர். இம்மாதிரியான சுயநலக்காரர்கள், காரியக்காரர்கள் நட்பினை முன்னமே அறிந்து தவிர்ப்பது சாலச் சிறந்தது. தவணைக்காக மலர்ந்து சில நாள் மனம் பரப்பி உதிர்ந்து போகும் போலிப்பூக்கள் இந்த பிறப்புக்கள். உதவி செய்த நண்பனுக்கு கடன்பட்ட உணர்வு இவர்களுக்கெல்லாம் இருப்பதில்லை. செய்நன்றி மறப்பவர்களும் உண்ட வீட்டில் ரெண்டகம் புரிபவர்களும் ஒரு ரகத்தினரே அவனியில்.

இனிக்கின்ற பேச்சுக்களை ஏற்றுக் கொள்ளுகிற இவர்கள், தக்க சமயத்தில் அறிவுரையை ஏற்பதில்லை. ஆனால், டஜன் கணக்கில் பிறர் மீது வாரி வீசுவர் இவர்கள். இப்படியும் உண்டு நட்பின் ரகம். சுதி தொலைத்த ராகம். இடித்துரைத்தல் உடன்படாத நட்பு இது.

'ஈகோ' எனப்படும் வரட்டுக் கௌரவத்துடன் பழகும் நட்பினங்களும் உண்டு பழக்கத்திலே. பிறக்கும்போது எந்தவொரு குண்டூசியுடனும் பிறக்காத இவர்கள் வாழப் போகிற வாழ்வை நெறிப்படுத்தாது சாகப் போகிற ஆறடி மண்ணையும் மறந்தே வாழ்கிறவர்கள். எதுவும் கொண்டுவராதவர்கள் எதைக் கொண்டுப் போவதற்காக இந்த வரட்டுக் கௌரவத்தை முகத்தில் ஒட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. நட்பினில் ஈகோதனத்தை நுழைக்கும்போது பிரச்சினை தலைதூக்குகிறது. தன் குணத்தால் விளைகிற தவறுகள் இவர்கள் விழிகளுக்குத் தெரிவதில்லை. விளைவு மற்றவர் மீது அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இம்மாதிரியானவர்கள் தன் தவற்றை உணர்ந்தாலும், அதனை வெளிக் கொணராது எதிர்ப்பட்டவரை குறைகூறி தன் தவற்றை நியாயப்படுத்துவர்.

கன்னியர் வரவுக்கு பின் சில காளைகளின் நட்பு இலக்கணங்கள் பிழைத்திருத்தங்களாகும். நண்பரை மறந்து புது பாதையிலே அவர்களது பயணம் புறப்படும். தேவைப்பட்டால் நண்பனிடம் வந்து நிற்கும்; கேட்கும்; பிறகு மறுபடி பழையபடியே பயணம் ஜனிக்கும். இப்படிப்பட்ட வாழ்வு கேவலத்துக்குரியது என் பார்வையிலே. மலர் விட்டு மலர் தாவும் வண்டுகள் போல் நண்பன் ஒருவனிடம் பிரச்சினையெனில் புது நட்பை நாடி, பழகி, அங்கும் பிரச்சினையெனில் அங்கிருந்து விலகி புது மடம் தேடுகிறவர்களும் நம்மிடையே உண்டு; முகவரிதான் இல்லை. தான் பெற்ற ஒவ்வொரு உதவிக்கும் கைமாறு செய்யக் கடமைப்பட்டுள்ளவன் நண்பன். செய்நன்றி மறந்தான் எனில், அவன் மிருகம்; அழிந்தது அவனது மனிதம்.

நட்பு என்பதும்கூட புனிதமானது; தெய்வீகமானது. கூடி வரும்போது கஷ்டங்களெல்லாம் இனிக்கும். ஒருவனுடைய துன்பம் இன்னொருவனுக்கு வலி. மகிழ்வும் அப்படியே. ஒருவனுடைய வெற்றி மற்றவனுக்கு புன்னகை. அதுவொருபுறமிருக்க ஒருவர் முன்னேற்றத்தில் மற்றவனுக்கு வயிற்றெரிச்சலோ அதிருப்தியோ எனில் அது தூய நட்பன்று. பெண்மைக்கு மட்டும்தான் 'கற்பு' என்று சொன்ன அறிஞர் எங்கே? நட்புக்கும் கற்புண்டு; நண்பர்களுக்கும் தாய்மையுண்டு.

நம்மில் பலருடைய வாழ்வில் இளவயது, பள்ளிப்பருவ, வேலையிடத்து நண்பர்களின் பாதிப்பு பெருவாரியாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. நன்முறையில் அறிமுகமானாலும் கசப்பான சம்பவங்களால் கலைந்து போன நண்பர்கள்தான் அதிகம். அம்மாதிரியான நினைவுகள் இதயத்தின் ஒரு மூலையில் ஆறாத வடுவை ஏற்படுத்திவிடுவது நிச்சயம். காய்ச்சலாக இருந்தால் மருந்து போடலாம்; வீக்கமாக இருந்தால் ஒத்தடம் கொடுக்கலாம். இது நட்பு. நட்பில் பிரிந்தபின் பழையதை நாடுகிற பக்குவமும் இருப்பதில்லை. அம்மாதிரியான வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற காலம் மறுபடி பிறப்பதில்லை. இரயில் பயணத்தில் நடந்து செல்கிற காட்சிகளாய் ஒவ்வொன்றும் அமைந்து விடுகிறது. நண்பன் என்பவன் புனிதமானவன்; புனிதமாய் இருக்க வேண்டியவன். அவனை வீணடிக்காதீர்கள். நட்பு என்பது புனிதமானது; புனிதமாகப்போவது. தோற்கடிக்காதீர்கள். நல்ல நண்பர்களை இழந்தவர்கள் வாழ்வின் ஒரு பகுதியை இழந்தவர்களாவார்கள். அந்த இழப்புக்களை ஈடுகட்ட மறுபிறப்பு பிறந்தே ஆக வேண்டும்.

---

நன்றாக மூடி வைக்கப்பட்ட புத்தகம் வெறும் காகிதக்கட்டுதான்!

- சீனா -

ஒரு நல்ல புத்தகத்தின் உண்மையான விலையைக் கொடுத்து யாரும் வாங்குவதில்லை. அவர்கள் கொடுப்பது அச்சுக் கூலியும் காகிதத்தின் விலையும்தான்!

- லூயிகான்

புலியை மனிதன் கொன்றால் அது வேட்டை!
மனிதனைப் புலி அடித்தால் அது 'ரத்த வெறி'!

- பெர்னாட்ஷா -

---

## என்னுயிர்க் கண்ணே!

- தமிழியன், தலைநகர்.



அன்னைத் தமிழே! அணையா கதிரென
என்னுள் ளிருந்தே இயக்கும் அறநெறி
தன்னுள் ளடக்கிய தாயே, உனைதினம்
என்னுயிர்க் கண்ணென ஏற்றித் தொழுவேனே!

உன்னைத் தொழுவதென் னுயிரைத் தொழுவதாம்
என்னை இயக்கும் இனிய தமிழே
என்னை மறப்பதோ; என்விழி தேடிடும்
உன்னைப் போற்றுதல் உவப்பெனக் காமே!

தாயே தமிழே! தடைகள் நொறுக்கி
மாய மொழியை மடக்கினாய் வாழி;
ஆய மொழிகளின் அன்னையாய் நிலைத்தே
தேயம் உயர்ந்தாய் திருவாய் வாழி!

உன்னை யழிக்க உயர்ந்த ஆசிரியர்
தன்னை விழுங்கிய தண்டமி ழேதினம்
உன்னை வணங்கி உவப்பதே என் பணி
என்னை வளர்ப்பாய் எனப் பணிந் தேனே!

உடலாய் உயிராய் உணர்வுகளாகி
திடமாய் எனையே தினம்காப் பவளே
அடைந்தேன் பெருமை அடைந்தேன் உனையே
கடைந்தேன் துயரைக் கனிந்தேன் புலமையே!

வள்ளுவன் வழங்கிய வாழ்வியல் நெறியாம்
தெள்ளிய திருக்குறள் தேறிய தமிழியம்
உள்ளுவ தெல்லாம் உயர்வெனப் போற்றும்
கள்ள மிலாதமிழ்க் கலைமொழி வாழிய!



க்க அன்பளிப்பு : திரு. சுந்தர் - கிளானாரிஜயா

படிப்பகம்

www.padippakam.com



# தமிழகத்தில் மீண்டும் புலிகள் அலை!

தமிழக சட்டப் பேரவையில் அண்மையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப் பட்டவராகச் சந்தேகிக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிக் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்த வேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானம் ஆகும். இந்தத் தீர்மானத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் கொண்டு வந்திருந்தார். தீர்மானத்துக்கு ஆதரவாக அ.தி.மு.க., காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ் உறுப் பினர்கள் வாக்களித்திருந்தனர். எதிராக பா.ம.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிக் கட்சிகள் வாக்களித்தன. பா.ஜ.க.வும் தி.மு.கவும் வாக் களிப்பில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டன. இந்த நிலையில்தான் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்ற இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியங்கள் அறவே இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தை ஜெயலலிதா கொண்டு வருவதற்கான காரணங்கள்தான் என்ன? என்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும். இந்தத் தீர்மானம் திடீரென தமிழக சட்ட சபைக்கு கொண்டு வரப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் அதிரடி அரசியல் நகர்வுகள்தான் காரணமாகும்.

பதினொரு வருடங்களுக்கு முன்னர் நடந்த ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுத்தளம் பெரிதும் பலவீனப்பட்டுபோய் இருந்தது. புலி என்று வாயைத் திறந்தாலே சிறை செல்ல வேண்டியதொரு சூழல் நிலவியிருந்தது. ஆனால் இந்த நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. படிப்படியாக புலிகளின் ஆதரவுத் தளம் தமிழகத்தில் வலுப்பெற்று வந்தது. கடந்த வருடம் தமிழகத்தின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோதும் ஜெயலலிதா வினால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள போராட வேண்டியிருந்தது. இப்போதுதான் அவர் நிலையான ஆட்சி ஒன்றை அமைத்திருக்கிறார். அவர் நிலையான ஆட்சியை அமைத்துள்ள சூழலில் - அவருக்கு அரசியல் எதிரியாக கருணாநிதி தென்படவில்லை என்பது ஆச்சியமில்லை. அதுதான் உண்மை.

கருணாநிதியின் விவேகமற்ற அரசியல் நகர்வுகள் அவரைப் படுகுழியில் தள்ளி விட்டிருக்கின்றது. அவர் தள்ளாத வயதில் எழுந்து நின்று மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதென்பது சந்தேகம்தான்.







உண்மையில் இப்போது ஜெயலலிதாவுக்கு அரசியல் ரீதியான பலம் மிக்க எதிரி என எவரும் இல்லை. ஆனால் அவர் தனது எதிர்கால அரசியல் தலைவிதியை தமிழகத்துக்கு வெளியே இருக்கின்ற ஒருவர் தீர்மானித்து விடுவாரோ என்று அச்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பதை உணர முடிகின்றது.

1991-க்குப் பின்னர் பலமிழந்து போயிருந்த புலிகளின் ஆதரவுத்தளம் தமிழகத்தில் சமீப காலமாக வலுவடைந்து வந்திருக்கிறது. புலிகளின் பிரமிப்பூட்டும் வெற்றிகள் அவர்கள்பால் தமிழக மக்கள் கொண்டிருந்த கோபத்தைத் தணித்திருக்கிறது.

தமிழகத்தில் மாறி மாறி ஆட்சியமைக்கும் கட்சிகளின் போக்கு தமிழக மக்களிடத்தில் வெறுப்பினை உருவாக்கியிருக்கிறது.

இத்தகைய நிலையில் புலிகள் தமிழ்த் தேசிய இனத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று விடுவார்களோ என்ற பயம் தமிழகத் தலைவர்கள் மத்தியில் தோன்றியிருக்கிறது.

முன்னைய முதல்வர் கருணாநிதி கூட அரசியலினால் தான் சாதிக்காததை பிரபாகரன் போராட்டத்தினால் சாதித்து விடுவாரோ என்ற அச்சம் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆணையிறவுத் தள வெற்றியின் பின்னர் தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவான நெருக்கமான தமிழ்த் தேசிய சக்திகள் பலமடையத் தொடங்கியிருந்தன. இது அச்சத்துக்குரியதொரு மாற்றம் என தமிழக அரசுக்கு புலனாய்வு அமைப்புகள் சுட்டிக் காட்டியிருந்தன. இதன் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகளின் தலைவரை இந்தியாவுக்குப் பிடித்துவர வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

பிரபாகரன் இலங்கையின் அரசியல் தலைவிதியை நிர்ணயம் செய்யக்கூடியளவு வலுவானவர் என்பதை கடந்த நாடாளுமன்ற தேர்தலின் மூலம் தமிழக அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி உலகமே உணர்ந்து கொண்டிருக்கிறது.

தொடர்ந்து அரசியல் ரீதியாக பிளவுபட்டிருந்த சக்திகளை ஒன்றிணைத்து ஈழத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று புலிகளை அங்கீகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளும் வெற்றி பெற்றுள்ளன.

இதே நிலை தொடர்ந்தால் தமிழக அரசியல்தளத்தில் ஆட்சியை நிர்ணயம் செய்யும் அளவுக்கு தமிழக மக்களின் ஆதரவினையும் சுருட்டிக் கொண்டு விடுவாரோ என்ற பெரிய பயம் தமிழக அரசியல் தலைமைக்குள் தோன்றியிருக்கிறது.

சமீபத்தில் பிரபாகரனை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டுக்கு தமிழக ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவமும் அதற்கு தமிழர் மத்தியில் காணப்பட்ட வரவேற்பும் தான் ஜெயலலிதாவை இந்த முடிவுக்குத் தூண்டிவிட்டது.

தமிழகத் தொலைக்காட்சிகள் பேட்டியை வன்னியில் இருந்து ஒளிபரப்பின. தமிழக செய்திதாள்களிலும் வார இதழ் களிலும் பிரபாகரனின் பேட்டியும் படங்களும் நிறைந்திருந்தன. எல்லா ஊடகங்களிலும் பிரபாகரனே நிறைந்து காணப்பட்டிருந்தார். இந்த நிலை தொடருமேயானால் தனது எதேசாதிகார போக்குக்கு ஆப்பு வைக்கப்படும் என்பதை உணர்ந்தே ஜெயலலிதா இந்தப் போர்க் கொடியை தூக்கியிருக்கிறார்.

கடந்த பதினைந்து வருட தமிழக அரசியலில் புலி எதிர்ப்பு அல்லது ஆதரவை தமது அரசியல் வெற்றிக்கு சாதகமாக்கிக் கொள்வதையே அ.தி.மு.க.வும், தி.மு.கவும் வழமையாகக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இப்போது ஜெயலலிதா தீவிர புலி எதிர்ப்பு நிலையைக் கையில் எடுத்திருக்கிறார். அவருக்கு ஆதரவாக காங்கிரஸ் பாரம் பரியத்தில் வந்தவர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இதுவரை இதே முகாமில் நின்ற இரு இடதுசாரிகளும் இப்போது பக்கம் மாறி நிற்கிறார்கள். பா.ஜ மற்றும் தி.மு.க. என்பன நடுநிலை வகிக்கின்றன. வழமை போலவே ம.தி.மு.க., பா.ம.க போன்ற கட்சிகள் ஆதரவுக் களத்தில் நின்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் விவகாரம் அரசியல் ரீதியில் தமிழகத்தில் முக்கிய கருப்பொருளாக மாற்றம் கண்டு வருகின்றது. புலிகளை தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த விடாமல் தடுக்க முனைந்த ஜெயலலிதா போன்ற சக்திகள் அவர்கள் எதிர்பாராத வகையில் புலிகளைப் பற்றிப் பரபரப்பாகப் பேச வைத்திருக்கிறார்கள்.

பிரபாகரனை ஒப்படைக்கக் கோரும் தீர்மானமே ஈழத் தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதை குழப்பும் சதி என்று பலத்த கண்டனத்துக்குக்குள்ளாகியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்களின் மரணத்துக்குப் பின்னரும் ஈழத்தில் அமைதி தோன்றுவதை விரும்பாத தமிழகத் தலைவர் என்ற முத்திரை ஜெயலலிதா மீது குத்தப்பட்டு விட்டது.

அது போன்றே இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனைப் பிடிக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் தீர்மானம் அரசியல் அறிவீனமற்றதென்று இந்திய அரசியல் வாதிகள், இந்திய மக்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் தோற்று வித்துள்ளது.

அதாவது இப்படியொரு தீர்மானத்தை இயற்றி யதன் மூலம் ஜெய லலிதா தன்னைத் தானே அவமானத்துக்குள்ளாக்கியுள்ள தோடு பிரபாகரனையும் புலிகளையும் தமிழக மக்கள் மத்தியில் பரபரப்பாக பேச வைத்திருக்கிறார்.

எதிர்கால தமிழக அரசியலில் எது நடக்கக் கூடாதென தமிழக அரசியல் தலைவர்கள் அஞ்சினார்களோ, அதே கட்டத்தை நோக்கி அவர்களே நகர்த்திச் செல்வது தமிழக அரசியல் தலைமை எந்தளவுக்கு தரம் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாகும்.▼

## முகம் தொலைந்த தமிழர்களுக்கு!



கடல் கடந்தான், கடாரம் வென்றான், கங்கை கொண்டான், வாதாபி வென்றான் என்றெல்லாம் புகழ்ப்பெற்ற ஓர் இனம், ஒரு சமூகம் இன்று திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் அஞ்சித் தன் கால்களுக்குள் தன் தலையைப் புதைத்துக் கொண்டு கிடக்கின்றது. தன் தலை தப்பித் தால் போதும் என்பதுதான் இங்கு தனிமனிதனின் சமூகக் கவலையாகி விட்டது. எனக்குக் கூட அப்படி ஏற்படுகிறபோது என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது....

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது முன்னோர் வாக்கு. இன்று, 'எப்படியாயினும் பொருள் தேடு' என்பது நடைமுறையாகி வருகிறது. எப்படியாவது சுவரேறிக் குதித்து, கட்சி மாறி, பூட்டை உடைத்து, காட்டிக் கொடுத்து, கடத்தல் செய்து, கமிஷன் பெற்று, லஞ்சம் வாங்கி இப்படி எப்படியாவது பொருள் சேர்ப்பது திறமையின் வெற்றியின் அடையாளம் என்று இனியும் தமிழன் கருதினால் முகத்தையும் முகவரியையும் மட்டுமல்ல; தமிழன் முழுதாகத் தன்னையே இழந்து விடுவான்.

- (குமுதம் கட்டுரையில் பாரதிராஜா)



பக்க அன்பளிப்பு : கி. பிரபாகரன்-பீடோர்

படிப்பகம்

www.padippakam.com






# சிரம்பான் டேப் கல்லூரி!

-இளங்கோவன் கருப்பையா-
கிள்ளான்

"2020ஐ நோக்கிப் பீடுநடை போட வாருங்கள்"; கேட்டவுடன் தெரிந்து விடும் இது சிரம்பானில் வீற்றிருக்கும் டேப்ஃ கல்லூரியின் அறை கூவல். இங்கு போனால் உண்மையிலேயே பீடு நடை போட முடியுமா? காசு சம்பாதிக்க கல்வி தானா கிடைத்தது இவர்களுக்கு! 'SMART MOVE" அதாவது விவேக மான செயல்பாடு என்பது இவர்களது தாரக மந்திரம். இவர்களைப் பொறுத்த வரையில் மிகவும் விவேகமாகத்தான் செயல்படுகிறார்கள். ஆனால் இங்கு படிக்கவரும் மாணவர்களுக்கோ விவேகமற்ற செயல்பாடு. காரணம் கல்வி என்ற பெயரால் பல கண் துடைப்பு வேலைகள் இங்கு மிகவும் அலங்காரமாக அரங்கேறி கொண்டு இருக்கிறது.

தோட்டப் பாட்டாளிகளின் பிள்ளைகள் குறைந்த செலவில் நிறை வான கல்வியைப் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் உருவாக்கப் பட்ட கல்லூரியில் பல அசம்பாவிதங்கள் நாம் விழித்திருக்கும் போதே நடக்கிறது. இன்றைய சூழ்நிலையில் நிறைவான செலவில் குறைவான கல்வியையே இங்கு பெற முடிகிறது. பகல் கொள்ளையர்களாக மாறி வருகின்றனர் இந்த கல்லூரி நிர்வாகத்தினர்.

அடுக்கு மொழிகளையும் ஆசை வார்த்தைகளையும் அழகாகத் தொகுத்து அப்பாவி மக்களை ஏமாற்றும் கலையை எங்கு கற்றனரோ? மாதக்கட்டணம் எனப்படும் Tuition fee RM420.00, தங்கும் விடுதி வாடகை மாதம் ஒன்றுக்கு RM100.00, ஒரு பரீட்சையின் கட்டணம் RM70.00, போட்டோஸ்டாட் ஏறத்தாழ RM30.00, அது இது என்று எப்படியும் ஒரு மாதத்திற்கு RM500.00 குறையாமல் செலவாகிறது. கல்லூரி நிர்வாகம் இங்கு படிக்கவரும் மாணவர்களுக்கு நிச்சய மாக கல்வி கடன் வசதி செய்து தருமாம்! எப்பொழுது? அது அவர்களுக்கே வெளிச்சம். கடன் பட்டாவது பட்டம் பெற்றுவிடலாம் என்ற ஏராளமானவர்களின் கனவு கானல் நீராகி விடுகிறது. இதற்கு இன்னும் நிறைய உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் வேதனைக்கும் வருத்தத்திற்கும் உரியது எழுதிய சோதனையின் மறுமுறை தேர்வு ஒன்றுக்கு RM100.00 வசூலிக்கப்படுகிறது. (Re-sit). காப்பியடித்து பாஸ் பண்ண நினைக்கும் மாணவர்களுக்கு இது ஒரு நல்ல பாடமாக அமையும் என்றாலும் நிஜமாகவே கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்கு பெரும் இடியாகி விடுகிறது. 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்பது ஒளவையார் வாக்கு. இதில் இங்கு படிக்கும் மாணவர்களை உண்மையிலேயே பிச்சை எடுக்கும் அளவுக்கு ஆளாக்கி விடுகிறார்கள் இந்த கல்லூரி நிர்வாகம். மேலும் ஒரு மாணவன் பரீட்சையில் காப்பியடித்து அதை ஒரு விரிவுரையாளர் பிடித்து விட்டால் அவருக்கு சன்மானமாக RM50 வழங்கப்படுகிறதாம். 'பிச்சை எடுக்குதாம் பெருமாளு அதையும் பிடுங்கி தின்னுதாம் அனுமாரு!' என்கிற கதை யாகப் பெற்றோர்கள் குருவி சேர்ப்பது போல் சேர்த்து அனுப்பினால் கதி இதுதான்.

சரி அப்படியே வாயை கட்டி வயிற்றை கட்டி படித்துவிட்டால் அந்த படிப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. JPA எனப்படும் அரசாங்க நிறுவனம் இங்கு கொடுக்கப்படும் பட்டத்திற்கு அங்கீகாரம் இல்லை என கையை விரித்து விடுகின்றனர். தரமான கல்வி தான் என்றெண்ணி 3 வருடத்தை செலவிட்டால் முக்காடு போட்டுக் கொண்டு திரும்ப வேண்டியுள்ளது. இன்றைய நமது நாட்டின் துரித வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க வேண்டிய அவசியத்தை கல்லூரி நிர்வாகம் புரிந்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

தரமான கல்வியை வழங்கு வதற்கு முக்கியமாக நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் பணி மிகவும் இன்றியமையாதது. மேலும் சொல்லப்போனால் விரிவுரையாளர்கள் நடமாடும் நூல்நிலையமாக இருக்க வேண்டியது அவசியம். ஆனால் இங்கு பணிபுரியும் விரிவுரையாளர்களில் பலர் சிறந்த தேர்ச்சிப் பெற்றவர்களாக தெரியவில்லை. இதன் விளைவாக டிகிரி (degree) எனப்படும் பட்டப்படிப்பை அந்தக் கல்லூரியுடன் இணைந்து நடத்திய பல அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பின்வாங்கிகொண்டனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முதுநிலை பட்டப் படிப்பின் பாடதிட்டம் மாணவர்கள் அறியாமலேயே மாறிக் கொண்டே இருக்கிறது. நான் Robert Gordon Uni டிகிரி செய்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே RGUவாக இருந்தது இறுதியில் Northembria Newcastle Uni. டிகிரியாக மாறியுள்ளது. என்ன படிக்கிறோம் என்று தெரியா மலேயே படிக்க வேண்டிய துர்பாக்கிய நிலை இங்கு படிக்கும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது என்பது மிகவும் வேதனைக் குரிய விஷயம்.

இது மட்டும் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா? ஆஹா.... அள்ள அள்ள குறையாத அமுத சுரபியை போன்று சொல்ல சொல்ல குறையாமல் இவர்களின் குறைபாடுகள் வெளிப்படு கின்றன. 'கணினி' பட்டணங்கள் மட்டுமின்றி பட்டி தொட்டிகளிலெல்லாம் புகுந்து விளையாட ஆரம்பித்து விட்டது. இதன் பங்கு எவ்விதமானது என்று சிறுப்பிள்ளையை கேட்டாலும் சொல்லி விடும். ஆனால் டேப் கல்லூரியில் முழுமையான கணினி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதா என்று வினா எழுப்பினால்! விடை கேள்விக்குறிதான். முழுமையான கணினி வசதியில்லாமல் எங்ஙனம் மலேசியாவின் அபார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய மாணவர்கள் உருவாக்கப்படுவார்கள்? தற்பொழுதுள்ள சூழ்நிலையில் இந்தியர் களின் வளர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஒரு சவால்! படிப்பு முடிந்து வெளியுலகம் வந்து தனது படிப்பிற்கேற்ற வேலையில் அமருவது முயற்கொம்பாகி போய் விட்டது. அப்படியே வேலை கிடைத்துவிட்டாலும் தன்னுடன் வேலை செய்யும் வேற்றினத்தவருடன் எப்படியெல்லாம் ஈடுகொடுத்து சமாளிக்க வேண்டியுள்ளது என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும்? இப்படி திரும்பும் திசையெல்லாம் சவால்; சவால்; சவால். பள்ளி படிப்பு ஒருவரின் வாழ்க்கைக்கு அஸ்தி வாரத்தை போடுகிறது என் றால், பட்டப்படிப்பு ஒருவரின் வாழ்க்கையை முழுமை யாக்கிறது. ஆயிரம் சவால்கள் நம்மை விழுங்கிவிட வெளியில் இருக்கும்போதே, நம்மவர்கள் நமக்கு மேலும் இடர்களை உண்டு பண்ணி அவர்களுக் கான புண்ணியத்தை தேடிக் கொள்கின்றனரே என்பது மிகவும் வேடிக்கையான விஷ யம். இதிலும் டேப்ஃ கல்லூரி நிர்வாகம் நிறையவே புண்ணி யத்தை தேடிக் கொண்டுள் ளது.

**டேப்ஃ கல்லூரியின் முன்னாள் மாணவரின் உள்ளக் குமுறல் இது! இது போன்று தாங்கள் பாதிக்கப்படுவதாகக் கருதும் மாணவர்கள் தகுந்த ஆதாரங் களுடன் செம்பருத்திக்கு எழுதலாம். (ஆ-ர்)**

## நினைத்துப் பாருங்கள்!
## ஆனால் மறந்து விடுங்கள்!



"தோட்டத் தொழிலாளர் மாதச் சம்பளத்துக்கு இன்றும் போராட வேண்டிய நிலையில் இருக் கிறோம். இதற்காகத் தோட்ட நிறுவனங்கள் வெட்கப்பட வேண்டும்."

- ஜி. சங்கரன்
தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர்
மலேசிய நண்பன், 8-5-2002)

தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கையாலாகாத் தனத்துக்கு தொழிற்சங்கம் வெட்கப்பட வேண்டுமா? அல்லது முதலாளிகள் வெட்கப்பட வேண்டுமா? தொழிற்சங்க முதலாளிகளே! தோட்ட முத



லாளிகள் கெட்டிக்காரர்கள். தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் தராமல் அவர்களால் கோடிக் கணக்கில் சம்பாதிக்க முடியும். உங்கள் வெட்டிப் பேச்சு ஏமாந்த தொழிலாளருடன் மட்டும்தான். களத்தில் இறங்கி, மறியல், போராட்டம் என்று நடத்திக் கொஞ்சம் நெருக்குதல் கொடுத்தால் தொழிலாளிக்கு மாதச் சம்பளம் கிடைக்கலாம். ஆனால் நீங்களோ குளிர்சாதன அறையை விட்டு வெளியே வரவே மாட்டீர்களே!

- தோட்டப் பாட்டாளிகள்



NUPW நிர்வகித்த தோட்டங்களில்கூட (தற்போது இல்லை) அங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளத்தைத் தொழிலாளர் சங்கம் கொடுக்கவில்லை என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? நம்ம ஆளே நம்ம ஆளைக் கவனிக்கத் தவறும் போது மற்றவர் எந்த மூலைக்கு?

- சின்னசாமி, ரந்தாவ் தோட்டம்

(இன்னும் வரும்).



க்க அன்பளிப்பு : KKSS

படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் மன்றம்

## மலேசிய இந்தியர்களுக்கு ஒரு திறந்த மடல்!

- இரா. சுதர்சனா, குளுவாங், ஜோகூர் -

கோலாகலமாய்....
ஆர்ப்பாட்டமாய்...
நடக்கின்றன திறப்பு
விழாக்கள்!
கண்ணீரும்
கம்பலையுமாய்....
பல மனங்களைக்
கொன்று....
நடக்கின்ற மூடுவிழாக்கள்!

ம.இ.காவின் மருத்துவக்
கல்லூரியின் திறப்பு விழா!
தமிழ்ப்பள்ளிகளின்
மூடுவிழா!
அஸ்திவாரமே
போடப்படாமல்
பட்டதாரிகளின்
உருவாக்கம்....
வேற்றின பட்டதாரிகளின்
உருவாக்கம்!

இராமசாமியும் குப்புசாமியும் பணம் போட்டு கட்டிய இக்கல்லூரியில் இவர்களின் பிள்ளைகள் படிப்பதற்கான உத்தரவாதம் இல்லை ஆனால், படம் பொறித்த பதக்கத்துக்கு ஆசைப்பட்டு தன் சொத்து, நிலத்தைக் கூடத் தப்பாமல் விற்றுக் கொடுத்திடுவார் பத்தாயிரத்தை! கேட்டால்.... 'இனப்பற்று' ஆம்!

"வேறு யார் கொடுப்பார் நம்மை விட்டால்.... "இந்தியனுக்கு இந்தியன் உதவாமல் வேறு யார் வருவார் உதவ"

வேதாந்தம் பேசுகிறார்கள்.. இவர்கள் உணரவில்லை... இப்போ திருக்கும் இவ்வாழ்வை சக இந்திய ராக உணர்ந்திருந்தால் எவ்வளவோ நல்ல வாழ்வாக மாற்றியிருக்கலாம் என்பதை. மகாதீர் மாற்றவில்லையா மலாய்க்காரர்களின் தலையெழுத்தை? லிம் லியோங் சிக் கொடுக்கவில்லையா சீனர்களுக்குப் புதிய பரிணாமத்தை?

பதவியைத் தக்க வைத்தது தவிர வேறு எதையும் உருப்படியாகச் செய்ய வில்லை நம்மவர்!

நினைத்து நினைத்துக் கட்டு வதற்கெல்லாம் மக்கள் பணம்தான் கண் களில் தட்டுப்பட்டதா? அரசாங்கத் திடம் கேட்க வேண்டியதுதானே? ம.இ.காவின் உண்டியலில் இருந்து எடுக்க வேண்டியதுதானே? கோடிக் கணக்கில் இருக்கும் தன் சொத்தில் இருந்து போட வேண்டியதுதானே அப்படி ஓர் அக்கறை சமுதாயத்தின் மேல் இருந்தால்?

அப்படியென்ன மலேசிய இந்தி யர்கள் கொழுத்தா இருக்கிறார்கள்? இல்லை... கர்ண பரம்பரையிலிருந்து வந்தவர்களா?

தலைவரின் அபிமானத்தைப் பெற ம.இ.கா கிளைகளின் விருந்து நிகழ்ச்சி வேறு. பிள்ளைகளுக்குப் புத்தகம், காலணி, புதுச் சீருடை வாங்க வைத்திருந்த பணம் சுளையாக இந் நிகழ்ச்சிக்குப் போகும்! ரேடி யோவில் கேட்கும் பாடலை, டிவியில் காணும் ஆடலை சுதி மாறாமல், தாளம் மாறாமல், நடன அசைவு மாறாமல் ஆடு வதற்கும் பாடுவதற்கும் பணம் கொடுக்க வேண்டுமாம்! அது தன் பெற்றோரின் மருத்துவச் செலவிற்கான பணமாகக் கூட இருக்கலாம். இதனால் யாருக்கென்ன கவலை. அவர்களின் கவலையெல்லாம்...

"ஐயோ... கல்லூரி நல்லா வரணுமே... எல்லோரும் போய் நல்லா படிக்கணுமே.... நம்ம தலைவர் உச்சிக் குளிரணுமே...." என்பதுதான்.... தன் பிள்ளை படிக்கும் தமிழ்ப் பள்ளி மூடுவிழா கண்டாலும் ம.இ.காவின் மருத்துவக் கல்லூரியின் திறப்பு விழாவில் பூரிப்புக் கொள்வர்!

என்னே உலகம்!

என்னே மனிதர்கள்!

"தமிழ்ப்பள்ளிகளின் மூடுவிழாக்கள்"

"ரப்பர் / செம்பனைத் தொழிலாளர் களின் மாதச் சம்பளம்"

"இந்திய இளைஞரிடையே வன்முறை"

"இந்திய மாணவர்களின் கல்வி பின்னடைவு நிலை, குறிப்பாக UPSR தேர்ச்சி அடைவு நிலை"

"மலாய், ஆங்கில பத்திரிக்கைகள் கண்டு கொண்ட இந்தியர்களின் வறுமை, கேவல நிலையைக் கண்டு கொள்ளாத நாட்டின் நாளிதழ்கள்! என்று தீர்க்கப்படாத பிரச்சினைகள் எவ்வளவோ இருக்க இந்த மருத்துவக் கல்லூரி இப்போது ரொம்பவும் அவசியமா? ஏற்கனவே இருக்கும் டேப் எதைச் சாதித்துக் கிழித்தது?

'டேப்'பின் ஒரு பாடமாக மருத்துவத்தையும் சேர்த்தால் என்னவாம்?

மருத்துவக் கல்லூரிக்கென வந்து விடியும் பணத்தை இந்திய இளைஞர்களை நல்வழிப்படுத்த பயன்படுத்த முடியாதா?

"முடியவே முடியாது... இதுதான் திட்டம்.... இதன்படிதான் நடப்போம்" என்று கூறினாலும் பிரச்சினையில்லை.

என்ன...ஒரே ஒரு வேண்டுகோள் விடுப்பேன்! இந்திய சமுதாயத்திலிருந்து மட்டும் பணத்தைக் கொள்ளையடிக்காமல் அதை வேற்றினத்தாரிடமிருந்தும் பெறப் பாருங்களேன்! நம் இந்தியன்தான் இளிச்சவாயன்... கேட்டால் கொடுத்து விடுவான் அவற்காக வேற்றினக் காரனும் என்ன அப்படியேவா இருப்பான்? சத்திய மாக... இம்மருத்துவக் கல்லூரியில் பெரும்பான்மையினராகப் படிக்கப் போவது வேற்றினக்காரன்தான் ஆகையால் உங்கள் பிள்ளையும் இங்கே படிக்கும் வாய்ப்பு உண்டு என்று வேற்றினக் காரனிடம் பணம் வசூலித்துப் பாருங்களேன். பணம் கிடைக்கிறதா இல்லை வேறு ஏதாவது கிடைக்கிறதா என்றும் பார்த்து விடுவோம்!

## தமிழ் வளர்க்க புறப்பட்டிருக்கும் தலைவர்கள்

- மு. தமிழரசன், கோலகெட்டில் -




ம.இ.கா தமிழ் பள்ளியையும் தமிழையும் தமிழர் களையும் இந்நாட் டில் பிரதிநிதிக்கும் கட்சி என அடிக்கடி மார்த்தட்டி கொள்கிறது.

இப்படி சொல்லிக் கொண்டே தமிழைப் புறக் கணிப்பதும், புறந்தள்ளு வதும் இதனுடைய செய லாகவே இருக்கிறது.

இந்தப் படத்தைப் பாருங்கள்! சற்றுப் பாருங்கள். இவர்கள் யார்? தமிழர்களா? தமிழர் பிரதிநிதிகளா? அல்லது மலாய்க்காரர்களா?

இவர்களுக்கு பின் புறமும் தமிழில்லை. கையில் ஏந்தி இருக்கும் அட்டையிலும் தமிழில்லை. அப்படியானால் இவர்கள் யார்?

இவர்களுக்கு யார் இந்தத் துணிவைத் தந்தது?

இந்த நிலையை நாம் அனுமதிப்போமானால், தமிழை அழிக்க மாற்றான் தேவையில்லை. இது போதுமான சான்று.

இவர்களுக்கு இவ்வளவு பெரிய தொகையை யார் கொடுத்தது? தமிழர்கள் தானே?

தனது வியர்வையை சிந்தி மணிக்கணக்கில் நாள் கணக்கில், வெய்யிலில், மழை என பாராது ஒவ் வொரு காசாக சேர்த்து சம்பாதித்து கொடுத்த பணமிது.

இப்படி தமிழர்களிடமிருந்து பெற்ற பணத்தைக் கொண்டு, தமிழையே புறக்கணிக்கும் துணிவு இவர்களுக்கு யார் தந்தது?

இது நீண்ட நாட்களாகவே பல ரூபங்களில் செயல்பட்டு வரு கிறது.

இதனை நாம் அனுமதிக்கக் கூடாது. இப்படிப் பெறப்படும் பணத்தைக் கொண்டு கட்டப்படும் பல்கலைக்கழகத்தில் தமிழிருக்குமோ? அட பாடத்தில் இல்லை என் றாலும், பலகையில் பெயர்ப் பலகையிலாவது தமிழிருக்குமா? செய்வார்களா? நம்பலாமா?

சிந்திப்போமா!



பக்க அன்பளிப்பு : பிரதீப், கோலாலம்பூர்.

படிப்பகம்

www.padippakam.com



## மாசாய் காந்தி தமிழ்ப்பள்ளியின் பெயர் மாறியது ஏன்!

- கே.ஜி. மணியம், ஜோகூர் -

சுபாங் ஜெயாவில் கட்டப்பட்டிருக்கும் வாவாசான் தமிழ்ப்பள்ளிக்கு துன் சம்பந்தன் பெயர் இடப்படும். என கல்வி அமைச்சர் அறிவித்த செய்தி மகிழ்ச்சியை அளிக்கிறது.

கல்வி அமைச்சின் இந்தக் கொள்கையை அவரது இலாக்காவில் உள்ளவர்கள் எல்லாரும் பின்பற்றுகிறார்களா என தெரியவில்லை.

அண்மையில் மெர்லிமோ தமிழ்ப் பள்ளியிலிருந்த 'திருவள்ளுவர் சிலை' அகற்றப்பட்டிருக்கிறது. இது ஒரு அத்துமீறிய செயலாகும். அரசாங்க நிலத்தில் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது முறையற்றதாகும். அரசாங்க அதிகாரிகளே அராஜகத்தில் ஈடுபடுவது - ஜனநாயக நாட்டில் நடக்கக் கூடாது. இச்சம்பவம் தமிழர்களின் மனதைப் புண்படுத்துவது போலாகும். இது சம்பந்தமாக ம.இ.கா.காரர்கள் வாய் திறக்கவே இல்லை. பதவி பறி போய் விடுமோ என்ற அச்சம் போலும்.

இதே போன்று மாசாய் (ஜொகூர்) நகரத்தில் 1946லிருந்து மகாத்மா காந்தி பெயரில் தமிழ்ப்பள்ளி செயல்படுகிறது. இதனை இப்பொழுது எந்த சப்தமும் இல்லாமல் காந்தி பெயரை நீக்கி விட்டு, மாசாய் தமிழ்ப்பள்ளியாக்கி விட்டார்கள். ஒரு வரலாற்று - மகாத்மாவின் பெயரை - ஓசைபடாமல் - அமைதியாக - பெயர் மாற்றியிருக்கிறார்கள். இதற்கு யார் காணம்?

இப்பொழுதுள்ள கல்வியமைச்சின் அதிகாரிகள் - கருவில் - முளைவிடுவதற்கு முன்பே 1946-ல் தொடங்கப்பட்ட பள்ளியின் பெயரை மாற்றும் நோக்கம்தான் என்ன?

அவரை உலகம் மதிக்கிறது. போற்றுகிறது. அம்மகானின் பெயரால் சுமார் ஐம்பது ஆண்டுகள் விளங்கிவந்த மாசாய் தமிழ்ப் பள்ளியின் பெயரை மாற்றியது சரிதானா?

இப்பள்ளிக்கு காப்பாளர்களில் ஒருவர் - ஜொகூர் மாநில மஇகா தலைவர் டத்தோ பாலகிருஷ்ணன். இவரது பெயரால் ஒரு மண்டபமும் இப்பள்ளியில் உண்டு. தமிழுக்காக பாடுபடுவர்களில் இவரும் ஒருவர். இவரும் மௌனம் சாதித்தது ஏன்?

இப்பள்ளியில் வருடந்தோறும் நடைபெற்று வந்த காந்தி ஜெயந்தி - சரஸ்வதி பூஜைகளும் இப்பொழுது இல்லை. ஜொகூர் கல்வி இலாக்கா அதிகாரிகளின் வாய் மொழி உத்தரவு என அறிய வந்தது.

இந்நிலை நீடித்தால் - எதிர் காலத்தில் தமிழ்ப்பள்ளிகளின் நிலை என்ன வாகும். இது தான் வாவாசான் பள்ளியின் முன்னோடி நடை முறையா?

## புத்தக கண்காட்சி நடத்தும் புண்ணிய வான்களுக்கு வேண்டுகோள்!

ஏவுகணை, கோலாலம்பூர்

மலேசியாவில் கடந்த 1998ம் ஆண்டு தொடங்கிய புத்தகக் கண்காட்சி ஆஹா ஓஹோ என்று நடைபெறுவது மகிழ்வுக் கொள்வோம், பாராட்டுவோம். புத்தகக் கண்காட்சி நடத்தும் புண்ணிய வான்கள் மலேசிய தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏதோ பெரிதா சாதனைப் புரிந்திட, மலேசிய தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய நூல்களை கண்காட்சியில் வைத்து விற்பனைச் செய்திட, ஏதோ ஒப்புக்காக நூல்கள் வாங்கிட ஆஹா... ஓஹோ என்று விளம்பரம் படுத்தியதை எழுத்தாளர்கள் அறிவார்கள்.

விளம்பரம் கண்டு ஆனந்தமடைந்து சுமார் அறுபதுக்கு மேற்பட்ட கவிஞர்கள் எழுத்தாளர்களின் நூல்களைப் பெற்றுள்ளனர். ஆனால் ஆஹா ஓஹோ விளம்பரப்படி அந்த எழுத்தாளர்களுக்கு நூலுக்கான பணத்தை இதுவரைக் கொடுத்தார்களா? என்பது கேள்விகுறியாக இருந்து வருகின்றது.

பல எழுத்தாளர்கள் நேரிடையாகவும் தொலைப்பேசி வழியாகவும் தொடர்புக் கொண்டதும் ஆவன செய்கிறோம்..... அவரிடம் சொல்லுகிறோம் என்பதோடு முடிந்தது. நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் மலேசிய எழுத்தாளர்களின் நூல்களுக்கு பணம் கொடுக்க முடியாதவர்கள் தமிழக எழுத்தாளர்களின் நூல்களை பல இலட்சம் வெள்ளி கொடுத்து வாங்குவது எப்படி?

அங்கே பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் இருக்கிறார்கள். எழுதுகிறார்கள். எழுதி என்ன செய்ய முடிந்தது? தமிழ் பயிற்று மொழியாக முடிந்ததா! மது வியாபாரத்தை ஒழித்திட முடிந்ததா?

தமிழ்ப் படங்களில் பாடல், உரையாடல், படப் பெயர்களும் பிற மொழி என்று எல்லை மீறல், தமிழகத் தமிழன் கடைத் தேற, இன மத, பொருளியல் ஏற்றத் தாழ்வுகளுக்கு முடிவு தான் கண்டார்களா?

தயவு கூர்ந்து சிந்தியுங்கள் இனிமேலும் காலம் கடத்தாமல் நூல்களுக்கான பணத்தைக் கொடுத்து உங்களை புண்ணிய வான்களாக்கிக் கொள்ளுங்கள்!

## தூய தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்!

**தொழிலாளர் சிறப்பிதழில் வெளியான தூய தமிழ்ச் சொற்கள் போட்டியில் வழக்கத்தை விட அதிகமானவர்கள் கலந்து கொண்டமைக்கு மனமகிழ்வை அளிக் கின்றது. மிகச் சரியான விடை எழுதிய 34 பேரில் இருவர் RM25.00 பரிசு பெறுகின்றனர். இருவருக்கும் பரிசுப் பணம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. வாழ்த்துகள்!**

**தூய தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து விளக்க மளிக்க மலேசிய தமிழ் நெறிக் கழகத்தின் தேசியத் தலைவர் தமிழ்த்திரு. திருமாவளவன் அவர்கள் முன் வந்திருக்கிறார். அவருக்கு எமது நன்றி. அவரது குறிப்புரை இது!**

1. அவலம் - தூய தமிழ்ச் சொல்லே. இழிவு, குறைவு எனும் பொருளை இச்சொல் வழங்குகின்றது.

2. விமோசனம் - விடிவு

3. ஆச்சரியம் - வியப்பு

4. கல்குலேட்டல் - பண்டை நாளில் கல்லை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணிக் குவிப்பதையே 'கல்குவிப்பு; என்பர். Calculate - a tum = t rec kon by help of little stones.
Culculus, dim. of calx, a Stone.

Calx - கல்

கல்குவி - கல்குலி - Culculus என்று இலத்தின் மொழிக்குச் சென்றது. இச்சொல் தமிழிலிருந்து இலத்தின் மொழிக்குச் சென்று பின்னர் ஆங்கிலத்தில் மருவி வழங்குகின்றது. இக்காலத்தில் கணக்குச் செய்ய பயன்படுத்தப் படும் கருவியை இவ்வாறு அழைக்கின்றனர். நாம் கணக்கி என்று கூறலாம்.

5. மோகனம் - மயக்கம், காமம் எனும் பொருளுடைய சமஸ்கிருதச் சொல். மோகனப் புன்னகை என்பதை மயக்கப் புன்னகை எனலாம். மயக்கம்தரும் தன்மையால் மோகனம் என்று பண்ணுக்குப் பெயர், தமிழில் முல்லையந்தீம்பாணி என்று மோகனத்தைப் பண்டை நாளில் அழைத்தனர்.

இப்பண் உலக நாடுகள் பலவற்றுள்ளும் பயிலப்படுகின்றது.

6. விஜயம் - வருகை

7. அமலன் - அல் + மலன் = அமலன்
மாசு இல்லாதவன் என்ற பொருளைத் தருவதால் மாசிலன் என்று கூறலாம்.
மாசு - என்பது கருமை பொருளிலேயே குற்றத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| மய் - மை | = கருமை |
| மய் - மாய் | = கருப்பு |
| மாயோன் | = கருத்தோன் |

உல் - முல் - மல் - மால்
மால் + அன் - மாலன் - கரு நிறமுடைய மாலவன்

| | | |
|---|---|---|
| மல் + அம் | = | மலம் |
| மலம் | = | மாசு<br>மாசுடைய கழிவு |

எனவே இச்சொல் தமிழ்ச் சொல்லே.

8. ஜிலேபி = தேன் முறுக்கு / சீனி முறுக்கு

9. தலா - "தலா இருபது வெள்ளி வழங்கினர்" என்று பலரும் கூறுகின்றனர். இதனை தலைக்கு இருபது வெள்ளி வழங்கினர் என்று கூறுவதே தமிழியல்பு. தலை தலாவாக மாறியது. எனவே தலைக்கு என்றோ மேனிக்கு என்றோ கூறலாம்.

10. அறிவு ஜீவி - தமிழையும் சமற்கிருதத்தையும் கலந்து உருவாக்கப்பட்டுள்ள மணிப்பிர வாளச் சொல். அறிவுயிரி என்பதே தமிழ்.

பரிசு பெறுவோர்:

**1. இந்திராணி குப்புசாமி, ஈப்போ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.**

**2. சுப்பிரமணியம் சினனையா, காஜாங்.**

### தூயதமிழ்ச் சொற்கள் போட்டி

நல்ல தமிழ்ச் சொற்களை அறிமுகம் செய்யவும், புதிய தமிழ்ச் சொற்களைக் கண்டறியவும் உதவக் கூடிய போட்டி இது!

உங்கள் தமிழார்வத்தையும் தமிழ்ப் பண்பையும் வெளிப்படுத்தி RM50.00 வெற்றி கொள்ள வாழ்த்துகள்!

**போட்டி இறுதிநாள் : 30-06-2002**

கண்டுபிடிக்க வேண்டிய சொற்கள்:

1. வினயம்
2. விலோமன்
3. வசீகரணம்
4. யந்திரம்
5. பூச்சியின்
6. விஸ்வலிங்கம்
7. மஞ்சுளா
8. ஜவால்
9. பூசணம்
10. பீதாம்பரம்

## நிலைக்குமா நியாயம்?



**சில்லறைத்தனமான சீண்டல்கள்...
சகித்துக் கொள்ள
சந்தர்ப்பங்களே சங்கிலித்தொடராய்!**

**சுட்டெரிக்கும் சூரியனைவிட
பரிகசிக்கும் நிலாவே
பதற்றமுற வைக்கிறது!**

**நிராகரிக்கப்படும் மனுக்களால்
சில சமயம்
மௌனங்களுக்குள் மல்யுத்தம்!**

**உறவுகளும்
உதறல்களாய் மாறின
உச்சரிப்புத் தப்பானதால்!**

**என்ன செய்வது....?**

**காலித்தனம்கூட
காவியமாக்கப்பட்டது
காதல் விஷயத்தில் மட்டுமே!**

**கிரகங்களும் சில சமயம்
கிறுகிறுத்துப் போயின
ஜோதிடர்கள் ஆளுமையால்!**

**மெத்தனங்கள்
மெதுவாய் தலைகாட்டின
மேலாளர் போல!**

**மீண்டும் மீண்டும்
வரம் வேண்ட மனிதன்
மரமாய் இறைவன்!**

**நிலைக்குமா நியாயம்
நிரந்தரமாய் அல்ல
தற்காலிகமாய்!**

**- இராம சரஸ்வதி,
பத்துகேவ்ஸ்.**



க்க அன்பளிப்பு : ஸ்ரீ முருகன் (Sri Murugan Trading), பத்தாங் பெர்ஜுந்தாய்.

படிப்பகம்

www.padippakam.com






**இக்கட்டுரை ஸ்கந்த முருகன் முதலாவது அனைத்துலக மாநாட்டுக்காக கார்ல்ஸ் வடிவெல்லா பெல்லி (CARLS VADIVELLA BELLE) அவர்களால் படைக்கப்பட்டது. மலேசியாவில் தைப்பூசம் எவ்வாறு சமூகக் கண்ணோட்டத்துடனும், வரலாற்று நோக்கோடும் கொண்டாடப்படுகிறது என்பதை விளக்கும் கட்டுரையின் இறுதிப் பகுதி இது! தமிழில் தந்தவர் செல்வி கவிதா சுப்பிரமணியம். (ஆ-ர்)**

சமயத்தைப் பற்றிய முரணான கருத்துகளை இணைக்கும் இந்த முயற்சியின் பலனானது எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை உரைக்க இயலாது. இந்து மதத்தின் பகுதியாக வேறு பாடுகளைக் கொண்ட இரு பிணைப்புகளும் (ஆகமத்துவம் / பிராமண வழக்கங்கள் மற்றும் நாட்டுப்புற இந்துச் சமயம்) செயற்கையானதும் தவறானதும் கூட. தொன்று தொட்டு வரும் சமய உறுதியின் (orthodox / classical) வழமையின் பகுதிகள் மறுமுறைப் படுத்தப்பட்டு கீழ்சாதிகளைச் சேர்ந்த பக்தர்களுக்கு தனிசிறப்பான தகுதிகளை வழங்குகிறது. அவ்வாறே 'கீழ்நிலை' பழக்க வழக்கங்களுக்கும் மறு அமைப்பு தந்து, தொன்று தொட்டு வரும் சமய உறுதியின் தன்மைகளும் புகுத்தப் பட்டன. இந்த மாற்றங்கள்தான் தொடர்ச்சியான இந்துசமயமாகக் கண்டறியப் படுகிறது.

மெல்லிய சாதிப்பிரிவுகளைக் கொண்ட மலேசிய இந்திய சமூகத்தினரை ஒற்றுமைப் படுத்தி, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படும் முதன்மையான, ஒன்று சேர்க்கும் வடிவமாக முருகப் பெருமான் விளங்குகிறார். ஆகம முறையிலுள்ள-தமிழ்க் கடவுளான முருகப் பெருமான் சைவ சித்தாந்தத்திலும் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். முருகக் கடவுள் சமயத்தைப் பற்றிய முரணான கருத்துக்களைக் கொண்டவன், கருத்துகளை ஒன்றாக உள்ளடக்கியவன், ஒன்றில் இருந்து தோன்றியதாகவும் மற்றும் பல உள்ளடக்கங்களைக் கொண்டதாகவும் தெளிவுரைக்கப்படுகிறது. இந்தப் பண்புகள்தான் முருகப் பெருமானைத் தமிழ் சமுதாயம் ஏற்றுக் கொள்ளவும் நெருக்கமாக இருக்கவும் விளங்குகிறது. மலேசியாவில் போருக்குப் பிந்திய காலக் கட்டத்தில் உருவான தமிழ் அரசியல் சலனங்களில் பிராமண இன எதிர்ப்பு கொள்கைகளும் மறுபடியும் தலைதூக்கத் தொடங்கியது. இந்தக் காலக்கட்டத்தின் போது, முருகக் கடவுள் திராவிடக் கடவுளாகக் கொள்ளப்பட்டார். தனிச்சிறப்புகளைக் கொண்ட கடவுளாக விளங்கினார். ஆரியக் கலாச்சாரங்களில் உள்ள உத்தேசமான சர்வதிகாரத் தன்மையிலிருந்து விதிவிலக்காய் விளங்கினார்.

## புராண இலக்கிய ஆய்வு

மலேசிய இந்துக்களிடையே, தைப்பூசம் எனப்படுவது முருகப்பெருமானுக்கு சிவபெருமானின் மனைவியான பார்வதி, அசுரர்களின் படைத் தலைவனான சூரபத்பனை வெற்றிக் கொள்ள சக்திவேலை வழங்கினார். இந்தச் சக்தி வேல் வழங்கப்பட்ட நாளை நினைவு கூரும் வகையில்தான் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. சக்தி வேல் என்பது 'மின்சார ஈட்டி' அல்லது வெற்றிவேல் எனக் கொள்ளப்படும்.

பிரபஞ்சத்தின் ஆய்வின்படி நோக்கின், மேற்கண்ட தைப்பூசம் பற்றிய புராண இலக்கியம் காரண காரியத் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் பற்றிய ஆய்வுகளின் தோய்ந்து போகும் நிலைமையையும் எப்படி ஒரு தொழிலை முடிவுக்குக் கொண்டு வருதலையும் காட்டுகிறது. இந்தக் கடவுள் தன்மையான விடயம் மிக முக்கியமான இரண்டு நிலைமையைக் கொண்டிருக்கிறது. 'ஆண் தன்மை' 'பெண் தன்மை' என்று அவை பகுக்கப்பட்டுள்ளது. பெண்மையின் தன்மைகள் இன்றி சிவபெருமானின் அடையாளங்கள் தொலைந்து விடுகின்றன. அதே போல்தான், சக்தி (பார்வதி) ஆண்மையின் தன்மைகள் இன்றி தோன்றுவதற்கில்லை. சிவபெருமானின் உருவாக்கத்தினால் ஆன முருகனுக்கு, பிரபஞ்சத்தின் அமைதியைக் கொண்ட எந்த ஒன்றோடும் சார்ந்திராது நிலைத்திருக்கும் தன்மையும் பிறப்புக்களையுடைய செயல்திறன்களையும் தெளிவாகக் காட்டுகிறது. முருகன் மற்றும் வேலின் இணைப்பானது சைவ சிந்தனையின்படி ஒன்றிணைக்கப்பட்ட இரண்டு தன்மைகளாகும் 'முருகனும் அவனது வேலும் சிவசக்தியை - பிரபஞ்ச இணைப்பை காட்டுகிறது.

மனிதனின் நிலையில் போர்க்களம் உட்புறமாகவும் வேல் என்பது ஆன்ம நிலையான விடுதலையின் தோற்றமாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முருகனின் 'பிறப்பு' என்பது யோகிகளின் பிரார்த்தனையின் பேரில் ஏற்புடையதாகக் கருதப்பட்டு சிவபெருமானால் வழங்கப்பட்டது. மனிதனின் அகங்காரத்தினால் உருவான அறியாமையின் அடிமைத்தனத்தை அழிக்க சிவபெருமானால் முருகன் படைக்கப் பெற்றான். இச்செயலுக்கு ஆக்கம் கொடுத்தது பார்வதியேயாகும்.

வேலினை அடைந்த முருகப்பெருமானை நினைவு கூரும் வகையிலான இவ்விழா சொந்த கர்ம வினைகளைத் தீர்த்துக் கொள்ளும் சாதகமான காலமாகவும் குடும்ப, சமூக வாழ்வில் ஏற்படும் நல்ல திருப்பங்களாகவும் நேர்த்தி செய்யும் ஒரு நாளாகவும் பல பக்தர்களால் கருதப்படுகிறது.

தை மாதத்தில் பூச நட்சத்திரம் தோன்றும் நாளன்று தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. (Brihaspati - Jupiters) எனப்படும் கோள் இந்த நாளன்று ஆட்சிப் புரிவதாகவும் அது நன்மைகளைக் கொண்டு வருவதாகவும் நம்பப்படுகிறது. மேலும் முழு நிலவு அல்லது பௌர்ணமி நாளன்று பூசம் தோன்றுவது தனிச் சிறப்பாக விளங்குகிறது. முருகப் பெருமான் வழிபாட்டின் நம்பிக்கையின்படி, பூரண நிலவின் போது முருகனின் சக்தி முழுமையான தாகவும் முதிர்ந்த நிலை பெறுவ தாகவும் கொள்ளலாம் பூச நட்சத்திரமானது தண்டபாணியின் புகழாகவும், ஆன்மநானத் தன்மையையும் அல்லது போர்க்களப்படை தலைவராகவும் அல்லது இரண்டையும் இணைத்து கொண்டுணர்த்தும் பணியாள் பொருளாக விளங்குகிறது. பிந்திய காலத்தில் விரோதிகளை படையினால் தோல்வியுறச் செய்தல்; முந்திய காலத்தில் கட்டுக்கடங்கா உணர்ச்சிகளை பூச நட்சத்திரத்தினைக் கொண்டு வெற்றிக் கொள்ளல் - பழனியில் முருகப் பெருமான் தண்டாயுதபாணியாகவும், ஆன்ம ஞானத்தின் சின்னமாகவும் விளங்குகிறான்.

## தைப்பூசம்: அடிப்படையான அமைப்பு

தைப்பூசத் திருநாள் முதல் முறையாக 1888-ஆம் ஆண்டு பத்துமலையில் கொண்டாடப்பட்டது. இந்த முயற்சி காயாரோகனம் பிள்ளை அவர்களால் (Kayaroganam Pillai) செயலாக்கம் பெற்றது. ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் தேவஸ்தானத்தின் அமைப்பாளரான இவரின் கனவில் சக்தி தோன்றி தனது மகன் முருகனுக்காக பத்துமலையின் உச்சியில் கோயில் கட்டுமாறு வேண்டினாராம் நகரத்திலுள்ள கோயிலைப் பராமரிப்பது போலவே பத்துமலை கோவிலையும் தேவஸ்தானம் பராமரித்து வந்தது. பத்துமலையில் தைப்பூசத்தை நடத்துவதற்கான பொறுப்பையும் ஏற்றிருந்தது.

மலேசியாவில் தைப்பூசம் மூன்று நாட்களாகக் கொண்டாடப்படும். அதிகாலையிலே கோலாலம்பூரின் மையத்திலிருக்கும் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலில் இருந்து பத்துமலைக்கு முருகப்பெருமான் அழைத்துச் செல்லப்படுவார். இவ்விரு இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் 12.8 கி.மீ ஆகும். இந்த அதிகாலை ஊர்வலமே, திருவிழாவின் தொடக்க அங்கமாக அமையும். தேர் ஊர்வலத்தின் வழி பின்செல்பவர் ஏறக்குறைய 150,000க்கும் கூடுதலாக இருப்பர் என்று காவல் துறையினரால் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த வெள்ளி இரதம் சமயச் சின்னமாகவும், தோற்றமாகவும் விளங்குகிறது. இரத ஊர்வலத்தின் போது நாதஸ்வர இசையோடு மத்தள இசையும், கோலாட்டக் குழுவினரும், தேவாரம் மற்றும் பஜனைகளைப் பாடியவாறு பக்திமான்களும் இரதத்தின் பின் செல்வர். மற்றும் சிலர், கூட்டத்தினருக்குப் பானங்களையும் உணவுகளையும் பகிர்ந்தளிப்பர். சில பக்தர்கள் ஊர்வலத்தின்போது காவடிகளையும் ஏந்தி வருவர்.

பத்துமலையை அடைந்தவுடன், மலையின் அடிவாரத்திலுள்ள கோவிலில் முருகப் பெருமானின் சிலை அமர்த்தப்படும். இரதத்தில் கொண்டுவரப்பட்ட தங்க வேல் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோவிலின் மூத்த பண்டாரத்திடம் வழங்கப்படும். பத்து மலையின் பிரதான குகையிலுள்ள கோவிலுக்கு இவ்வேல் கொண்டு செல்லப்படும்.

இரண்டாவது தினத்தில், முருகப்பெருமானின் வழிபாடுகளும் மற்ற சேவைகளும் செய்வதற்கு உரிய நாளாகும். நேர்த்திக் கடன்களைச் செலுத்துவதற்காக காவடிகள் எடுக்கும் ஆயிரமாயிரம் பக்தர்களின் காட்சியைக் காண பல மக்கள் குழுமியிருப்பர். அவர்களில் சிலர் ஆத்ம திருப்தியை அடைவதற்கு மற்ற சேவைகளைச் செய்வர். இவற்றில் பந்தல்கள் கட்டுதல், உணவுகளையும் பானங்களையும் பகிர்ந்தளித்தல், முதலுதவி செய்தல் அல்லது மற்றத் தேவையான சேவைகள் செய்வது போன்றவை அடங்கும்.

தைப்பூசத்தின் மூன்றாவது நாளில், முருகப் பெருமான் ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு திரும்பக் கொண்டு செல்லப்படுவார். காலை எட்டு மணிக்கும் ஒன்பது மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தங்கவேல் மலையில் உள்ள கோவிலிருந்து மலையடிவாரத்திலுள்ள முருகனிடம் திரும்ப வைக்கப்படும். பின்னர், முருகப் பெருமான் வெள்ளி இரதத்தில் அமர்த்தப்பட்டவுடன் பத்துமலையை விட்டு புறப்பட்டுச் செல்லும். செந்தூல் நகரைக் கடந்து வெள்ளி இரதம் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலுக்குக் கொண்டு செல்லப்படும். செந்தூல் நகர் என்பது முந்திய காலத்தில் வேலை செய்யும் இந்திய மக்களின் புறநகராக இருந்தது. தற்போது, இந்நகர் பல மேம்பாடுகளுக்கு உட்பட்டிருக்கிறது. சாலைப் போக்குவரத்து இரத ஊர்வலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளதால் நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும் ஊர்வலம் செந்தூல் நகரில் ஓய்வு பெறும். மாலை 6.30 மணிக்கு இரதத்தில் முருகன் மறுபடியும் அமர்த்தப்படுவார் கோவிலுக்குச் செல்லும் ஊர்வலத்தில் எண்ணிலடங்கா மக்கள் கலந்துக் கொள்வர் ஊர்வலத்தின்போது பக்தகோடிகள் பிரார்த்தனை செய்வதற்காக ஆங்காங்கே இரதம் சிறிது நேரம் நிற்கும். பொதுவாகவே இரத ஊர்வலம் பின்னிரவு ஒரு மணி வரை சென்று அடைந்திராது.

### அவரவர் கட்சியில்

**இனியொரு விதி**  
**செய்வோம்...**

**அவரவர் கட்சிக்கெல்லாம்**  
**தனித்தனி**  
**பல்கலைக்கழகம் என்று**

**இவர்கள் சுற்றத்தார்**  
**படிக்க**  
**படித்து...அடிவானத்தைக் கிழிக்க....**

**மக்களின் பிரதிநிதி**  
**அதனால்தான் சுரண்டுகிறார்கள்**  
**இனி..... செத்துப் போனது நீதி**

**பால்மரக்காடும் செம்பணைரோடும்**  
**எங்களின் வாழ்வென்று**  
**எழுதிவைத்தானோ!**

**தொட்டனைத் தூறும்**  
**மணற்கேணி - நாங்கள்தான்!**  
**சுரண்ட சுரண்ட**  
**நிதி வார்ப்போம்**  
**பால்மரத்தைப் போல.....**

**கேட்க பாமரன் முதல்**  
**படித்தவன் இல்லை**  
**மலையகத்து தமிழகம்**  
**ச்சீ! என்ன மடத்தனம்!**

**பா.அ. சிவம்**



பக்க அன்பளிப்பு : *திரு. ரவி, கோலாலம்பூர்.*

படிப்பகம்

www.padippakam.com



## காவடி எடுக்கும் சம்பிரதாயங்கள் / சடங்கு முறைகள்:

காவடி எடுக்கும் சடங்கு முறைகள் மலேசியாவில் கொண்டாடப்படும் தைப்பூசத்தின் ஒப்புயர்வற்ற ஒரு சின்னமாகும். காவடி எடுப்பது அசுரர் - இடும்பன் பக்தனாக மாறிய புராண இலக்கிய ஆய்வுகளோடு சம்பந்தப்படுத்தப்பட்டு உருவகத்தன்மையும் வழங்கப் படுகிறது.

அகத்திய ரிஷிகள் சிவபெருமானை வழிபாடு செய்வதற்காகக் கைலாச மலைக்கு பயணம் செய்தார். அவர் சிவகிரி, சக்திகிரி எனும் இரண்டு மலைகளை எடுத்து தென் இந்தியாவில் வழிபாட்டு மையமாக வைக்க வேண்டும் என்று விதித்தார். இந்த நிபந்தனையை எதிர்கொள்வதற்காக சூரபத்மனின் படையில் சேவை செய்த அசுரனான இடும்பனைப் பணியிலிட்டார். இடும்பன் இரு மலைகளையும் எடுத்து தோளில் சுமப்பதற்காக நீண்ட மரக்கழியில் இணைத்துக் கட்டினான். இதுதான் தொடக்கக்கால காவடியின் மாதிரியாகும். தற்போது, பழனி என அழைக்கப்படும் இடத்தின் அருகாமையிலுள்ள ஒரு காட்டில், இடும்பன் மலைகளை இறக்கிவிட்டு ஓய்வெடுத்தான். பயணத்தைத் தொடங்க நினைத்தபோது, அந்த மலைகள் நிலத்தோடு ஒட்டியிருந்தன. அந்த மலைகளை ஏறும்பொழுது கிழிந்த ஆடைகளை உடுத்திய சிறுவனைக் கண்டுற்றான். அச்சிறுவன் தனது கைகளில் ஒரு கழியினை வைத்திருந்தான். மலைகள் தன்னுடையது என்றான். இந்தப் புராணக் கதைதான், தைப்பூசத்தில் வழிபாட்டு முறைகளுக்கு அடிப்படையாய் அமைந்தது. பக்தர்கள் சுமைகளை தனது தோளில் ஏந்தி வந்து முருகப்பெருமானின் காலடியில் இறக்கி வைப்பதன் மூலம், தங்களின் சுமைகளிலிருந்து விடுவித்து தூய எண்ணங்களை அடையக் கோருகிற மாதிரி இச்செயல் அமைகிறது.

'காவடி' என்பது சுமையைச் சுட்டிக் காட்டுவதாக பல மலேசிய பக்தர்கள் கருதுகின்றனர். இந்தச் சுமை தைப்பூசத்தின் அன்று இறக்கி வைக்கப்பட வேண்டும் என்று ஒருவர்கூடக் கருதுவதில்லை. காவடியைத் தூக்கி வரும் போது பக்தன் இடும்பனைப் போல் முயற்சி செய்வதாகவும் கடவுளின் ...கிமையை அறிந்து அவன் பாதம் பணிவ தாகவும் ...ணரப்படுகிறது. இரண்டாவது காவடி என்பது கோவிலின் சிறு உருவமாகவும் தன்னுள் இறைவனைக் காண இயலுவ தாகவும் ...ன்னைக் காணவும் பக்த னுக்குத் துணை யாய் ...ருக்கிறது. மூன்றாவதாக, குகையிலுள்ள ...ருகனுக்காக பக்தர்கள் பால்குடங்களை ...ந்தி வருவார்கள்.



காவடி எடுப்பது சுலபமானதாகவும் ...டினமான நிலைகளிலும் காணப்பெறலாம். ...டுமையான நிலையில் காவடி எடுப்பதென்பது ...லர் உடலை வருத்தி நேர்த்திக்கடன் ...சய்வதாகவும் விளங்கும். சில இளைஞர்கள் ...ாவடியுடன் கயிற்றினால் இணைக்கப்பட்ட ...காக்கிகளைத் தங்களின் முதுகுகளில் ...சலுத்திக் கொள்வர். இவை உறுதியுடன் ...ருக்கப் பக்தனின் பின்னால் வருபவன் ...துகாத்துக் கொள்வான்.

பெரும்பாலான காவடி தூக்கும் ...ந்தர்கள் இரண்டு சிறிய வேல்களை நாக்கின் வழியாகவும் கன்னங்களின் வழியாகவும் செலுத்திக் கொள்வர். இதனது பொருளானது, பேசும் தன்மையை தடுப்பதன் மூலம் முருகனிடம் முழுக் கவனத்தை செலுத்த இயலும், கடவுளின் பாதுகாப்பு இருந்தால் பக்தனின் உடலிலிருந்து குருதி மற்றும் வலி ஏற்படுவதில்லை என நம்புகின்றனர். வேலைச் சதையினில் செலுத்துவதன் மூலம் நிலையில்லாத மனித உடலின் உண்மைகளை உணர்த்துகின்றது.

அனைத்துக் காவடிகளும் முருகப் பெருமானுக்கு மட்டும் எடுக்கப்படுகிறது என்று கூறுவதற்கில்லை. எல்லா தேவதேவிகளுக்கும் இந்த தைப்பூசத்தில் பங்குண்டு. இந்துக் கடவுள்கள் (கிருஷ்ணன், இராமன், அனுமான்) மற்றும் கிராமப்புறக் காவல் தெய்வங்களான முனியாண்டி, மதுரை வீரன், காளியம்மன், துர்க்கா தேவி போன்ற கடவுள்களுக்காகவும் காவடி எடுக்கப்படுகின்றது.

செய்த பாவத்தைத்தானே ஏற்றுக் கொள்ளும் தண்டனையாகவும், ஆன்ம நிலையை அடைவதற்காகவும் கெடுதல் அளிக்கும் கர்ம வினைகளிலிருந்து விடுபடுவதற்காகவும் மற்றும் பலர் தாங்கள் விடுத்திருக்கும் சத்தியங்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் காவடிகளை ஏந்துவர். நோயிலிருந்து மீட்சிப்பெறல், குழந்தைப் பாக்கியம் கிட்டுதல், பெருமானுக்கும் பக்தருக்கும் இடையிலான பரஸ்பர உறவைக் காட்டும் வகையில் பக்தர் முருகனுக்கு நேர்த்திக் கடனைச் செலுத்துவர்.

மலேசிய இந்து சமுதாயத்திலிருந்து அனைத்து பிரிவுகளையும் சார்ந்த மக்களை தைப்பூசத் திருநாள் இணைக்கின்றது. அனைத்து சமூக பொருளாதார நிலைகளிலிருந்தும் அனைத்துப் படிப்பறிவு உள்ள அல்லது படிப்பறிவு இல்லாத மக்கள் திருவிழாவில் கலந்துக் கொள்வர். வேலையில்லாத இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் வணிகர்களையும் இவ்விடத்தில் காணலாம்.

முன்பு தமிழர்களுக்கு மட்டும் உரியதாய் விளங்கும் தைப்பூசத்தில் தற்போது அனைத்து இந்தியர்களும் கலந்து கொள்கின்றனர். சீக்கியர்களும் சீனர்களும் கூட பக்தர்களாக முருக பெருமானைத் தொழுகின்றனர்.

பக்தர்கள் ஏழு நாட்களுக்கு விரதமிருப்பர். இது தற்காலிகமாக ஆன்மாவை தூய்மைப்படுத்திக் கொள்வதற்கேயாகும். காவடி எடுக்கும் சில பக்தர்கள் மெய்மறந்த நிலையில், காணப்படுவர். இதை உருவாக்குவதற்கு பக்திப் பாடல்களும், உருமி மேளமும், ஊதுபத்தி வாசனைகளும் வழிவகுக்கும். இந்த 'அருள்' நிலை அடையும்போது உடலில் நடுக்கமும், மிகைப்படுத்தப்பட்ட முக பாவனைகளும், கால்களில் குதிப்பது போல் அசைவுகளும் ஏற்படும். இம்மாதிரியான தருணத்தில்தான் காவடி பொருத்தப்படுகிறது, வேலும் செலுத்தப்படுகிறது.

மெய்மறந்த நிலை 'அம்னேசியா' (AMNESIA) எனும் உணர்ச்சியினால் ஏற்படுகிறது என சைமன் கூறுகின்றார். என்னுடன் வந்த பக்தர்களுக்கும் பேட்டி கண்ட பக்தர்களுக்கும் சைமன் கூறுவதுபோல் ஏற்படவில்லை. சைமன் கூறியது போல் சில சமயங்களில் ஏற்பட்டாலும் 'அருள்' நிலை அடைவதை 'Bourgoignon' நடப்பதை காண இயலும் இந்நிலை அருள் கண்ட பக்தன் தன்னைச் சுற்றி நிகழுவதை அறிந்திருப்பதும், சொல்வதற்கு ஏற்ப செயல்படுவதும், தன்னை உலகத்திலுள்ள சக்தி ஆட்டிப்படைப்பதாக உணரு கின்றான். இந்நிலையை நானும் எதிர்நோக்கியுள்ளேன்.

காவடி பொருத்தப்பட்ட பிறகு, பக்தன் காவடியை ஏந்தி இலக்கை நோக்கி நடப்பான். பக்தனுக்கு பாதுகாப்பாக அவனைச் சுற்றி சிலர் பக்திப் பாடல்களைப் பாடி வருவர். வரும் வழியில் 'காவடி ஆட்டம்' ஆடிக் கொண்டே பக்தன் காவடி ஏந்தி வருவான். முருகனை 'நாட்டியத்திற்குரிய' கடவுளாக இக்காவடியாட்டம் பிரதிபலிக்கிறது.

பத்துமலையை அடைந்தவுடன், பக்தர்கள் 272 படிகளில் ஏறிக் குகைக்குச் செல்வர். அங்கேயுள்ள கோவிலை அடைந்தவுடன் காவடியிலிருந்து பால் எடுக்கப்பட்டு, வேலின் மீதும் முருகனின் விக்ரகத்தின் மீதும் பாலாபிஷேகம் செய்யப்படும். இத்துடன் காவடி நீக்கப்படும்; செலுத்தப்பட்ட சிறிய வேல்கள் கழற்றப்படும். அருளிலிருந்து பக்தன் வெளியேற்றப்படுவான். காவடி எடுக்க வேண்டிய உறுதி இத்துடன் முடிவுபெறும்.

காவடி ஏந்திய மூன்றாவது நாளில், பக்தன் இடும்பன் பூசையில் கலந்து கொள்ளுதல் வேண்டும். இப்பூசை பக்தன் இடைப்பட்ட காலத்தில் துறவியாய் வாழ்ந்ததை நினைவுறுத்துகிறது.

### முடிவுரை

மலேசியாவில் கொண்டாடப்படும் தைப்பூசம் புராண இலக்கியங்களின் வழி பின்னப்பட் டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள பழனியில் தைப்பூசம் கொண்டாடப் படுவதைப் போலவே வழிமுறைகளும் சம்பிரதாயங்களும் இங்கேயுள்ள மலேசியர்களுக்கு ஏற்றவாறு அமையப் பெற்றிருக்கிறது.

இரண்டாவது உலகப் போர் முதல் தைப்பூசத் திருநாள் மலேசியாவில் கொண்டாடப்படும் பெரிய அளவிலான இந்துத் திருவிழாவாகவும் பெரும் புகழுடைய திருவிழாவாகவும் விளங்குகிறது. தைப்பூசத் திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையும் காவடி எடுக்கும் பக்தர்களின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே வருகிறது. தைப்பூசத் திருநாள் மலேசிய இந்து மக்களுக்கு மிக முக்கியமானதாக அமைந்து விட்டது.

தைப்பூசக் கொண்டாட்டம் மக்களிடையே பக்தி வளர்ச்சியினைக் கொண்டு வந்துள்ளது. சமூக ரீதியிலோ, மக்கள் தங்களுக்குள் ஒத்துழைத்து சேவைகளையும் வழிபாடுகளையும் நடத்துகின்றனர். தைப்பூசத் திருநாள் சமய முரணான கருத்துக் களை இணைக்கும் ஒரு தளமாக விளங்குகிறது. ஆகம முறைகளும் நாட்டுப்புற வழிபாட்டு முறைகளும் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் முழுமைபெறாத தன்மையை பிரதி பலிப்பதைக் காணலாம். இனத்தின் அடிப்படையில் பிரிக்கப்படும் சமுதாயத்தில் இந்து சமுதாயத்திற்கு முருகப் பெருமான் தமிழ் இந்து கடவுளாக காட்சியளிக்கிறான். மலேசிய இந்துக்களின் கலாச்சாரங்கள் வளருவதற்கான வழியை இவனது பரந்த ஆளுமை வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.▼

## அழகின் இரகசியம்



அழகை வெறுக்கும் பெண்கள் உலகில் இருக்க முடியாது! ஒவ்வொருவரும் தனித்துவமான அழகுடன்தான் பிறக்கிறார்கள்.

ஆனாலும் நம்மைப் பராமரிக்கும் முறையிலும் அழகு தங்கியுள்ளது. உங்களது அழகைப் பரா மரிக்கும்போது பின்வரும் நான்கு விடயங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்.

**உடற்பயிற்சி**

உங்கள் உடல் பருமனாக இருந்தாலும் சரி, ஒல்லியாக இருந்தாலும் சரி கண்டிப்பாக உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

**உடலமைப்பு**

ஒவ்வொருவரும் தமது உட லமைப்புக்குப் பொருத்தமான உடைகளையே அணிய வேண்டும்.

**ஆளுமை**

ஆளுமையைப் பேணுவது மிகவும் முக்கியம். பேச்சு, நடை போன்ற விடயங்களைப் பொது இடங் களில் அதிக கவனம் காட்டுவது அவசியம்.

**உணவு**

நாம் உட்கொள்ளும் உணவுகள், சில சந்தர்ப்பங்களில் உடல் அழகைக் கெடுத்துவிடும். பொருத்தமான, சுத்தமான உணவுகளை உண்ணுங்கள்.



...க்க அன்பளிப்பு : *சரவணன், கோலகுபுபாரு (Pusat Tuisyen Sri Maju - 019-3610014).*

படிப்பகம்

www.padippakam.com



# கட்டுவோம்! கட்டுவோம்!

"இந்திய மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் மஇகா கெடாவில் இந்தியர்களுக்குச் சொந்தமாக ஒரு மருத்துவக் கல்லூரியைக் கட்டும்"

"எஸ்.டி.பி.எம் வரை பயின்ற மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளதால் இந்திய மாணவர்களும் அக்கல்வித் தகுதியைப் பெற வேண்டும் என்னும் நோக்கில் ஈப்போ, பாரிட் புந்தார், சிகாமட் ஆகிய இடங்களில் தனியார் உயர் நிலைப்பள்ளிகளை மஇகா அமைக்கும்."

இடைநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து கொண்டு வருகிறது. தரமான இடைநிலைப்பள்ளிகளை அமைத்து இந்தியர்களை கல்வியில் மேம்பட்டவர்களாக மாற்றியமைப்போம்.

ஆரம்பப்பள்ளிகள், பாலர் பள்ளிகள், இந்தியர்களுக்காக நவீன வசதிகளுடன் கட்டி இந்திய சமுதாயத்தை முன்னேற்றுவோம்.

இப்படியாக அரசு ஒவ்வொரு முறையும் இந்திய சமூகத்தினரைக் கைவிடும்போது பாரிசானில் அங்கம் வகிக்கும் இந்தியரைப் பிரதிநிதிக்கும் ஒரே கட்சியான மஇகா சொந்தமாகக் கட்டுவோம், தனியாகக் கட்டுவோம், சமுதாயத்திடம் கையேந்தி நிதி திரட்டிக் கட்டுவோம் என்று கட்டடம் கட்ட ஆரம்பித்து விடுகிறது. சமீபத்திய எடுத்துக்காட்டு, 'தனியார் உயர்நிலைப்பள்ளிகள் கட்டுவோம்!' என்பதாகும்.

இறுதியில் எதைக் கட்டி, என்ன செய்வது? என்று தெரியாமல் விளித்துக் கொண்டிருக்கப்போகிறது இந்திய சமூகம்.

மலேசிய இந்தியத் தலைவர்களே! பல்கலைக்கழகம், தனியார் உயர்நிலைப்பள்ளிகள், பள்ளிக்கூடம் கட்டுதல் போன்றவற்றைக் கட்ட இந்திய சமுதாயம் உங்களை ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கவில்லை. கடந்த 45 ஆண்டுகளாக இதுதானே நடந்து கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் நீங்கள் எங்கள் பிரதிநிதியாக நீங்கள் அங்கம் வகிக்கும் அரசின் பொறுப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா? ஜனநாயகத்தின் தன்மை தெரியாமல் இத்தனை ஆண்டுகளாக மந்திரிப் பொறுப்பில் எப்படி இருக்க முடிகிறது?

அரசின் பொறுப்பை உங்கள் தலையில் சுமந்து கொண்டு ஏழை மக்களின் வயிற்றில் அடிக்காதீர்கள். கட்டடம் கட்டுவதை நிறுத்தி விட்டு அரசிடம் இருந்து பெற வேண்டியதைக் கேட்டுப் பெறுங்கள். மக்களை நிம்மதியாக வாழ விடுங்கள். சீனர்கள் அரசாங்கத்திடம் இருந்து அவர்களுக்கான சலுகைகளையும் உரிமைகளையும் எப்படிப் பெறுகிறார்கள் என்பதைப் பாருங்கள்.

அவர்களைப் போல் வேகமாகவும் விவேகமாகவும் பணியாற்றி இந்திய சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்து வாருங்கள்!

நமது தேவைகளையும் உரிமைகளையும் அரசிடம் எடுத்துச் சொல்லி தேவையானவற்றைப் பெற முயற்சி செய்யுங்கள்.

அதற்குத்தானே நாம் உங்களைத் தேர்ந்தேடுத்தோம்!

நீங்கள் கட்டப் போகும் கட்டடங்களுக்கான பணத்தைப் பொதுமக்கள் கொடுத்துக் கொடுத்து தமது சமாதியைக் கூடக் கட்ட முடியாமல் நடுத்தெருவில் நிற்கப் போகிறது இந்திய சமுதாயம்.

அப்படியான ஒரு வருங்கால இந்தியனைத்தான் நாம் சந்திக்கப் போகிறோமா?

சிந்திப்போமா?

MAYLEAD நிறுவனத்தின் சமூக அறவாரியம்.
MAYLEAD (M) BERHAD
(257252-D)
SUITE-BG-01, PJ INDUSTRIAL PARK, JALAN KEMAJUAN SECTION 13, 46200 PETALING JAYA, SELANGOR.
TEL : 603 - 79569401 / 603 - 79569402 FAX : 603 - 79569329 / 603 - 79569330

இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பு. கதைகளில் இடம்பெறும் பெயர்கள் பாத்திரங்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.
EDITOR: MANYAM SINNAPPAN, Published by: SEMPARUTHI PUBLICATIONS SDN. BHD. (ROC. 409768-U)
Printed by: Visal Print Service, Kuala Lumpur.

படிப்பகம்

# விரைவு உணவகங்களின் உருவாக்கம்

வெளிநாட்டு விரைவு உணவுத் தொழிற் துறை சங்கிலித் தொடர் வாணிபங்களாக பெருமளவில் வளர்ந்து வருகிறது.

விரைவு உணவுகளை மலேசியர்களும் விரும்பி உண்கின்றனர். அதில் மெக்டோனல்ஸ், கே.ஹெவ்.சி. ஸ்தாபாக் கோவ்ஹி மற்றும் பெகர் கிங் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பலர் இந்த உணவு வகைகளை விரும்பி உட்கொண்ட போதிலும் ஒரு சிலர் மட்டுமே இவற்றின் வளர்ச்சியின் சரித்திரத்தைத் தெரிந்து வைத்துள்ளனர்.

UK சார்ந்த மின்வலைகள் இவ்வகை பிரசித்திப்பெற்ற வணிக முத்திரைகளின் விவரங்களை வெளியிட்டுள்ளனர். அந்தந்த அகப்பக்கங்களை நாடி விவரங்களை, படித்து தெரிந்து கொள்ளலாம்.

**கே.ஹெவ். சி - www.KFC.com**

கேனல் ஹோலன் சன்டர்ஸ் (1890 - 1980) "கை சப்பும் அளவிற்கு ருசியானது" என்ற சுலோகத்தைக் கொண்ட கெந்தாக்கி கோழிப் பொரியலை அறிமுகப்படுத்தி உலகப் பிரசித்திப் பெற்றார்.

இவர் சமயற்கலையை தனது தாயிடம் கற்றுக் கொண்டார். கெந்தாக்கி கோழிப் பொரியல் உணவகத்தை தொடங்கும் முன்பு இவர் பல பணிகளையாற்றியுள்ளார். தோட்டக்காரர், தீயணைப்பாளர் மற்றும் வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளராகவும் இருந்திருக்கின்றார்.




சன்டர்ஸின் சமையல் திறமையைப் பாராட்டும் பொருட்டு கெந்தாக்கி நகரின் அதிபர் ரூபி ஒளவ்வூன். சண்டர்ஸின் 45 வயதில் "கெந்தாக்கி கேனல்" என்ற சிறப்பு விருதை வழங்கி கௌரவித்தார். சன்டர்ஸ் தனது 65 வயதில் பிரசித்திப்பெற்ற 11 வகை மூலிகையும் மற்றும் நறுமணப் பொருட்களையும் கொண்ட கோழிப் பொரியல் சமயற் குறிப்பை கண்டுப் பிடித்தார். இப்படித்தான் கே. ஹவ்.சி தொடங்கியது.

**மெக் டோனல்ஸ் - www. mcdonalds.com**

மெக்டோனல்ஸ் இரண்டு சகோதரர் களின் உருவாக்கமாகும். அவர்கள் மெக் மற்றும் டிக் ஆவர். இருப்பினும், இவ்வளவு பெரியளவில் மெக் டோனல்ஸ் வளர்ச்சி யடைய இவர்களின் சக தொழில் பங்குதாரராகிய ரெமன் கிரேக்தான் உறுதுணையாக இருந்திருக்கின்றார்.

கிரேக் தனது முதல் மெக்டோனல் உணவகத்தை டெஸ் பிளேனஸ், இல்லிரோயஸில் 1955-ல் நிறுவினார். அதன் முதல் நாள் வருமானம் மட்டும் US 366.12 ஆகும். இந்த உணவகம் தற்சமயம் செயல்படவில்லை. அதனை ஒரு கண்காட்சி சாலையாக மாற்றியமைத் துள்ளனர். இங்கு பலவித கைவினைப் பொருட்களும், நினைவுச் சின்னங் களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் பலகலவை கருவியும் அடங்கும்.

கிரேக் பலகலவை கருவியைக் கொண்டுதான் பால் பனிக் குழைவு செய்து விற்றார்.

நவீன தொழிற்நுட்ப கருவி களின் பயன்பாட்டே மெக்டோனல்ஸ் சாதாரண நிலையிலிருந்து உலகளவில் புகழ்பெற்ற விரைவு உணவகமாக வளர அடிப்படைக் காரணமாக விளங்கியது. ரோனல் மெக்டோனல்தான் "பிக் மெக்"கை அறிமுகம் செய்தார்.

உலகளவில் தற்பொழுது மெக்டோனல்ஸ் 121 நாடுகளில் இயங்கி வருகின்றது.

**ஸ்தாபக்ஸ் கோவ்ஹி -www.Starbucks.co.jp.**

1971ஆம் ஆண்டுகளில் "ஒஸ்தின்பவர்" என்ற நகச்சுவைத் திரையில் வெளிவந்த திறந்த வெளி சங்கிலித் தொடர் உணவகங்கள் சிறிய அளவில் சீட்டல் பைக் சந்தையில் அறிமுகமாகத் தொடங்கியது.

சில்லறை செயல்பாட்டு விற்பனை இயக்குனராக பணியில் அமர்ந்த ஹாவட் ஸ்கல்ட் செயற்கரிய மாற்றங்களைச் செய்தார். அதாவது உணவு மட்டும் விற்கப்பட்ட மையத்தில் காப்பியும் சேர்த்து விற்கத் தொடங்கினார்.

இத்தாலி நாட்டிற்குச் சென்ற ஸ்காட், மலான் என்ற ஊரில் கோப்பி பானக் கடை களுக்கு உள்ள வரவேற்பைக் கண்டு வியந்து போனார்.

இங்குள்ள கடை முதலாளிகளை சீட்டலில் அமைந்துள்ள தனது கடைக்கு வந்து காப்பியை ருசிக்கச் செய்தது மட்டுமின்றி அவரது வியாபார முறையையும் ஏற்கும்படி செய்தார்.

இத்தகைய அனுபவங் களே ஸ்தாபக்ஸ் காப்பி கம்பெனி பிரசித்திப் பெற வித்திடுவதாக அமைந்தது. 1985ல் சீட்டல் என்ற ஊரில் இது தொடங் கியது.

**பெகர் கிங் - www. fieldstonerestaurants.com**

பெகர் கிங் 1954ஆம் ஆண்டு மயாமி, ஹ்விலோரிடா என்ற நகரில் தொடங்கியது. கடந்த 39 ஆண்டுக்குள் சுமார் 11,435 கடைகளாகப் பெருகி ஐம்பத்து ஏழு நாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மெக்டோனல்ஸை அடுத்து இரண்டாவது மிகப் பெரிய சங்கிலித் தொடர் விரைவு உணவு ஜாம்பவனாக விளங்குகின்றது.

1967-ஆம் ஆண்டு பில்ஸ் பெரி நிறுவனத்தின் முயற்சியில் மினிபோலிஸ் மினிஸ்தோ என்ற ஊரில் பெகர் கிங் தொடங்கப்பட்டது.▼

# மேதினம் கொண்டாடிய தொழிலாளர்கள் கைது!

### புகார் செய்யவந்த இரண்டு தொழிலாளரும் கைது!








தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதற்காகத் தலைநகர் வந்த 700க்கும் அதிகமான தொழிலாளர்கள் துவாங்கு அப்துல் ரஹ்மான் சாலையில் இருந்து KLCC இரட்டைக் கோபுரம்வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இப்பேரணி சட்டவிரோதமானது எனக்கூறி இரண்டு பெண்கள் உள்பட 17 பேரைக் கைது செய்து போலீசார் தடுப்புக் காவலில் வைத்தனர். போலீசாரின் இக்கைது நடவடிக்கை சட்டத்துக்குப் புறம்பானது எனக் கூறி சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையமான டாங் வாங்கி போலீஸ் நிலையத்தில் தொழிலாளர்களுக்கு எதிராகச் செயல்பட்ட போலீஸ்காரர்களுக்கு எதிராகத் தோட்ட மக்கள் ஆதரவுக் குழு போலீஸ் புகார் ஒன்றைச் செய்தது.

தொழிலாளர்கள் மேற்கொண்டது ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான ஊர்வலம் என்றும் தங்களைக் கைது செய்தது எந்த விதத்திலும் நியாயமில்லை என்றுங்கூறி 16-05-2002 அன்று டாங் வாங்கி போலீஸ்நிலையம் முன்பு தங்கள் அதிருப்தியைத் தொழிலாளர்கள் வெளிப்படுத்தினர்.

"அநீதிச் சங்கிலியை அறுத்து விடுங்கள்" என்னும் வாசகங்களைக் கொண்ட பதாகையைக் கைகளில் ஏந்த வேண்டாம் என்று போலீசார் விடுத்த எச்சரிக்கையைப் புறக்கணித்ததாக இரண்டு தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்தனர். இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தில் நாடு தழுவிய நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

எவ்வித ஆணையுமின்றித் தொழிலாளர்களைக் கைது செய்தமை, தொழிலாளர் ஆதரவுக் குழு உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு மிரட்டலை ஏற்படுத்தியது, அவர்களை ஏற்றிவந்த பேருந்து ஓட்டுநர்களைக் கண்டபடி ஏசியது, அதிகாரமற்ற வகையில் 17 பேரைக் கைது செய்து மறுநாள்வரை தடுப்புக் காவலில் வைத்தது, போன்ற போலீசாரின் நடவடிக்கைகள் நியாயமானதல்ல எனப் புகார் அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இச்செய்தியைக் கைது செய்யப்பட்ட17 பேரில் ஒருவரும் மலேசிய சோசலிசக் கட்சி(PSM) தலைமைச் செயலாளருமான எஸ். அருள்செல்வம் செய்திளாளர்களிடம் வெளியிட்டார்

கூட்டத்தில் இருந்தோரில் வயதானவர்கள், பெண்கள் என்றும் பாராது அவர்களைப் பிடித்துத் தள்ளியது., சிறுவர்களிடம் விசாரணை செய்தது போன்றவை முறையற்றது என்று 16 அரசு சார்பற்ற இயக்களின் ஆதரவோடு மேதினக் கொண்டாட்டக்குழு இப்புகாரை புக்கிட் அமான் போலீஸ் தலைமையகம் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(தமிழ்நேசன் - 17-05-2002)



ங்க அன்பளிப்பு : திரு. ரவி - கணக்காய்வாளர்


www.padippakam.com

படிப்பகம்


கைத்தொழில் ஒன்று போதும்
கைத்தொழில் ஒன்றைக்
கற்றுக் கொண்டால்
கவலையின்றி வாழலாம்!
சொந்த உழைப்பால்
சொந்தத் தொழிலில்
சொந்தமாய் வாழலாம்!
கைத்தொழில் கற்றுக்
கவலையின்றி வாழ்வீர்!
GOLDEN TRADING CO.
IMPORTERS EXPORTERS OF PULICAT SARONGS & SILK SAREES
NO. 5, JALAN TUANKU ABDUL RAHMAN, 50100 KUALA LUMPUR.
TEL: 03-26920340 FAX: 03-26984164


WE SERVE WITH SMILES IN
VARIETY OF VALUE - ADDED SERVICES
EMPEROR GLOBAL (M) SDN. BHD.
தலைமுறை வாழ...
கணினி யுகத்தின்
தலைமுறை இது!
நம்மின மாணவர்கள்
கணினிக் கல்விகற்க
ஆர்வமுடன் வழி காட்டுகிறோம்!
கணினிக் கல்வியே
எதிர்காலத்துக்கு வழிகாட்டும்
என உலகம் நம்புகிறது!
வரவேற்று வழிகாட்டக்
காத்திருக்கிறோம்!
EMPEROR GLOBAL (M) SDN. BHD.
NO: 270A, JALAN BATU UNJUR 7,
TAMAN BAYU PERDANA,
41200 KLANG, SELANGOR D.E,
MALAYSIA.
HOTLINE: 03-33232955/ FAX: 03-33233966
E MAIL:
emperorg@tm.net.my/ emperor_global@yahoo.com


மதுரா
MADURA STORE SDN. BHD.
WELCOME TO MADURA
MADURA STORE மதுரா ஸ்டோர்
Klang
No. 101, Jalan Tengku Kelana,
41000 Klang, Selangor.
Tel : 03-33739655 Fax : 03-33739699
No. 64, Jalan Tengku Kelana,
41000 Klang, Selangor.
Tel : 03-33739696 / 03-33739797
Ipoh
No. 47, Jalan Dato Onn Jaafar,
30300 Ipoh, Perak.
Tel : 05-2438797 Fax : 05-2437797
Seremban
No. 66 & 68, Jalan Yam Tuan,
70000 Seremban, Negeri Sembilan.
Tel : 06-7611996 Fax : 06-7611994
Penang
No. 114, 119, Penang Street,
10200 Penang.
Tel : 04-2636696 Fax : 04-2637696
Kuala Lumpur
No. 359, 2 1/2 mile off Jalan Ipoh, Sentul,
51200 Kuala Lumpur.
(Opp. Sri Thandayuthapani Temple)
Tel : 03-40419698
www.madura.com.my
email : madura@time.net.my


மின்னியல் உலகு!
கனவுகள் நனவாகும்
காலமிது!
உழைப்பும் முயற்சியுமே
உயர்வு தரும்!
காலத்தைப் போற்றிக்
கடமையைச் செய்தால்
எல்லோரும் -
இன்புற்று வாழலாம்!
2002
NITCOM Capital Bhd(Co. No. 565600 W)
No. 17B, Jalan Tandang, 46050 Petaling Jaya,
Selangor Darul Ehsan, Malaysia.
Tel: No. +603-77813933 Fax: +603-77831477

www.padippakam.com



# “இந்தியர் கூடாரம்”


-எர்ன்ஸ்ட் ஹெம்மிங்வே-

**எழுத்தாளர் பற்றி....**

**“1898-ல் சிக்காகோவில் பிறந்தவர் ஹெம்மிங்வே. பொதுவாகவே மக்கள் அவருடைய படைப்பில் காணப்பட்ட மதிப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். நமது வாசகர்களும் இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். பிறப்பு, இறப்பு மற்றும் வாழ்க்கையின் மீது படர்ந்திருக்கும் வன்மையான, கொடூர யதார்த்தங்களை இச்சிறுகதை பேசுகிறது. பிறப்பு, மரணம் பற்றி நாம் அறிந்து கொள்ள முயற்சிக்காமல் கூச்சத்துடனோ அச்சத்துடனோ விலகிக் கொண்டு விடுகிறோம். சில வாசகர்கள் இது போன்றதொரு விவரிப்பை இதுவரை உணராது இருக்கலாம். ஓர் இரக்கத்தையும் கதை எதைச் சொல்லியிருக்கிறதோ அதன் மீது ஒரு மரியாதையையும் வேண்டுகிறார். என்னுடன் நீங்களும் இவற்றை உணர்வீர்கள் என்று நம்புகின்றேன்”.**

- ஜிம் ஹன்டர், ஆங்கில ஆசிரியர் பிரீல்டோல் இலக்கணப் பள்ளி.

அந்த ஏரிக்கரையில் மற்றொரு விசைப்படகு வந்து நின்றது. அந்த இரண்டு இந்தியர்களும் காத்து நின்று கொண்டிருந்தார்கள். நிக்கும் அவனுடைய அப்பாவும் படகின் பின் பலகை மேடையில் ஏறியமர்ந்து கொண்டார்கள். இரண்டு இந்தியர் களும் படகைக் கரையிலிருந்து ஏரிக்குள் பிடித்துத் தள்ளிக் கொண்டே ஒருவன் ஓட்டத் திலேயே படகினுள் ஏறிக் குதித்தமர்ந்து துடுப்பைப் போட்டான். ஜார்ஜ் மாமா கூடாரத்துக்குச் சொந்தமான படகின் பின் மேடையில் அமர்ந்து கொண்டார். அந்த இளம் இந்தியன் அந்தப் படகைக் கரையிலிருந்து உந்தித் தள்ளி ஏரிநீரில் துடுப்பைப் போட்டான்.



அந்த இரண்டு படகுகளும் இருளில் புறப்பட்டன. நிக் மற்றொரு படகின் துடுப் போசையை பனிமூட்டத்தில் அவர்களுக்கப்பால் சிறு தூரத்திலிருந்து கேட்டான். அந்த இந்தியர்கள் இருவரும் துடிப்பான வெட்டும் வீச்சுக்களைப் போட்டு படகுகளை நகர்த்திச் சென்றனர். நிக் அவனுடைய அப்பாவின் கை அவனைச் சுற்றிக் கிடக்கச் சாய்ந்திருந்தான். தண்ணீர் மிகவும் சில்லிப்புடனிருந்தது. இருவரையும் வைத்துக் கொண்டு துடுப்புப் போட்ட அந்த இந்தியன் கடுமையாக உழைத்தான். ஆனால் மற்றவன், அந்த இளம் இந்தியன் அவனது படகை வேகமாய்த் துடுப்பிட்டு இவர்களைக் கடந்து கொஞ்ச தூரத்தில் பனிமூட்டத்தில் மறைந்தே விட்டான்.

“நாம எங்க போயிட்டிருக்கோம்பா?”, நிக் கேட்டான்.

“அந்த இந்தியர் கூடாரத்துக்கு. அங்க ஒரு இந்தியப் பெண் மணி ரொம்ப நோய் வாய்ப் பட்டிருக்கா”

“ஓ....”, நிக் கேட்டுக் கொண்டான்.

கரையில் அவர்களுடன் புறப்பட்டு வந்த மற்ற படகு கரையேறியிருந்தது. ஜார்ஜ் மாமா ஒரு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார், இருட்டில். ஜார்ஜ் மாமா இரண்டு இந்தியர்களுக்கும் சிகரட்டுகள் கொடுத்தார். அவர்கள் கரையிலிருந்து ஏறி நடந்து பனியில் நனைந்து ஈரம் தோய்ந்து கிடந்த புல்பாதையில் சென்றார்கள். அந்த இளம் இந்தியன் ஒரு அரிக்கனைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தான். பின்னர் அவர்கள் மரக்கூட்டங்களுக்குள் சென்றார்கள். பாதைத்தடம் உருவாகிக் கிடந்த புல்பரப்பில் சென்று ஒரு சாலைச்சந்திப்பை அடைந்தார்கள். அந்தச் சாலை அந்த மலைகளுக்குப் பின்புறமாக ஓடிக் கிடக்கிறது. சாலையில் நல்ல வெளிச்சமிருந்தது. இருபுறங்களிலு மிருந்த மரங்கள் கழிக்கப்பட்டிருந்தன. இளம் இந்தியன் கொஞ்சம் நின்று அரிக்கேனை அணைத்து விட்டான்.

அவர்கள் ஒரு வளைவைக் கடந்து வந்தபோது ஒரு நாய் ஓடிவந்து குரைத்தது. நாய்க்குப் பின்னால் தூரத்தில் மரத்தினாலான கூண்டுக்கூடாரங்களிலிருந்து விளக்குகள் மின்னின. அங்குதான் மரப்பட்டை உரிக்கும் கூலி இந்தியர்கள் வாழ்கின்றனர். மேலும் நாய்கள் அவர்களை நோக்கி ஓடிவந்தன. அந்த இரண்டு இந்தியர்களும் அவைகளை கூடாரப் பக்கம் நோக்கி விரட்டியடித்தார்கள். சாலைக்கு அருகிலிருந்த கூண்டு வீட்டின் ஜன்னலில் விளக்கு எரிந்தது. ஒரு வயதானப் பெண்மணி கதவருகில் ஒரு விளக்கைத் தூக்கிப் பிடித்தவாறு நின்றிருந்தாள்.

உள்ளே ஒரு மரத்தாலான பலகையின் மீது ஒரு இளம் பெண் படுத்திருக்கிறாள். கடந்த இரண்டு நாட்களாக அவளுடைய குழந்தையைப் பெற்றுவிட முயன்று கொண்டிருக்கிறாள். அந்த கூடாரப்பகுதியிலுள்ள அனைத்து மூதாட்டிகளும் அவளுக்கு உதவிக் கொண்டிருக்கின்றனர். அவளின் உயிர்வலி அலறல்களிலிருந்து விலகி ஓடிப் போய் ஆண்கள் சாலையிலமர்ந்து இருட்டில் புதைத்தபடி சப்தங்களை விரட்டுகின்றனர். நிக் மற்றும் அவனுடைய அப்பாவைத் தொடர்ந்து இரண்டு இந்தியர்களும் ஜார்ஜ் மாமாவும் குடிசைக்குள் நுழைகிறபோது அவள் ஊளையிட்டலறுகிறாள்.

கீழ்தட்டுப் பலகையில் ஒரு படுக்கை விரிப்பின் மீது அவள் கிடக்கிறாள். அவளது தலை ஒரு பக்கமாகத் திரும்பியிருக்கிறது. மேல்தட்டுப் பலகையில் அவளது கணவன் படுத்திருக்கிறான். அவன் மூன்று நாட்களுக்கு முன்னர்தான் அவனுடைய காலை மரம்வெட்டும்போது கோடாரியால் வெட்டிக் கொண்டு விட்டான். அவன் படுத்திருந்தபடியே புகைத்துக் கொண்டிருந்தான். அந்த அறை மிக மோசமாக நாற்றமடித்தது.

நிக்கினுடைய அப்பா மண்ணெண்ணை அடுப்பில் கொஞ்சம் தண்ணீர் கொதிக்க வைக்கக் கூறினார். அது சூடாகிக் கொண்டிருக்கிற வேளையில் நிக்கிடம் அவர் பேசினார்.

“இந்தப் பெண்மணி ஒரு குழந்தை பெறப் போகிறாள், நிக்”

“எனக்குத் தெரியுது” நிக் மெதுவாகச் சொன்னான்.

“உனக்குத் தெரியாது. இங்க பாரு என்னை. அவள் எப்படிப்பெறப் போகிறாளென்றால் இம்சையினூடே பெறப் போகிறாள். It is called being in labour. இந்தக் குழந்தை பிறந்துவிட விரும்புகிறது. அவளும் அது பிறக்கவே விரும்பு கிறாள். அவளுடைய எல்லாத் தசைகளும் சேர்ந்து அந்தக் குழந்தையை பெற்றெடுக்க முயற்சிக்கின்றன. அதுதான் அவள் அலறிக் கத்தும் போது நடந்து கொண்டிருக்கிறது.”

“அப்படியா?” அப்பொழுது அந்தப் பெண் சப்தமிட்டமுதாள்.

“ஓ..... அப்பா அவளுக்கு ஏதாவது கொடுத்து அவள் சப்தமிடுவதை நிறுத்துங்களேன்”

“முடியாது. நான் அனஸ்தடிக் ஏதும் கொண்டு வரல”, அவனுடைய அப்பா சொன்னார்,” அலறல்கள் முக்கியமில்ல. நான் அதக் கேக்கிறதுமில்ல.” மேல்தட்டில் படுத்துக் கிடந்த அவளுடைய கணவன் சுவரை நோக்கி உருண்டான். அந்த வயதானப் பெண்மணி மருத்துவரிடம் நகர்ந்து வந்து தண்ணீர் கொதித்து விட்டதைத் தெரிவித்தாள். நிக்கினுடைய அப்பா குசினிக்குள் சென்று பாத்திரத்திலிருந்த கொதிநீரில் பாதியை வேறு ஒரு குழிந்த பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டார். கொதி - பாத்திரத்திலிருந்த மீத நீரில் அவர் தன்னுடைய கைக் குட்டையில் மடித்து எடுத்து வந்திருந்த ஏதோ சில பொருட்களைப் போட்டார். “அவைகள் வேக வேண்டும்” என்று சொல்லிக் கொண்டார். மற்றொரு குழிந்த பாத்திரத்தில் கொட்டி வைத்த நீரில் கைகளை நனைந்தபடி கொண்டு வந்திருந்த வழலைக் கட்டியில் தோய்த்துப் பிசைந்தார். நிக் அவருடைய தந்தை வழலையின் நுரையுடன் கைகளைத் தேய்த்துக் கழுவுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பா ஜாக்கிரதையுடனும் சிரத்தையுடனும் கைகளை நன்றாகக் கழுவிக் கொண்டே நிக்குடன் பேசிக் கொடுத்தார்.

“இங்க பாரு நிக். குழந்தைகள் பெரும்பாலும் தலை முதலில் வெளிவந்துதான் பிறக்க வேண்டும். ஆனால் சில நேரங்களில் அப்படி நடக்கிறதில்லே. அப்படி நடக்காத போது எல்லாருக்கும் ஏராளமான தொல்லைகள் கொடுத்துடுது. நான் ஒருக்கால் இந்தப் பெண்மணிக்கு அறுவை செய்யும்படி நேரிடலாம். இன்னும் கொஞ்ச நேரத்துல நாம தெரிஞ்சுக்குவோம்.”

அவரது கைகள் சுத்தமாக இருப்பதில் திருப்தி வந்தபிறகு அவர் வேலையைத் துவங்கினார்.

“அந்த படுக்கை விரிப்பை கொஞ்சம் பிடிச்சி இழுக்கிறீங்களா மிஸ்டர் ஜார்ஜ்?”

“நான் அத தொடமாட்டேன்”, ஜார்ஜ்.

பிறகு அவர் அறுக்கத் தொடங்கியவுடன் ஜார்ஜ் மாமாவும் மற்ற இரண்டு இந்தியர்களும் அந்தப் பெண்ணை அசையாமல்

## வலிமிகாதது

- கோ. முனியாண்டி -



*வியனுலகப் பறவை ஊர்ந்தே*
*விரித்ததோர் வெள்ளை வெளிச்ச*
*வலையொன்றில்*
*மிக லாவகமாய் புணருமந்தச்*
*சிலந்தியின் எச்சத்தில்*
*மடியும் உயிர் மயிர்கள்.*

*ஒளிர்ந்தாடும் ஒவ்வொரு*
*தாரகையுள்ளும்*
*குளிர்ந்தாடும் சந்திரமாட்சி*
*இடிமின்னல் மழையென*
*பார்த்தேங்க வைப்பதந்த*
*விட்ட விதானம்.*

*முலைகள் குலுங்க*
*சோரப் தமிழ் ஏக்கம் கொண்டு*
*மண் எங்கும் பெண் நடக்கக் காண்கையில்*
*அடடா! எங்கெங்கும் ஆனந்த வானிரிதான்*
*போடா.... போ.....*



பக்க அன்பளிப்பு : *திரு. அன்பரசன், தாமான் ஸ்ரீமூடா.*

படிப்பகம்